# வாகை

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார விழா சிறப்பு மலர் - 2010



## கலாசார விழா சிறப்பு மலர்

கோறளைப்பற்று வடக்கு
பிரதேச செயலக கலாசார விழா - 2010
கலாசார பேரவை
பிரதேச செயலகம் - வாகரை

# வருகை

## கலாசார விழா சிறப்பு மலர்
## 2010

வெளியீடு: - 03
கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
ASHRAMA & CHILDREN'S HOMES,
Ramakrishnapuram, Batticaloa, Sri Lanka.
00 94 065 - 2222752
E-mail rkmbat@eureka.lk

# ஆசிச் செய்தி

வாகை மலர்க.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவருளால் வாகரைப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் கலாசார விழாவுக்கும், அதன் ஆவணப்பதிவான "வாகை" சிறப்பு மலருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஒவ்வோர் இனத்துக்கும், பிரதேசத்திற்கும் தனித்துவமான பண்புகளும், சிறப்புகளும் இருக்கின்றன. அவை மேலெழுப்பப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

கடந்த மூன்று தசாப்த உள்ளக மோதல் பிரதேசமாக பல்வேறு துன்பங்களுக்கும் ஆட்பட்டுத் தியாகம் செய்த மக்களைக் கொண்டது. இவ்வாகரைப் பிரதேச செயலகப்பிரிவு. அதன் தளர்வு நிலை அகன்று புதிய வீச்சோடு செயற்படும் காலமாக இன்றைய நிலையைப் பார்க்க முடியும். அவ்வகையில் அதன் வளமூட்டும் செயல்களாக இத்தகைய நிகழ்வுகள் அவசியப்படுத்தப்படுகின்றன. அதனை முன்னெடுக்கும் பிரதேசசெயலாளரும் அதன் உத்தியோகத்தர்களும் கலாசாரப்பேரவை உறுப்பினர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவ்விழாவும் வாகை சிறப்பு மலரும் இம்மக்களின் வாழ்வியலில் சிறப்புத்தடங்களை உருவாக்கி அதன் மற்றொரு வீச்சான பாச்சலுக்கு எடுத்துச் சென்று புது வாழ்வு பெற இறையருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

விழாவும் மலரும் இனிதே நிறைவுற வாழ்த்துகிறோம்.

**இறைபணியில்**
**சுவாமி அஜராத்மானந்தா**
**24.06.2010**

# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் வருடம் தோறும் வெளிவருகின்ற கலாசார சிறப்பு நூல் வாகை ஆகும். 'வாகை' என்பது வாகரைக்கு சிறப்பு பொருந்திய பெயராகவும், வெற்றியினை தேடித்தருகின்ற ஒன்றாகவும் இருந்து வருகின்றது.

எமது பிரதேச மக்களின் கலை கலாசாரத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒரு ஆவணமாக எமது வாகை நூல் அமைகின்றது. சகல வளங்களையும் தன்னகத்தே கொண்ட வாகரைக்கு வாகை மலர் மகுடமாக திகழ்வது சிறப்பு.

மக்களின் கலை, கலாசாரம் என்பன அவர்களின் தனிப்பண்பினை வெளிக்காட்டுகின்றவையாக அமைகின்றன. அதுமட்டுமன்றி வாகரைப் பிரதேசம், வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டு தன் பெருமையினை இவ் உலகிற்கு வெளிக்காட்டும் ஒன்றாக அமைந்துள்ளமையும் இதன் சிறப்பென்றால் அது மிகையில்லை. இன்னோரன்ன சிறப்புக்களால் வாகையும் வாகை பெற்று விளங்கிட வாழ்த்துகின்றேன்.

"கலையுணர்வு நிறை வாழ்வு
எம் மாந்தர்களின் பொக்கிஷம்"

**S.R. ராகுலநாயகி**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**வாகரை.**


# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவிருக்கும் கலாசார விழாவையொட்டி வெளியிடவிருக்கும் "வாகை" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வாகரைப் பிரதேசமானது இயற்கை எழில்கொஞ்சும் வளங்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. இப்பிரதேசம் செழித்தோங்க அப்பிரதேச மக்கள் கலாசாரங்களை பிரதிபலிக்கக் கூடியவகையில் உணர்வை வெளிக்கொணரும் "வாகை" எனும் சிறப்பு மலர் மிளிர்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இப்பிரதேச மக்களது பாரம்பரியங்களும் ஆக்கமுயற்சிகளும் வரலாற்று ஆவணமாக பதியப்படக்கூடிய "வாகை" சிறப்பு மலர் வெளியீடானது வெற்றிவாகை சூட வாழ்த்தினை பதியக்கிடைத்ததையிட்டு பெருமிதமடைகின்றேன். மேலும் இவ் "வாகை" மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் அவரது கலாசார பேரவை குழாமிற்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***சு. அருமைநாயகம்,***
***அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலாளரும்,***
***மாவட்ட செயலகம்,***
***மட்டக்களப்பு.***



# வாழ்த்துச் செய்தி

கடல்வளம் மிக்க மட்டுமாநகரில் கோறளைப்பற்று வடக்கேயும் வெருகலம்பதி முருகன் ஆலயத்தினை அண்மித்தும் வாகரை பிரதேசம் அமையப்பெற்றது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். கடலும் கடல் சார்ந்த நிலப்பரப்பை கொண்டமைவதால் அங்கு வாழும் மக்களும் அதனோடு இணைந்த பண்பாட்டு விழுமியங்களை அமையப்பெற்றனவாகவுள்ளனர்.

பண்பாடு மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததொன்றாகும். அதே போல் இலக்கியமும் காலத்துக்கு காலம் மனித சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகும். இவற்றை மேம்படுத்தும் வகையிலும் ஊக்குவிக்கும் நோக்குடனும் ஒவ்வொரு வருடமும் பிரதேச செயலகங்களினால் இலக்கிய விழாவும் மலர் வெளியீடும் செய்து வருகின்றமை பெருமைக்குரியவிடயமாகும்.

இவ்வருடம் வாகரை பிரதேச செயலகப்பிரிவினால் நடத்தவிருக்கும் கலாசார விழா சிறந்த முறையில் நடைபெறும் என்பதில் ஐயமில்லை. விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் வாகை மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அதே போல் இவ்விழாவுக்கு முன்னின்று செயற்படுகின்ற பிரதேச செயலாளர் கலாசார உத்தியோகத்தர் பிரதேச கலாசார சபையினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

**உதவிப்பணிப்பாளர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
**கல்வியமைச்சு**
**கிழக்கு மாகாணம்.**

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

வாகரை பிரதேச கலாசாரபேரவையினால் கலாசார விழாவினை முன்னிட்டு மூன்றாவது தடவையாக வாகை சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது. இதில் உள்ள ஆக்கங்களில் பெரும்பாலானவை வாகரை பிரதேச எழுத்தாளர்களினால் எழுதப்பட்டவையாகும். இந்நூல் வாகரை எழுத்தாளர்களது ஆக்கங்களை வெளியிடும் ஒரு சாதனமாக உள்ளது எனலாம். இக்கலாசார விழாவில் ஒவ்வொரு வருடமும் பிரதேச மட்டத்தில் கலைஞர்கள் தாம் ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப்படுகின்றார்கள். வாகரை பிரதேசமானது பின் தங்கிய பகுதியாக காணப்பட்டும் பிரதேச கலைஞர்கள் பல இன்னல்களை எதிர்நோக்கிய போதும் வாகரை பிரதேச கலைஞர்களை தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு இவ் கலாசார விழாவானது. களம் அமைத்து கொடுத்துள்ளது எனலாம். இதில் இடம்பெறும் கட்டுரைகள், வாகரை பிரதேசத்தினது வரலாறுகளையும் மக்களது வாழ்வியல் கோலங்களையும் கலை கலாசார விழுமியங்களையும் சான்றுப்படுத்தும் ஆவணப்படுத்தும் ஒரு நூலாக உள்ளது. ஏனைய பிரதேசங்களை காட்டிலும் வாகரையில் கடல் வளமும் நில வளமும் அதிகளவில் உள்ளது இவற்றுடன் மக்களின் வாழ்வியல் கோலங்களும் பின்னிப்பிணைந்திருப்பதனை காணலாம்.

இம்மலர் வெளியீட்டிற்காக அனைத்து உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய பிரதேச செயலாளர் உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பதில் உதவி பிரதேச செயலாளருக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் இம்மலர் வெளியீட்டிற்காக ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் மற்றும் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றுவதற்கு ஊக்கமளித்த ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் நிதியுதவிகளை வழங்கிய **World vision** நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*திரு. ப. சிவராம்*
*கலாசார உத்தியோகத்தர்.*

## கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவை.

01. தலைவர் : செல்வி. S.R. ராகுலநாயகி
பிரதேச செயலாளர்

02. உபதலைவர் : திரு. S. ராஜ்பாபு
பதில் உதவி பிரதேச செயலாளர்.

03. பொருளாளர் : திரு. S. ரூபாகரன்
கணக்காளர்.

04. இணைப்பாளர் : திரு. R. ஜதீஸ்குமார்
உதவி திட்டமிடல் பணிப்பாளர்.

05. செயலாளர் : திரு. P. சிவராம்
கலாசார உத்தியோகத்தர்.

## குழு உறுப்பினர்கள்

01. திரு. வை. உம்முனி – அண்ணாவியார், கொக்குவில், கிரிமிச்சை
02. திரு. க. இளையதம்பி – அண்ணாவியார், கண்டலடி, வாகரை
03. திரு. க. செல்லத்தம்பி – அண்ணாவியார், பால்சேனை
04. திரு. மு. நவரட்ணராஜா – அதிபர்,
வம்மிவட்டவான் வித்தியாலயம்.
05. திரு. கா. இராசரத்தினம் – அண்ணாவியார், சின்னத்தட்டுமுனை, வாகரை.
06. திரு. அ. ஜெயக்குமணன் – ஆசிரியர், கட்டுமுறிவு வித்தியாலயம்.
07. திரு. எஸ். சிவசுதன் – ச. அ. உ. பிரதேச செயலகம், வாகரை.
08. திரு. மு. காளிக்குட்டி – அண்ணாவியார், வட்டவான் மேற்கு.
09. திரு. வை. அருணாசலம் – விச வைத்தியார், பால்சேனை
10. திரு. க. ரூபன் – கலைஞர், கதிரவெளி.
11. செல்வி. ஜீ. ஸ்ரீப்பிரியா – பிரதேச செயலகம், வாகரை.
12. திரு. எஸ். இராசரெத்தினம் – ச. அ. உ, பிரதேச செயலகம், வாகரை.
13. செல்வி. ரெ. கலைவாணி – பிரதேச செயலகம், வாகரை.
14. திரு.ரீ.சுதாகரன் – கி.சே.உத்தியோகத்தர்.
15. திருமதி. த. சுபாஜினி – பிரதேச செயலகம், வாகரை.

## மலர் ஆசிரியர்

திரு. P. சிவராம் – கலாசார உத்தியோகத்தர்.

# உள்ளே........

01. வாகரையில் வேடுவ இனத்தவர்கள் ........ 01

02. வண்ணமாதல் ........ 10

03. வாகரை ஸ்ரீ முத்துமாரியம்மன் வரலாறு ........ 13

04. மட்டக்களப்பு சமூக அமைப்பும் அச்சமூக அமைப்பின் சடங்கினதும் ........ 15

05. கண்டலடி கிராமம் ........ 22

06. வாகரை வாழ்வளம் (கவிதை) ........ 23

07. தமிழ் உரைநடை வளர்ச்சிப்போக்கு ........ 25

08. ராமுவின் காணாமல் போன மூக்கு ........ 28

09. பண்பாடு (கவிதை) ........ 31

10. இந்து சமயத்தின் வரலாறு பற்றிய ஓர் பார்வை ........ 32

11. கௌரவிக்கப்படும் கலைஞர்கள் ........ 39

12. நான் விரும்பும் சிறந்ததொரு சரித்திரம் ........ 43

13. வாகை சூடிய எழில் (கவிதை) ........ 46

14. மக்களைப் பலமூட்டுதல்........ 47

15. நட்பும் பிரிவும் (சிறுகதை) ........ 50

16. 1978ம் ஆண்டுக்குப் பின்னரான யாப்பு சீர்திருத்தங்களும் 18வது சீர்திருத்த ... 52

17. நாட்டின் உயிர் நாடி கலாசாரம் ........................................ 54

18. நிர்வாகமும் முகாமையும் ........................................ 57

19. உன்னால் முடியும் தம்பி நாடகம் ........................................ 59

20. சுந்தரி கல்யாணம் (வடமோடியில் அமைந்த நாட்டுக்கூத்து) ........................................ 63

21. தொலைக்காட்சியின் பயன்பாடுகளும் துஸ்பிரயோகங்களும் ........................................ 69

22. ஊனம் ஊனம் தான் ........................................ 72

23. கல்வியே அழியாச் செல்வம் ........................................ 79

24. தமிழ் அன்னையைப் போற்றுவோம் ........................................ 82

25. அன்னையே (பாடல்) ........................................ 83

26. தாய்மை (சிறுகதை) ........................................ 84

27. இன்றைய சிறுவர்கள் ........................................ 86

28. அம்மா ........................................ 87

29. வறுமை ........................................ 89


30. வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் ஏற்போம் ........................................ 91

31. சிரிப்பும் அதன் உளவியல் உண்மையும் ........................................ 95

32. கலாசார போட்டி முடிவுகள் ........................................ 97

33. நன்றிகள் ........................................ 100

# வாகரையில் வேடுவ இனத்தவர்கள்.




**வா**கரைப் பிரதேசமானது பல்இன, மத, மொழி கலாசாரங்களை கொண்ட இடமாகவுள்ளது. இங்கு கூடுதலான பகுதிகளில் தமிழ் மொழியினை பேசும் மக்கள் வாழ்ந்து வருவதனை காணக்கூடியதாகவுள்ளது.

இப்பகுதிகளில் தம்மை வேடுவ இனத்தவர்கள் என அடையாளப்படுத்தி கொள்ளும் பிரிவினரும் உள்ளனர். இவர்கள் ஏனைய மக்களைப் போன்று இயல்பான வாழ்க்கை முறைகளையும் தமிழ் மொழியினையும் பேசுபவர்களாக உள்ளனர். இவர்கள் மகியங்கனைப் பகுதியில் உள்ள வேடுவர்கள் போன்று வில் அம்புகளுடன் காணப்படாவிட்டாலும் தாங்கள் இவ்வேடுவ வழியில் வந்தவர்கள் என தம்மை அடையாளப்படுத்தி கொள்கின்றனர். வாகரையின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வேடுவ இனத்தவர்கள் பரந்து வாழ்கின்றனர். பெரும்பாலானோர் தமிழ் மக்களுடன் இணைந்து கலந்து வாழ்கின்றனர். சிலர் வேறாக தனித்து வாழ்வதனையும் காணலாம். இவ்வேடுவ இனத்தவர்கள் தேன் எடுத்தல், வேட்டையாடுதல், கால்நடைவளர்ப்பு மற்றும் விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவதனை காணலாம். இன்றும் கூட இவர்கள் காடுகளுக்கு சென்று தேன் எடுத்தல் மற்றும் வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவதனை காணலாம்.

வாகரையில் காயாண்கேணி, மாங்கேணி, மதுரங்கேணி, குஞ்சன் குளம், பணிச்சங்கேணி, கண்டலடி, அம்மந்தனாவெளி, பால்சேனை, கதிரவெளி, கட்டுமுறிவு போன்ற இடங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வேடுவர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அவ் இனத்தவர்களுடன் கலந்துரையாடி இவர்கள் தங்களது இனம் தொடர்பாக என்ன கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுள்ளனர் என பார்ப்போம்.

வாகரையில் மதுரங்கேணி குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குஞ்சன் குளம் என்ற கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமமானது கிரிமிச்சை சந்தியில் இருந்து 12km தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் கல்வீடுகள் அமைந்திருப்பதனை காணலாம். இக்கிராமத்தில் வதியும் 46 வயதுடைய நல்லதம்பி வேலாயுதம் என்பவருடன் கலந்துரையாடியபோது இவர் பின்வருமாறு கூறுகின்றார். அவர் தான் இவ்வேடுவ இனத்தில் பிறந்தவன் என்றும் தனது பெற்றோர்களான சின்னத்தம்பி நல்லதம்பி, பத்தன் பொன்னம்மா ஆகியோருக்கு மகனாக மாங்கேணியில் பிறந்ததாக கூறுகின்றார். இவர் பின்பு சேனைப் பயிர்ச்செய்கைக்காக காடுகளை வெட்டி சேனைப்பயிர் செய்கையில் ஈடுபடுவதற்காக மாங்கேணியில் இருந்து குஞ்சன்குளத்திற்கு வந்ததாக கூறுகின்றார். தங்களது வதிவிடங்கள் குடியிருப்புகள் பற்றிக் கூறும் போது ஆரம்பத்தில்



காடுகள் பற்றை போன்றவற்றில் வசித்ததாகவும் பின்பு இலுக்கு புல்லினால் அமைத்த குடில்களில் வசித்ததாக கூறுகின்றார். இவர் தமது முன்னோர்கள் மரப்பட்டைகள் மூலமாக அமைத்த வீடுகளில் வசித்ததாக கூறுகின்றார். 07 வெயிலில் காயவைத்து வரித்து கட்டிய இரக்கு குடில்கள் 07 வருடத்திற்கு தாக்குப்பிடிக்கும் என கூறுகின்றார். இவ்வேடுவ இனத்தவர்கள் எவ்வாறு இப்பகுதிக்கு வந்தார்கள் என்பது தொடர்பாக கேட்டபோது அதாவது மகியங்கனை பகுதிகளில் இருந்து இலசிங்க வன்னியன் என்ற வேடுவ இனத்தவர் காட்டு வழியாக மாங்கேணி கார்முனைக்கு வந்ததாகவும் (இது எக்காலப்பகுதியில் இடம் பெற்றது என சரியாக தன்னால் கூறமுடியாது என கூறுகின்றார்) அப்போது அவர் நீர் தாகமெடுத்து நீர் அருந்திய இடம் தற்போதும் இலசிங்க ஊற்று என அழைக்கப்படுவதாகவும் கூறுகின்றார். இவ் இலசிங்க வன்னியான் மூலமாகவே இப்பகுதியில் வேடுவ இனத்தவர்கள் தோன்றியதாகவும் தாங்கள் வேளான வேடுவர் என தங்களது இனத்தினை அடையாளப்படுத்தி கொள்கின்றார். தாங்கள் விவசாயம், மீன்பிடி, தேன் எடுத்தல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுவதாகவும் வேட்டையாடுதலுக்காக நாய்களை பயன்படுத்துவதாகவும் கூறுகின்றார். இதற்கென வில் அம்புகளை தாங்கள் பயன்படுத்தவில்லை என்றும் தமது முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் கூறுகின்றார்.

விவசாயம் தங்களுக்கு ஆரம்பத்தில் தெரிந்திருக்கவில்லை என்றும் முஸ்லீம் விவசாயிகள் மூலமாகவே தாங்கள் இவற்றினை கற்றுக் கொண்டதாக கூறுகின்றார். திருமணம், மரணச் சடங்கு பற்றி கூறும் போது ஏனைய சமூகத்தினரால் கடைப்பிடிக்கப்படும் முறைகளையே தாமும் பின்பற்றுவதாகவும் திருமணமானது பெற்றோரினால் அல்லது பிள்ளை யாரையாவது விரும்பினால் திருமணம் முடித்து வைக்கப்படும் என்று கூறுகின்றார். தமது சமூகத்தில் கல்வியறிவு மட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது. எனவும் இதற்கான தேவைகள் பாடசாலை வசதிகள் குறைவாகவே இப்பகுதியில் உள்ளது எனவும் தற்போது பிள்ளைள் ஆர்வத்துடன் கல்வி கற்பதாக கூறுகின்றார். தமது இனத்திற்கு என தனியான அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என கூறும் இவர் தங்களது வாழ்வாதாரத்தினை வளப்படுத்தக் கூடிய திட்டங்கள் முன் வைக்கப்படவேண்டும் என கூறுகின்றார். அத்துடன் இப்பகுதில் மருத்துவமனை இல்லை என கூறும் இவர் மருத்துவ தேவைக்காகவும் பாம்பு போன்ற விஷ கடிகளாகலும் ஏற்படும் தேவைக்காக வாழைச்சேனை, வாகரை போன்ற பகுதிகளுக்கே செல்லவேண்டும் என கூறுகின்றார்.

இந்த வருடம் (2010) ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு தம்மானையில் உள்ள வேடுவத்தலைவர் மூலமாக எங்களுடன் அழைப்பு ஏற்படுத்தப்பட்டு தாங்கள் ஜனாதிபதியை சந்தித்ததாகவும் கூறுகின்றார். இதன் போது தமது பிரச்சினைகளை முன் வைத்ததுடன் வேடுவ மொழியில் பாடல்களை பாடிக்காட்டியதாகவும் கூறுகின்றார்.



இலுக்கு குடில்

அடுத்து மதுரங்கேணி குளத்தில் வசிக்கும் 75 வயதான கறுவல் காத்தமுத்து என்பவருடன் இவ்வேடுவ இனத்தவர்கள் தொடர்பாக கேட்டபோது இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவரும் வேடுவ வழியில் வந்தவர்களே என்று குறிப்பிடுகின்றார். தனது தந்தையான வீரக்குட்டி கறுவல் தாயான குமாரி என்போருக்கு நன்றாக வேடுவச் சிங்களம் தெரியும் என்றும் தனக்கு ஓரளவு தெரியும் என்றும் குறிப்பிடுகின்றார். தான் பிறந்து வளர்ந்தது பனிச்சங்கேணியில் என்றும் வன் செயல் காரணமாக இடம் பெயர்ந்து மதுரங்கேணி குளத்திற்கு வந்ததாக கூறுகின்றார். இக்காலப்பகுதியில் இலுக்குப் புல்லினால் அமைக்கப்பட்ட குடில்களிலே வசித்ததாகவும் தாங்கள் வேட்டையாடுவதலுக்கு நாய்களை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். உடும்பு பிடித்தல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டதாகவும் தனக்கு விவசாயம் தெரியாது எனவும் கூறுகின்றார். அக்காலத்தில் ஒல்லிக்காயை காயவைத்து இடித்து அதனை சோறு போன்று உண்டதாக குறிப்பிடுகின்றார்.

பின்பு மீன் பிடிப்பதற்காக கருங்கெயல் வேரினை தட்டி அதனை தண்ணீரில் விட்டால் மீன் இறக்கும் என கூறுகின்றார். இதன் மூலம் மீன் பிடித்ததாகவும் கூறும் இவர் திருமணத்தினை கசாது என குறிப்பிடுகின்றார். பெற்றோர் பேசிய மற்றும் பிள்ளைகள் விரும்பியவர்களை திருமணம் முடிப்பதாக கூறும் இவர் மரண வீடுகளில் 3ம் நாள் சோறு வைத்து நேர்ந்து ஆடுதல் இடம் பெறும் எனவும் தற்போது இவை இடம்பெறுவதில்லை எனவும் குறிப்பிடுகின்றார்.

இங்குள்ள அடுத்த கிராமம் கிரிமிச்சை ஆகும். இங்கு சுமார் 100 குடும்பங்கள் அளவில் உள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் வேடுவ இனத்தில் இருந்து வந்தவர்கள். இங்கு உள்ள 70 வயதான கணக்கன் குப்பையன் என்பவரிடம் இவ்வேடுவ இனத்தவர்கள் தொடர்பாக கேட்டபோது இவர் தானும் இவ் இனத்தினை சேர்ந்தவன் என்றும் தனது தாயாரின் பெயர் பொன்னம்மா என்றும் தனது தகப்பனாரின் சின்னான் கணக்கன் என்றும் கூறுகின்றார். தான் பிறந்தது பனிச்சங்கேணி என்றும் இங்கு தான் இரண்டு வருடங்கள் இருந்ததாகவும் பின்பு மாங்கேணிக்கு இடம் பெயர்ந்ததாகவும் கூறுகின்றார். தாங்கள் காட்டு வழியாகவே மாங்கேணிக்கு வந்ததாகவும் பின் கிரிமிச்சைக்கு இடம் பெயர்ந்ததாக கூறுகின்றார். அப்போது இங்கு சுமார் 15 குடும்பங்களை வசித்தாக கூறும் இவர் தாங்கள் காட்டுத் தொழில் வேட்டையாடுதல், தேன் எடுத்தல், சோளப்பயிர்ச்செய்கை போன்ற தொழில்களில் ஈடுபட்டதாக கூறுகின்றார். ஆரம்பத்தில் பனிச்சங்கேணி, மாங்கேணி, கிரிமிச்சை போன்ற இடங்களில் இலுக்கு வீடுகளே காணப்பட்டது. அத்துடன் மீன் பிடித்தலுக்கு வீச்சுவலை, கட்டுவலை போன்றவற்றினை பயன்படுத்தியதாகவும், பாய்களை இழைக்கும் போது அதற்கு கல்பன் புல் பயன்படுத்தப்பட்டதாக கூறுகின்றார். பாய்களை இழைப்பதில் வேடுவப்பெண்கள் மிகவும் ஈடுபாடுடையவர்கள் என்றும் கூறுகின்றார். இங்குள்ளவர்களுக்கு நோய்கள் ஏற்படும் போது




கணக்கன் குப்பையன்

அவற்றினை தெய்வத்தின் துணைமூலமாக குணப்படுத்தியதாகவும் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு மந்திரங்கள் சொல்லி குணப்படுத்தியதாகவும் கூறுகின்றார். இங்குள்ள காடுகளில் கரடிகள் காணப்படுவதாகவும் காயங்கள் ஏற்படும் போது அதற்கு நாவல், தண்ணீர் கொடிவேர் போன்றவற்றினை அரைத்து பூசியதாகவும் கூறும் இவர் தற்போது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கூறுகின்றார். தான் பாடசாலைக்குச் செல்லவில்லை என்றும் தற்போதுள்ள பிள்ளைகள் மிகவும் ஆர்வத்துடன் கல்வி கற்று வருவதாக கூறுகின்றார்.

கிரிமிச்சை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள அடுத்த கிராமமான பாம் கொலனியில் வசிக்கும் 78 வயதான வீரக்குட்டி சித்திரவேல் என்பவருடன் கலந்துரையாடிய போது இவர் இவ்வாறு கூறுகின்றார். பொதுவாக இங்குள்ள பெரும்பாலான குடும்பங்கள் இவ்வேடுவ இனத்தில் இருந்து வந்தவர்கள் என்றும் இங்குள்ள வேடுவ இனத்தவர்களை இவர் கரையோர வேடர்கள் என்றும் இவர்களுடைய வம்சம் குவேனியினுடையது என்றும் கூறுகின்றார். இவர்கள் பின்பு தமிழ் மக்களுடன் கலந்து கலப்பு வேடர்களாக உள்ளனர் என்றும் கூறுகின்றார். இங்கு ஆரம்பத்தில் இலுக்கு வீடுகளே காணப்பட்டதாக கூறும் இவர் தற்போதும் சில இலுக்கு வீடுகள் காணப்படுவதைக் காணலாம். அவரது தாயான வண்டன் அன்னம்மா தந்தையான சின்னத்தம்பி சீரக்குட்டி ஆகியோர் பாம் கொலனியில் வசித்து வந்ததாக கூறுகின்றார். தங்களது தொழில்களாக கூலிக்கு செல்வது காடுகளில் கிழங்கு எடுத்தல், தேன் எடுத்தல், சோளன் செய்கை, வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டதாக கூறுகின்றார். காட்டிற்கு வேட்டையாட செல்லும் போது பேய்கள் துணை நின்றதாக கூறுகின்றார். தனது தாய் தந்தைக்கு வேடபாசை தெரியும் என கூறும் இவர் தனக்கு வேடுவ சிங்களத்தில் உரையாட முடியுமென கூறுகின்றார். சுகயீனம் ஏற்படும் போது காட்டு வைத்தியம் செய்ததாகவும் இதற்கு ஆத்திப்பட்டை, சூரன்கொடி போன்றவற்றை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். காட்டுத் தொழில்களில் ஈடுபட்ட இவர்கள் பிற்காலத்தில் முஸ்லீம் விவசாயிகள் மூலம் விவசாயத்தினை கற்றுக் கொண்டதாக கூறுகின்றார். எப்போதாவது ஒரு முறையே குளிப்பதாகவும் இதற்கு 'சோப்' ஆக நெய் கொட்டையினை பயன்படுத்தியதாக கூறுகின்றார். தாங்கள் வழிபடும் தெய்வங்களாக இளந்தோல் பட்டானி, பராந்துருதெக்க, கம்பானை அழுயக்கா, கணேசு கணக பண்டார, எகரமுற்று பட்டாணி, கந்தும் முந்தும் பட்டாணி, கிரிமுந்து பட்டாணி போன்றவற்றை குறிப்பிடுகின்றார். கப்பல் தெய்வ சடங்குகளை செய்வதாக குறிப்பிடும் இவர் இதற்காக கப்பல்களை செய்வதாகவும் இதற்கு பிரம்புகளை பயன்படுத்துவதாக கூறுகின்றார். மோட்டுக்காட்டு வன்னியக்கோ, மாயக்கா பத்தினி தெய்யோ, லந்தோஸ் தெய்யோ போன்றவற்றை குறிப்பிடுகின்றார். இப்பகுதியில் வேடுவ சமூகமாக தங்களை இனங்காட்டி கொள்பவர்கள் இத் தெய்வங்களை வழிபடுவதாக கூறுகின்றார்.

வீரக்குட்டி சித்திரவேல்



பனிச்சங்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கோயில் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் 61 வயதான கறுவல் கந்தவனம் என்பவருடன் உரையாடிய போது அவர் வேடுவர்கள் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார். தனது தாயின் பெயர் நாகன் தங்கம்மா என்றும்

தந்தையின் பெயர் கணபதி கறுவல் என குறிப்பிடும் அவர் தான் பனிச்சங்கேணியில் பிறந்து வளர்ந்ததாக கூறுகின்றார். பனிச்சங்கேணியானது வேடுவ மொழியில் "திம்பிலகெனிய" என அழைக்கப்படுவதாகவும் இங்கு ஆரம்பத்தில் 08 குடும்பங்களே வசித்ததாகவும் அப்போது இங்கு வீரமரக்காடு இருந்ததால் இப்பகுதி வீரணத்தீவு என அழைக்கப்பட்டது எனவும் கூறுகின்றார். இங்கு ஆரம்பத்தில் வேதப்பள்ளி இருந்ததாகவும் இதில் வேதப்பாடத்தினை சித்தாத்துரை என்னும் அசிரியர் கற்பித்ததாகவும் தமிழ் மொழியினை அருளப்பு ஆசிரியர் போதித்ததாகவும் கூறுகின்றார். இப்பாடசாலையில் அக்காலப்பகுதியில் 5ம் வகுப்புக்கு மேல் இல்லை என கூறும் இவர் தான் 5ம் வகுப்பு வரை கற்றதாக கூறுகின்றார். இப்பகுதியில் உள்ள பெரும்பாலானோர் வேடுவ இனத்தவர்கள் என்றும் ஆரம்பத்தில் இங்கு இலுக்கு புல்லினால் அமைந்த வீடுகளிலேயே வசித்ததாக கூறுகின்றார். தாங்கள் ஆரம்பத்தில் சாக்கு, கச்சை போன்றவற்றை தமது ஆடைகளாக பயன்படுத்தியதாகவும் அக்காலத்தில் காடுகளை வெட்டி சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதாகவும் குறிப்பிடும் இவர் வேட்டையாடுதல், கிழங்கெடுத்தல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களில் கூடுபட்டதாகவும் குறிப்பிடுகின்றார். அக்காலத்தின் தேன் ஒரு போத்தல் 2 ரூபாவிற்கு விற்றதாகவும் இதனை ஓட்டமாவடி வியாபாரிகளுக்கு விற்றதாக கூறுகின்றார். இவ்வேடுவ இனத்தவர்கள் தங்களுக்கு நோய்கள் ஏற்படும் போது சடங்குகளை செய்ததாகவும் பேய் ஆடியதாகவும் கூறுகின்றார்.


கறுவல் கந்தவனம்

இதற்காக வன்னித்தெய்வம், மொக்காட்டுத் தெய்வம் போன்றவற்றை வழிபட்டதாக கூறுகின்றார். வெட்டுக்காயங்கள் ஏற்படும் போது கும்மளம் மரவேரினை பயன்படுத்தியதாகவும் கட்டு ஏற்பட்டால் அதற்கு பனம்பாசி, எரிக்கலம்பூ போன்றவற்றை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். உணவுக்காக சோளம் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதுடன் கட்டிளா, கவளை போன்ற கிழங்குகளை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். அத்துடன் வேட்டையாடும் போது மிருகங்கள் தங்களை தாக்க வரும் போது சத்தம் போடுதல், நெருப்பு கொள்ளி எரிதல், மந்திரம் துப்புதல் போன்றவற்றினை செய்ததாகவும் இதற்கு தாம் பயன்படுத்திய மந்திரம் இன்றும் உள்ளது என கூறுகின்றார். அக்கினியை முக்கவந்த அலகு திறவாத என்ற மந்திரம் இதனை சொல்லி துப்பிவிட்டால் மிருகங்கள் வாய் திறக்காது. தனது தாய் தந்தையர் தமிழ் மொழியிலே கதைத்ததாகவும் தமக்கு வேடுவச் சிங்களம் தெரியாது எனவும் கூறுகின்றார். இப்பகுதியில் உள்ள ஒரு சிலருக்கு வேடுவ மொழி தெரியும் என கூறுகின்றார். அதில் குறிப்பாக தம்பிபிள்ளை தம்பிராசா, கணபதி செல்லத்துரை, செல்லப்பா வண்டையா, போன்றோர் வேடுவ மொழியில் கதைக்க கூடியவர்கள் என கூறுகின்றார். இதனை வேடுவ சிங்களம் என குறிப்பிடுகின்றார்.

அடுத்து பால்சேனை கிராமத்தினைப் பார்ப்போம். பால்சேனையில் உள்ள பெரியசுவாமி ஆலய பூசகரான 67 வயதான கதிரகாமன் இராசரெட்ணம் என்பவருடன் உரையாடிய போது இவர்தான் பிறந்த காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் வேடுவ இனத்தவர்களே வசித்ததாக கூறுகின்றார். வெருகல் கோயிலின் 13ம் நாள் திருவிழாவிற்கு இங்கிருந்து வில் அம்புகளுடன்

செல்வதாகவும் இக்குழுவில் 15 பேர் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடுகின்றார். இது வேடுவ இனத்தினை அடையாளப்படுத்துவதாக குறிப்பிடுகின்றார். இவ்விழா பரம்பரை பரம்பரையாக செய்யப்பட்டு வருவதாக இவர் குறிப்பிடுகின்றார். ஆரம்பத்தில் 1943ம் ஆண்டுகளில் கடலோரமாக கிட்டத்தட்ட 40 -50 குடும்பங்கள் வசித்ததாக கூறுகின்றார். தான் கதிரவன்னியான் குடி என்றும் இது ஆதிவாசிகள் தொடர்பான மூத்தகுடி என்றும் குறிப்பிடுகின்றார். எங்களது பெற்றோர் தமிழ் மொழியிலேயே கதைத்தாலும் இதனால் எங்களுக்கு தமிழ் மொழியிலே தெரியும் என குறிப்பிடுகின்றார். தாங்கள் ஆரம்பத்தில் இலுக்கு ஓலைக்குடில்களிலேயே வசித்ததாகவும் குறிப்பிடும் இவர் தமக்கு வருத்தங்கள் ஏற்படும் போது பெரிய சுவாமி ஆலயத்தினை வழிபடுவதாக குறிப்பிடுகின்றார். தடிமல் ஏற்பட்டால் அதற்கு உளுவந்த மர இலையினை அரைத்து குடித்ததாகவும் புண்கள் ஏற்பட்டால் அதற்கு இலை மருந்துகளை பூசியதாகவும் குறிப்பிடுகின்றார். தமது தொழில்களாக வேட்டையாடுதல் இதற்கு மிருகங்களை சுருக்கு வைத்து பிடித்ததாகவும் மற்றும் கெப்பு குழல் துவக்குகளை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். அத்துடன் தேன் எடுத்தல் மற்றும் மீன் பிடித்தலுக்காக வீச்சு வலையினை பயன்படுத்தியதாகவும் குறிப்பிடுகின்றார். மேலும் சோளன், குரக்கன், மரவள்ளி, கவல, அல்ல, ஈச்சங்கிழக்கு போன்ற கிழங்கு வகைகளை இக்காலப்பகுதியில் உணவுக்காக பயன்படுத்தியதாகவும் நீர் எடுப்பதற்கு துருவுகளை பயன்படுத்தியதுடன் இக்காலப்பகுதியில் நாங்கள் கடலுக்கு செல்லவில்லை எனவும் ஆற்றுக்கே சென்றதாகவும் கூறுகின்றார். அடுத்து 67 வயதான கந்தையா வைரமுத்து என்பவர தான் 5ம் வகுப்பு வரை கற்றதாகவும் தனக்கு வேடுவச்சிங்களம் தெரியும் எனகூறும் இங்கிருந்து கட்டுமுறிவுக்கு குடும்பங்கள் சென்றதாக கூறுகின்றார். இன்று தாங்கள் விவசாயம் செய்வதாகவும் இதனை தமது பெற்றோர்கள் மூலமாக அறிந்து கொண்டதாகவும் குறிப்பிடுகின்றார். அத்துடன் மரண சடங்கினை பற்றி குறிப்பிடும் போது வேடுவ இனத்தவர்களுக்கென தனியான மரணச்சடங்கு உள்ளதாகவும் குறிப்பிடும் இவர் ஒருவர் இறந்தவுடன் காலையில் அவரை புதைப்பதாகவும் அன்று பின்னேரம் அரிசி எறிவதாகவும் கூறுகின்றார். 03ம் நாள் பொங்கல் வைப்பதாகவும் அன்று இறந்தவரின் ஆன்மா வாய் திறப்பதாகவும் கூறுகின்றார். 07ம் நாள் தொடக்கு முடித்தல் என்றும் அன்று பொங்கல் வைத்து வில் அம்புகளுடன் ஆட்டம் நடைபெறும் என்றும் கூறுகின்றார். இது தாங்கள் வேடுவ இனம் என்பதனை அடையாளப்படுத்தும் என்றும் கூறுகின்றார். அடுத்து இதே கிராமத்தில் வதியும், கதிர்காமன் வேலுப்பிள்ளை என்பவருடன் கதைத்த போது இவர் தான் 1937ம் ஆண்டில் பிறந்ததாகவும் தனது தகப்பன் கந்தப்பு கதிர்காமன் என்றும் தாய் வேலன் தெய்வானை என்றும் குறிப்பிடுகின்றார். தான் 6ம் வகுப்பு வரை கற்றதாகவும் ஆரம்ப கல்வியினை அம்மந்தனாவெளி வேதப்பள்ளியில் கற்றதாகவும் பின்பு பால்சேனை வித்தியாலயத்தில் கற்றதாகவும் கூறுகின்றார். பொதுவாக பால்சேனையில் 1940களில் சுத்தமாக வேடுவ இனத்தவர்களே வாழ்ந்தார்கள். இக்காலப்பகுதியில் கதிரவெளியில் வேடுவ குடும்பங்களும் தமிழ் குடும்பங்களும் இருந்தன என்று இவர் குறிப்பிடுகின்றார். தாங்கள் ஆரம்பத்தில் மீன்பிடி, தேன்எடுத்தல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டதாகவும் வேட்டையாடுதலுக்கு மருந்து துவக்குகளை பாவித்ததாகவும் இறைச்சியினை காயவைத்து விற்றதாகவும் குறிப்பிடுகின்றார். தங்களுக்கு விவசாயம் தெரியாது என்றும் இதனை கதிரவெளி மக்கள் மூலமாக அறிந்து கொண்டதாகவும் குறிப்பிடுகின்றார். ஆரம்பத்தில் இலுக்கு

புல்லினால் அமைந்த குடில்களில் வசித்ததாகவும் கடலோரத்தில் வாழ்ந்த மக்கள் ஓலை வீடுகளில் வசித்ததாகவும் கூறுகின்றார். மரணச்சடங்கு முறைகளை கூறும் போது அடக்கம் செய்து வந்தவுடன் சோறு வைத்து படைத்தல் ஆடுதல் போன்றன இடம்பெறும். 3ம் நாள் சோறு வைத்தல், இறந்தவர் பேய் போல ஆடுதல் இங்கு மூன்று கல் வைத்து பொங்கல் இடம்பெறும். 7ம் நாள் கடைசி முடிவடையும் இங்கு 7ம் சாடியில் கல்வைத்து பொங்கல் இடம்பெறும் இதன் போது வில் அம்புகளுடன் ஆட்டம் நடைபெறும். வில் அம்புகளை இங்கேயே தயாரிப்பதாகவும் கூறுகின்றார்.திருமணமானது தமிழ் முறையினைப் போலவே இடம்பெறுவதாக கூறுகின்றார். கதிரவெளியில் வசிக்கும் வேடுவ இனத்தவரான கதிரகாமர் தனக்கு மாமா என்றும் கூறுகின்றார். வேடுவ குடிகளில் மூத்த 1வது குடி கதிரவன்னியன் குடி என்றும் தான் இக்குடியிலேயே பிறந்ததாகவும் 2வது குடி இலசிங்க வன்னியான் குடியாகும். இது மச்சினன் மச்சினன் குடியாகும். இவ் இருவரும் சேர்ந்து வெருகல் விழா நடத்தியதாக கூறும் இவர் இக்காலப்பகுதியில் சிறு சிறு குடிகள் இருந்ததாகவும் இதனை மால் என குறிப்பிடுகின்றார்.

அடுத்து கதிரவெளி கிராமத்தில் அமைந்துள்ள பூதூர் எனும் பகுதியில் 24 வேடுவ குடும்பங்கள் வாழ்ந்து வருவதனைக் காணலாம். இங்கு வசிக்கும் பத்தன் சித்திராவி என்பவர் 1948இல் பிறந்தவர். அவரது தாய் பத்தன் வெள்ளைச்சி என குறிப்பிடுகின்றார். இவர்கள் முன் சோதையன் குளப்பகுதியில் வாழ்ந்ததாக குறிப்பிடுகின்றார். இவரது பெற்றோரும் இப்பகுதியில் வாழ்ந்ததாக


பத்தன் கதிர்காமர்

கூறுகின்றார். இவர்கள் காட்டுப்பகுதியில் வாழ்ந்ததாகவும் இலுக்கு மற்றும் ஓலை குடிசைகளில் வாழ்ந்ததாக கூறுகின்றார். இக்காலப்பகுதியில் தாங்கள் வேட்டையாடுதல், தேன் வெட்டுதல், மீன் பிடித்தல், வேளாண்மை தொழில் போன்றவற்றில் ஈடுபட்டதாக கூறும் இவர் இவ் சோதையன் குளக்கட்டுக்கு அப்பால் வேடுவகுடும்பங்கள் வசித்ததாகவும் கூறுகின்றார்.

அடுத்து இவரது அண்ணனான பத்தன் கதிர்காமர் என்பவருடன் கதைத்தபோது இவரும் சோளையன் குள கட்டுப்பகுதியில் வாழ்ந்ததாகவும் தாமும் இத்தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறுகின்றார். அத்துடன் இப்பகுதியில் ஏறக்குறைய 50 குடும்பங்கள் வசித்ததாகவும் இவர் குறிப்பிடுகின்றார். பின்பு யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்வினால் தாங்கள் வெருகல், கல்பட்டி காடுகளில் வாழ்ந்ததாகவும் அதன் பின்பே புதூர் கதிரவெளியில் குடியேறியதாகவும் குறிப்பிடுகின்றார். தனது அப்பா கதிரவன்னியன் குடியென குறிப்பிடும் இவர் வேடுவ மொழியில் நன்றாக உரையாடக் கூடியவராக உள்ளார். அத்துடன் தமது பரம்பரையானது யக்குர, கினிவதன, காண்டகாடு, முத்துக்கல்லு போன்ற இடங்களில் உள்ள வேடுவர்களின் வழிவந்ததே தனது பரம்பரை என இவர் குறிப்பிடுகின்றார். இவர்கள் மூலமாகவே தாங்கள் உற்பத்தியானவர்கள் என்றும் இதன்மூலமே தமக்கு வேடுவ மொழி தெரிய வந்தமைக்கு காரணம் என இவர் குறிப்பிடுகின்றார். அத்துடன் இறந்தவர்கள் தொடர்பாக கேட்டபோது ஏனைய வேடுவர்கள் போன்று தாமும் வேடுவ சடங்கு முறைகளை பின்பற்றுவதாகவும் இறந்து 3ம் நாளில் 3 பொங்கல் வைக்கப்படும் என்றும் இதில் இறந்தவர்கள் (உத்தையாட்கள் என இவர்கள் குறிப்பிடுவர்) வந்து பேசுவர் என்றும் தான் இறந்தமைக்கு என்ன காரணம் என குறிப்பிடுவர் என இவர் கூறுகின்றார்.

தற்போது தங்களுக்கு தொழில் இல்லை எனவும் வாழ்வாதார தொழில்களை தாங்கள் எதிர பார்ப்பதாகவும் இவர் கூறுகின்றார்.



குமாரவேல் நாகலிங்கம்

அடுத்த கட்டுமுறிவு கிராமத்தினை பார்ப்போம். இக் கிராமமானது பிரதான வீதியில் இருந்து மிக தொலைவில் உள்ளது. இங்கு வசிக்கும் குமாரவேல் நாகலிங்கம் வயது 66 என்பவருடன் இவ்வேடுவ இனத்தவர்கள் தொடர்பாக கேட்டபோது இவரது அப்பா குமாரவேல் அம்மா பத்திப்பிள்ளை என கூறும் இவர் தாங்கள் மக்கோன (கொழும்பு பகுதியில் உள்ளதாகவும்) வில் பிறந்ததாகவும் இவ் மக்கோணபகுதியில் வேடுவ இனத்தவர்கள் வசித்ததாகவும் கூறுகின்றார். பின்பு ஏறாவூர் களுவன்கேணிக்கு வந்ததாகவும் இங்கு சுமார் 50 குடும்பங்கள் அளவில் இப்பகுதியில் வசித்ததாகவும் கூறுகின்றார். தொழில் நிமித்தம் தாங்கள் கட்டு முறிவுக்கு வந்ததாகவும் இவர் கூறுகின்றார். இக்காலப்பகுதியில் இலுக்கு வீடுகள் மற்றும் பற்றைப்பகுதிக்குள் வசித்ததாகவும் கூறுகின்றார். வேட்டையாடுதல், தேன் எடுத்தல், கிழங்கு வகைகளை உணவுக்கு பயன்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டதாக கூறுகின்றார். இப்பகுதியில் 1967இல் 17 குடும்பங்கள் வசித்ததாகவும் கூறும் இவர் இங்கு தமிழ் மக்கள் பால்சேனை, கதிரவெளி, வம்மிவட்டவான், வாகரை போன்ற இடங்களில் இருந்து வந்து வசித்ததாக கூறுகின்றார். மரணசடங்கு, திருமணம் போன்றன தமிழ் மக்கள் போன்றே இடம் பெறுவதாகவும் இப்பகுதியில் காண்டக்காடு தொடர்புள்ள வேடுவர்கள் வசிப்பதாகவும் கூறும் இவர் இங்கு வனவேடர், வேடுவ வெள்ளாளர் போன்றோர் வசிப்பதாக கூறுகின்றார்.

அடுத்து இக் கிராமசேவகர் பிரிவில் உள்ள ஆண்டான்குளம், கிராமத்தில் 68 குடும்பங்கள் உள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் வேடுவ வெள்ளாளர் என இங்கு வதியும் விவேகானந்தன் சிவராசா கூறுகின்றார். அடுத்து இங்கு வதியும் நாகமணி ரஞ்சிதம் வயது 57 இவருடன் கதைத்தபோது இவர்தான் காண்டக்காடு பகுதியில் பிறந்ததாகவும் இது கந்தக்கடுவ என சிங்களத்தில் அழைக்கப்படுகின்றது. இவ் கண்டக்காடு பகுதியில் வசித்தவர்கள் அனைவரும் வேடுவர் என குறிப்பிடும் இவர் 1977 இல் இடம் பெயர்ந்து கட்டுமுறிவுக்கு வந்ததாகவும் கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் இருந்ததாகவும் கூறும் இவர் பின்பு அப்போது நீர்ப்பாசன திணைக்களத்தில் பொறியியலாளராக கடமையாற்றிய மரியசிங்கம் என்பவர் தங்களுக்கு ஓலை மட்டைகள் தந்து தங்களை களனியாமடு பகுதிக்கு குடியேற்றியதாகவும் கூறும் இவர் அதன் பின்பு இடம்பெயர்ந்து ஆண்டான்குள பகுதிக்கு வந்ததாக கூறுகின்றார்.

பொதுவாக நோக்கும் போது வாகரையில் உள்ள வேடுவ இனத்தவர்கள் ஒரே இடத்தில் இருந்து வந்தவர்கள் என கூறமுடியாது. ஒரு சிலர் வெருகல் பகுதியில் இருந்தும் வேறு சிலர் வெலிகந்த காண்டக்காடு பகுதியில் இருந்தும் வேறு சிலர் மக்கோன பகுதியில் இருந்து வந்ததாகவும் உள்ளனர். மதுரங்கேணி குளப்பகுதியில் வசிப்பவர்கள் இலசிங்க வன்னியன் குடியில் இருந்து வந்தவர்களாக உள்ளனர். அதே வேளை கதிரவெளியில் உள்ளவர்கள் காண்டக்காடு பகுதியில் இருந்து வந்தவர்களாக உள்ளனர். அத்துடன் இவர்கள் வெவ்வேறு காலப்பகுதியில் தமிழ் மக்களும்

வாகரைப் பிரதேசத்தில் வசித்து வந்துள்ளனர். ஒரு சிலர் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்வதனையும் காணக்கூடியதாகவுள்ளது.


வாகரைப் பிரதேசத்தில் உள்ள வேடுவர்கள் திருந்திய வேடர்களாகவே உள்ளனர். அத்துடன் இவர்கள் பெரும்பாலான பகுதிகளில் தமிழ் மக்களுடன் கலந்தே வாழ்கின்றனர். இவர்களது வாழ்க்கை முறைகள் பெருமளவில் மாறியுள்ளது. அத்துடன் இவர்களுக்கென சில தெய்வ வழிபாடுகளும் உள்ளன. இவை தொடர்பாக அறிந்தவர்கள் ஒரு சிலரே உள்ளனர். அத்துடன் மரணச்சடங்குகளிலும் வித்தியாசமான முறைகள் பின்பற்றப்பட்டு வருவதனைக் காணலாம். வாகரைக்கு எக்காலத்தில் வேடுவ இனத்தவர்கள் வந்தார்கள் என சரியாக கூறமுடியாதுள்ளது. சிலர் கண்டக்காடு, முத்துக்கல்லு போன்ற இடங்களில் உள்ளவர்களின் பரம்பரையே தாங்கள் என கூறுகின்றனர். வாகரையில் வேடுவர்கள் 1920 ஆம் ஆண்டுகளில் கண்டலடி பிரதேசத்தில் வாழ்ந்ததாக அறியப்படுகின்றது. இவ் இனத்தவர்களில் சிலர் வெளிநாடுகளில் சென்று தொழில் புரிவதோடு வேறு சிலர் வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதனையும் காணலாம். இவ் இனத்தினை சேர்ந்தவர்களில் சிலர் இன்னும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருவதனை காணலாம். இவர்களுக்கு முன்பு போல வேட்டையாடுதல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுவது இயலாமல் உள்ளது. அத்துடன் சிலர் தூண்டில் மீன் பிடித்தல் தொழில்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இதன்மூலம் இவர்களுக்கு கிடைக்கும் வருமானம் மிகக்குறைவாகவே உள்ளது. அத்துடன் ஒரு சிலர் தமது வேடுவ பரம்பரையினை தொடர்ந்தும் பேண வேண்டும் என கூறுகின்றனர். சிலர் ஏனைய மக்களைப் போன்று தாமும் வாழ்வதனையே விரும்புகின்றனர். அத்துடன் வாகரைப்பிரதேசத்தில் சாதாரண மக்களுக்கும் வேடுவ மக்களுக்குமிடையில் எவ்வித வேறுபாடுகளும் காட்டப்படுவதுமில்லை அத்துடன் காணப்படுவதுமில்லை. இயல்பாக ஏனைய மக்களைப் போன்றே வேடுவ மக்களும் இயங்குகின்றனர். இருந்தும் ஒரு சிலர் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். இவர்களது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லை. பெற்றோரும் எவ்வித அக்கறையுமின்றி இருப்பதினை காணலாம். பொதுவாக இவ் இனத்தவர்களின் வேண்டுகோள் யாதேனில் தங்களின் வாழ்வாதாரத்தினை வளர்ப்படுத்த கூடிய திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதாகும். இதன் மூலமே தங்களது வருமானம் உயர்ந்து வாழ்க்கை தரம் அதிகரிக்கும் என கூறுகின்றனர். தங்களது வருமான, வாழ்க்கைதர முன்னேற்றத்தின் மூலமே எங்களுக்கு என தனித்துவமான வாழ்க்கை முறைகளையும் பாரம்பரிய பண்பாட்டு கோலங்களையும் தொடர்ந்தும் பேண முடியும் என்பது இவர்களின் பெரும்பாலானோரின்கருத்தாக உள்ளது.

**P. சிவராம், B.A, P.G.D.E, H.N.D.A**
**கலாசார உத்தியோகத்தர்,**
**வாகரை.**

**பயனுள்ள ஒரு காரியத்தைச் செய்யும் போது தான் உண்மையான மகிழ்ச்சி நமக்கு உண்டாகும்.**

-விரிப்ரெட் கிரேன் பெல்-

# வண்ணமாதல்



இயல்பாக நாம் பிறக்கும் போதே அழகியல் சார்ந்த இரசனை உணர்வும் சூழல் சார்ந்த நயத்தல் மனப்பாங்கும், அவதானமும் கூடவே வளர்கிறது.

சிறுபிள்ளையாக வாழ்ந்த நாட்களில் முற்றத்து மண்ணில் இருந்தும் வீட்டைச்சுற்றியும் விரலாலும் தடியாலும் படம் கீறுவதும் வீட்டுப்பின் சுவரில் மாம்பிஞ்சாலும், கரியாலும் கீறுவதும், மேகங்களை பார்த்து யானை, குதிரை, காண்டாமிருகம் என உருவங்கள் கண்டு பிடிப்பதும், சந்திரனுக்குள் பாட்டியையும் முயலையும் தேடுவதும், நட்சத்திரம் பார்ப்பதும் எண்ணுவதும், சந்திரனுடன் நடப்பதும், சீராக பரப்பி வைக்கப்பட்ட மேகங்களைப் பார்த்து கடவுள் நல்ல வடிவா வாசல் கூட்டியிருக்கிறார் எனச் சொல்லி மகிழ்வதும், களி மண்ணில் மயில், யானை செய்வதும், காசு பதிப்பதும், ஓட்டுத்துண்டை தேய்த்து உடலில் அச்சடிப்பதும், குரும்பெட்டியில் நகங்களால் அலங்காரமிடுவதும், தையல் மெசின் செய்வதும், தென்னம் ஓலையால் பம்பரம், கண்ணாடி மாலை என புதிது புதிதாய் ஆக்குவதும், கடதாசியில் தோணி செய்து வாய்க்காலில் விடுவதும் என ஏராளமான இதமான அனுபவங்கள் இருக்கின்றன. இவை புதுமையான விடயங்கள் அல்ல வழமையானவைதான்.

ஊருக்குள் யாருடைய வீடு எவ்விடத்தில் இருக்கிறது, வளவுக்கூடாகவே ஊரின் தொடக்கத்தில் இருந்து முடிவு வரைக்கும் செல்வதற்கான வழி, ஊருக்குள் எவ்விடத்தில் என்ன மரம் இருக்கிறது என்பது கூட தரம் நாலில் படிக்கும் போதே, நன்றாகத் தெரிந்திருந்தது.

இவ்வாறு சிறுபிள்ளைப்பருவத்தில் இருந்த இரசனை அனுபவங்கள், சூழல் சார்ந்த அவதானம், சூழலுடன் இணைந்து, மகிழ்ந்து வாழ்தலிலான விருப்பம் என்பவை தாம் வளரும் பொழுது ஏன் இல்லாமல் போனது? இதனை நாம் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றோமா? இவை சிறுபிள்ளைத்தனமான வாழ்க்கை, நாங்கள் வளர்ந்தவர்கள் இவற்றுக் எதிராக வாழ வேண்டும் என்றும் எமக்குக் கற்றுத்தந்தது யார்? இவ்வாழ்க்கையைத் தொலைத்ததைத் தொடர்ந்தே பிரச்சினைகள் உருவாகத் தொடங்குகிறது. எதிலும் சலிப்புத் தன்மை, விருப்பற்று வாழ்தல், வாழ்வதில் விருப்பமின்மை எனத் தொடரும்.

முற்றத்து மணலில் படம் வரையும் பொழுது இருந்த சுதந்திரமும், மகிழ்வும் ஏன் பாடசாலையில் சித்திர ஆசிரியரின் முன் இல்லாமல் போனது? எமது மனதிற்குள் இருந்த பிரமாண்டமான ஓவிய வாழ்க்கையை கடதாசிக்குள் புதைக்க முற்பட்டமையினால் அவ்வாறு ஆனதா? அல்லது எங்களது எண்ணங்கள் ஒன்றாயிருக்க எங்களிடம் எதிர் பார்க்கப்பட்டது இன்னொன்றாக இருந்ததா?

1972ம் ஆண்டு இலங்கைக்கல்வி சீர்திருத்தத்தில் அழகியல் பாடங்கள் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டது மகிழ்ச்சியான விடயம். தொடர்ச்சியாக பாடங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கற்று களைத்துப்போகும் மாணவர்களை இளைப்பாறச் செய்யும் பாடங்களாக அழகியல் சார்ந்த பாடங்கள் அமையும் என்றுதான் அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும் கடந்த 36 வருடங்களில் எமது தமிழ்ச் சூழலில் சித்திரக்கலை அதன் நோக்கிழந்து கற்பிக்கப்பட்டதே அதிகம்.

பாடசாலைகளில் சித்திர ஆசிரியரும், வரைவதில் ஆர்வமுள்ள மாணவர்களும் புவியியல் பாடத்திற்கு உலகப்படம் வரையவும், பாடசாலைச் சின்னம் வரையவும் எனப்பிழையாக பயன்படுத்தப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது. சித்திரத்திற்காகச் சித்திர ஆசிரியர் என்ன செய்யலாம். எனச்சிந்தித்து செயலாற்றுகின்ற ஆசிரியர்கள் பாடசாலைகளில் பஞ்சமாகவே இருக்கின்றனர்.

மரம் ஒன்று வரைந்து சிவப்பு வண்ணம் தீட்டிய மாணவி சித்திர ஆசிரியரினால் தண்டிக்கப்பட்டிருக்கிறாள், அப்படியென்றால் உலகம் போற்றும் ஓவியர்களுள் ஒருவரான போல்கோகைனும், அவரைத் தொடர்ந்துவந்த போவிஸ்டுக்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தானே! வழமையான இருப்புக்களுக்கு அப்பாற்பட்டு அபூர்வமானதும் ஆச்சிரியமானதுமான புராணக்கதைகளைக் கொண்டிருக்கிறோம். நீல நிறச்சிவன், பச்சை நிற மகாவிஷ்ணு, பச்சை நிற வள்ளி, இரண்டிற்கும் அதிகமான கைகளைக் கொண்ட கடவுள்கள், நான்கு தலைகலைக் கொண்ட பிரம்மா, பத்துத்தலை இராவணன், நெஞ்சைக் கிழிக்கும் அனுமான், பிள்ளையார், நந்திதேவர், நரசிம்மர் என நீளும வடிவங்களையும், அதற்கான கதைகளையும் கொண்டுள்ள எம்மத்தியில் பிள்ளைகள் மாறுபட்டு சிந்திப்பதை, வரைவதை, வண்ணந்தீட்டுவதை எடுத்த எடுப்பில் பிழையென கூறவிட முடியாது, இப்பிள்ளைகளுடன் அதிகம் உரையாட வேண்டியிருக்கும். அது சுவாரசியமான அல்லது பல உளவியல் சார்ந்த விடயங்களையும் அது கொண்டிருக்கக் கூடும்.

பிள்ளைகள் தங்களின் உளவயதிற்கேற்பவே ஒரு படைப்பை உருவாக்குவார்கள். உடல் வளர்ந்தாலும் உளவயதிற்கேற்பவே அதன் தரம் அமைந்திருக்கும். இதை உணர்ந்தும் உள்வாங்கிக் கொண்டுமே அவர்களின் படைப்பைப் பார்க்க வேண்டியிருக்கும். அப்பிள்ளைகளின் வாழ்வியல் முறை, குடும்பப் பின்னணி, அதன் மகிழ்ச்சி, பயம், கவலை இவ்வாறு அதன் உளக்கிடக்கைகளைக் கொண்டே அமையும். இதற்கு பிள்ளைகளைத் தண்டிப்பதல்ல பிள்ளைகளின் செயற்பாட்டைக் கொண்டு பிள்ளைகளைப்பற்றிக் கற்பதே வேண்டப்படுகிறது.

எதேச்சையாக கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரது வீட்டிற்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. அப்பொழுது பல மகிழ்ச்சியான சம்பவங்கள் அவரது வீட்டிலும், வீட்டுச்சூழலிலும் இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது. தனது சிறுபிள்ளைகள் தனது வண்ணக்கட்டிகளால் ஆங்காங்கே சுவர்களில் கீறி வைத்திருந்தனர். உருவங்கள் இனங்காண முடியாதளவு இருந்தது. பிள்ளைகளின் வயது மூன்று அல்லது நான்காகத்தான் இருந்திருக்க வேண்டும். இருந்தாலும் வீட்டிற்குத் தீந்தை பூசும் பொழுது தமது பிள்ளைகள் வரைந்த படங்கள் விட்டுவிட்டு ஏனைய இடங்களுக்கு வண்ணம் தீட்டியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது அப்பிள்ளைகளிற்குக் கிடைத்த மிகப்பெரிய பாராட்டாகவே உணருகிறேன்.

எனது ஊரில் சிறிதரன் என்று ஒரு நண்பன் இருந்தான். அவன் என்னிலும் மூத்தவன், பத்துவயதாக இருக்கும் பொழுது நல்ல சித்திரக்காரனாகவும், சிற்பியாகவும் ஊருக்குள் அறியப்பட்டிருந்தான். கோவலில் உள்ள இரண்டு மயில்களையும் பார்த்துவிட்டு கோதுமைமாவைக் குழைத்துத் தொட்டுத்தொட்டு களிமண் சுவரில் புள்ளிவைத்து மயிலும், கைகளைத் தோய்த்தும் பதித்தும் ஓவியமாக்கியிருப்பான். களிமண்ணால் பிள்ளையாரைத் துண்டு துண்டாகச் செய்து பொருத்துவான். பாடசாலைகளில் அவன் பாராட்டப்பட்டதாகவோ எனக்கு ஞாபகம் இல்லை. ஆனாலும் ஊரில் உள்ளவர்கள் பிள்ளையார் இணக்குவது என்றால் சிறிதரன் தான் எனச்சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

இவ்வாறாக சிறு பராயத்திலே பிள்ளைகளின் திறன்களை அறிந்து அவர்களுக்கான கணிப்பும், அங்கீகாரமும் வழங்கும் போது அது பிள்ளைகளின் ஆளுமையில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும்.

ஓவியங்களுடாக மகிழ்வது, ஆற்றுப்படுவது , பகிர்வது, உரையாடுவது, வாழ்த்துவது, வாழ்வது சார்ந்த மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழு 2003களிலிருந்து கிராமங்களுக்குள் (சீலாமுனை, குமாரபுரம்) உள்ள சிறுவர்களுடன் ஓவியம் சார்ந்தும், கையகப்பட்ட பொருட்களை கலைப்படைப்பாக்குதல் சார்ந்தும் செயறபடத் தொடங்கிக் காலப்போக்கில் கிராமங்கள், பாடசாலைகள், சமூகத்தின் பல தரப்பட்ட வயதுக் குழுக்களுடனும் ஓவியம் சார்ந்து பல பயிற்சிப்பட்டறைகளை முன்னெடுத்து வருகிறது.

இங்கு யாரும் ஓவியர்களாக இருப்பதும் இல்லை, ஓவியம் வரைவதற்கு பயம் கொள்வதும் இல்லை. அனைவரும் வண்ணங்களுக்கூடாகவும், கையகப்பட்ட பொருட்களுக்கூடாகவும் மகிழ்தல், வாழ்தல், தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தல், பகிர்ந்து கொள்ளல் இதுவே பிரதானமாகிறது. அனைவரும் இணைந்த பிரமாண்டமான ஓவியத்தையோ கலைப்படைப்பையோ ஆக்கி முடித்தபின் வரக்கூடிய மகிழ்ச்சி என்பது மிகவும் அலாதியானதும், வாழ்க்கைக்குத் தேவையானதும்கூட. குறிப்பாக தொடர்ந்து சிறுவர்களுடன் இணைந்து கலையாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதூடாக இவர்களிடம் வளரக்கூடிய அழகியல் உணர்வு அவர்களிடம் வரும் வன்முறைத்தனமான எண்ணங்களை அகற்றிவிடும். அனைவரும் சேர்ந்து இயங்குகின்ற நல்ல மனிதர்களாக வளர வைக்கும்.

சித்திரம் அந்நியப்பட்ட ஒன்றல்ல. அது எமது வாழ்வியலுடன் இணைந்தது. எமது கல்விமுறை அவற்றைச் சரியாக பிரயோகிக்காமையே இன்று இயந்திரத்தனமான பிள்ளைகளும் வன்முறை எண்ணங்கொண்ட பிள்ளைகளும் உருவாகக் காரணமாகிறது. எனவே தான் மூன்றாவது கண் நண்பர்களுடன் இணைந்து தமது சூழல் சார்ந்து, சமூகம் சார்ந்தும் அழகியல் சார்ந்து ஆற்றுப்படுத்தவுமாக தொடர்ந்தும் ஓவியம் சார் பயிற்சிப்பட்டறைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

**சுசிமன் நிர்மலவாசன்**
**ஆசிரியர்**
**மட்/விக்னேஸ்வரா வித்தியாலயம்**
**கதிரவெளி.**

# வாகரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாற்று ஏடுகள்



ஈழமணித் திருநாட்டின் கிழக்கழங்கையாம் மட்டுமா வடக்கே நானிலம் ஒழுங்கமையப் பெற்ற பல்வகை வளங்களுடன் கூடிய சைவமும் தமிழும் சீர் பெற்று விளங்குகின்ற வந்தோரும் இருப்போரும் வளம் கொளிக்கும் வண்ணம் வாரி வாரி அருள் ஆசி வழங்கிட வாகரை மண்ணில் பதி கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலாறு மிகவும் வழமை வாய்ந்ததொன்றாகும்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினை நிர்மாணித்தவர் ஸ்ரீமான் சீனித்தம்பி கணபதிப்பிள்ளை என்பவர் ஆவர். இவர் பூசை செய்வதில் மட்டுமல்ல மூலிகை கொண்டு மருத்துவம் செய்வதில் கைதேர்ந்தவர் எனலாம். அக்காலத்தில் பெரும்பாலும் சில உடல்நலக் குறைபாடுகளுக்கு இங்கு வாழந்த ஊர் மக்கள் வைத்தியசாலைக்கு செல்வதில்லை. இவரிடம் சென்று வைத்தியம் செய்யும் வரலாறும் உண்டு எனலாம்.

இவர் நிர்மாணித்த அம்மன் குடி கொண்டிருக்கும் இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற பூசை முறைகள் ஆகமம் சார்ந்ததாகவும், சாராததாகவும் நடைபெற்று வந்ததுடன் இங்கு நடைபெறுகின்ற பூசை முறைகள் அனைத்தும் செவிவழியாக மாத்திரமே பேணப்பட்டு வருகிறதே ஒழிய அச்சு வாகனம் ஏறவில்லை என்றே கூறலாம்.

முன்னோரு காலத்தில் ஸ்ரீமான் சீனித்தம்பி கணபதிப்பிள்ளை எனடபவர் தனது வீட்டிலே ஸ்ரீமுத்துமாரியம்மனை வைத்து வழிபட்டு வந்தார். ஒரு நாள் அதாவது 1985ம் ஆண்டு ஆனிமாதம் 10ம் திகதி இரவு நித்திரையில் இருந்த போது இவரது கனவிலே மாரியம்மன் தோன்றி இவ்வூரில் தான் குடியிருக்க விரும்புவதாகவும் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் வேப்பங்கன்றடியில் ஓர் ஆலயம் அமைத்துத் தருமாறும் மாரியம்மன் கனவிலே கூறியதாக தன் உறவினரிடம் கூறியிருந்தார்.

பின்னர் ஒரு நாள் வெள்ளிக்கிழமையன்று கணபதிப்பிள்ளை தன் உறவினரிடம் அந்த இடத்தின் வழியாக சென்ற போது அந்த இடத்தில் சிவப்பு நிறச்சேலையும் பச்சை நிற ரவிக்கையும் அணிந்து தலை விரித்தபடி ஒரு பெண் நின்று மறைந்ததைக்கண்ட இவர்கள் இங்கு வந்து நின்ற பெண் அம்மன்தான் என்று உணர்ந்து கொண்டதால் பயனாக 1989ம் ஆண்டு ஆனிமாதம் 27ம் திகதி பிறபகல் 6.00 மணியளவில் வாகரை 5ம் வட்டாரத்திலுள்ள சிற்றம்பலக்கண்டம் என்னும் இடத்திலுள்ள (தற்போது ஆலயம் உள்ள இடம்) வேப்பங்கன்றடியில் சீனித்தம்பி கணபதிப்பிள்ளை என்பவர் தன் நல் மனதுடன் அம்மனை குடியிருத்தினார்.

அம்மன் குடியிருந்த இடத்தினை கம்பு தடிகளைக் கொண்டு ஓலையால் வேயப்பட்ட ஓர் சிறிய ஆலயம் அமைத்தார். இங்கு தன்னுடைய செலவில் பூசை புனஸ்காரங்களை ஆரம்பத்தில் செய்து கொண்டு வந்தார் எனலாம்.

அவ்வாறு இருக்கையில் 1991ம் ஆண்டு கேதார கௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் இவ்வாண்டில் இருந்து கௌரி விரதத்தினை இவ்வாலயத்தில் அனுஷ்டிப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்டு கொண்டதற்கிணங்க 1991ம் ஆண்டில் இருந்து கேதார கௌரி விரதம் இன்றுவரை இவ்வாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. கேதார கௌரி விரதத்தை அனுஷ்டிக்கும் பக்த அடியார்கள் தட்டுமுனை, ஊரியன்கட்டு, வாகரை, கண்டலடி, புளியங்கன்றடி இன்னும் பல இடங்களில் இருந்து தன் ஆண், பெண் என இருபாலாரும் இவ்விரதத்தை அனுஷ்டித்து கௌரி காப்பை அணிய வருவார்கள் எனலாம்.

இவ்வாறு இருக்கையில் ஸ்ரீமான் சீனித்தம்பி கணபதிப்பிள்ளை 1995ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். பின்னர் இக்கோயிலை பரிபாலனம் செய்வதற்கு இவரது மருமகனான கந்தையா தருமலிங்கம் என்பவர் இக்கோயிலை பரிபாலனம் செய்து வந்தார். இவ்வாலயத்தில் பூசை புனஸ்க்காரங்களை செய்வதற்கு சீனித்தம்பி யோகேஸ்வரன் என்பவரை பூசகராக நியமித்து இருந்தனர். அன்றில் இருந்து இன்று வரை ஆலயத்தில் இடம்பெறும் சகல பூசை புனஸ்காரங்களை சீ. யோகேஸ்வரன் என்னும் பூசகரே செய்து வருகின்றார் எனலாம்.

இவ்வாலயம் எபபோது ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை இவ்வாலயத்தில் தைப்பொங்கல் பூசை, தைப்பூசப்பூசை, மகா சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, சித்திரை கதைப்பூசை, கேதார கௌரி விரதம், ஆனி மாதத்தில் ஆண்டு உற்சவம் வெள்ளிக்கிழமைப்பூசை, நவராத்திரி, தீபாவளி என்றும் பல சிறப்புப் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது எனலாம். இவ்வாலயத்தில் இடம்பெறும் ஆனிமாத உற்சவம் மூன்று தினங்கள் இடம்பெறும் இங்கு முதல் நாள் கும்பப்பூசை இரண்டாவது நாள் கன்னிமார் பூசை, மூன்றாவது நாள் பள்ளயப்பூசை என்பன இங்கு ஒழுங்கு முறையாக இடம்பெற்று தீர்த்த உற்சவம் சிறப்பாக இடம்பெறும் இவ்வாலயத்தில் குளித்தி வாடும் மரபுடன் தீர்த்த உறசவம் இனிதே நிறைவு பெறும்.

எனவே இவ்வாலயம் பிரபல்யமான ஆலயம் என்றாலும் கூட இங்கு வீற்றிருக்கும் அம்மாள் தன்னை நாடி வரும் பக்த அடியார்களுக்கு ஏதோ ஒரு வகையில் அருள் பாலித்துக்கொண்டே இருக்கின்றாள். இவ்வாறான ஓர் அதிசயம் வாய்ந்த ஆலயம் வாகரையில் அமைந்திருப்பது வாகரை பிரதேசத்திற்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

**திரு. V.வேதாகரன்**
**(JRS ஆசிரியர்)**
**புளியங்கன்றடி**
**வாகரை.**

# மட்டக்களப்பு சமூகஅமைப்பும் அச்சமூக அமைப்பின் சடங்குகளினதும் கலைகளினதும் கூத்துக்களினதும் இடம்.



மட்டக்களப்புப்பிரதேசம் பல இனத்தவர்கள் வாழும் ஒரு இடமாகும். இங்கு தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர், பறங்கியர், மலேயர் ஆகிய இனத்தவர்கள் வாழ்ந்துவரும் ஒரு பிரதேசமாக உள்ளது. இங்கு கலை கலாச்சாரம், பண்பாடு, சடங்கு முறைகள் என்பன முறையாகக் கடைப்பிடித்து வாழும் ஒரு சமூகஅமைப்பாக இங்கு காணப்படுகின்றது. மட்டக்களப்பு மக்கள் தனது உணவாக சோற்றையே உண்டு வாழ்கின்றனர். நிலவளமும், நீர்வளமும், இயற்கை அழகும், நெல் வளமும் கொண்ட ஒரு செழிப்பான இடமாக மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு சமயம், கலை, சமூகம் பண்பாடு என்பவை முறையாகப்பேணப்படும் இடமாகும்.

## மட்டக்களப்பு சமூகஅமைப்பு.

ஈழத்தின் கிழக்குப்பகுதியின் கரையோரமாக அண்மித்துள்ளபகுதி மட்டக்களப்பு பிரதேசமாகும். இவை 1961ம் ஆண்டிற்கு முன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் இணைந்து மட்டக்களப்பு மாவட்டமாகவே செயற்பட்டுள்ளன, இவை வடக்கே வெருகல் ஆறு சங்கமிக்கும் இடமாகவும், தெற்கே கடலோடு சங்கமிக்கும் குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடாக்கடலையும் மேற்கே நிலப்பரப்பையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமாக விளங்கியிருந்தன.

மேலும் கிழக்கே கடலையும் கடல் சார்ந்த பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகவும், மேற்கே பல்லாயிரக்கணக்கான விஸ்தீரமான வயல் நிலங்களையும் காடுகளையும், தரிசு நிலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மற்றும் மட்டக்களப்பு வாவி இலங்கையின் மிகப்பெரிய வாவியாகக் கருதப்படுகின்றது. மேலும் இவ்வாவியின் கிழக்குப்பகுதியை எழுவான்கரை எனவும், மேற்குப்

பகுதியை படுவான்கரை எனவும் அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நிலப்பரப்பு 957.6 சதுரமைல்களாகும், மேற்குப்பகுதியிலுள்ள மக்கள் கூடுதலாக நெற்செய்கைகளிலே தான் ஈடுபட்டுள்ளனர், வயல் நிலம் அதிகம் உள்ள இப்பகுதியில் பெரும்போக சிறுபோக நெற்செய்கையிலேதான் அதிகம் ஈடுபாடுகாட்டுகின்றனர்.

1961ம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு அரசாங்க அதிபர்களை நியமித்து நிருவாகப் பொறுப்புக்கள் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில், மூன்று தேர்தல் தொகுதிகளாக்கப்பட்டதுடன், நிருவாக வசதி கருதி (1972) நிருவாகப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. கோரளைப்பற்று
2. ஏறாவூர்பற்று
3. மண்முனைவடக்கு
4. மண்முனைப்பற்று மேற்கு
5. காத்தான்குடி
6. மண்முனை
7. மண்முனை தென்மேற்கு
8. போரதீவு பற்று
9. மண்முனை தெற்கு எருவில்பற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையினர் இலங்கைத்தமிழர். மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழும் தமிழரிடையே சமுதாய மரபுகள், வாழ்க்கைமுறைகள், வணக்கமுறைகள், வசந்தனாட்டம், கூத்தாட்டம் ஆகிய கலைகளில் ஒருமைப்பாடு நிலவுகின்றது. சமூக அமைப்பை நிர்ணயிப்பது பொருளாதார வாழ்க்கை அமைப்பாகும். உற்பத்திக் கருவிகளையும் அதனால் ஏற்படும் உற்பத்தி உயர்வுகளையும் கொண்டே இச்சமூக அமைப்பு நிர்ணயிக்கப்படுகிறது. இந்தவகையில் நான்கு வகையான சமூகஅமைப்புக்கள் நிலவியதாக சமூக ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றனர். அவையாவன,

1. புராதனகால பொது உடமைச்சமுதாயம்
2. ஆண்டான் அடிமைச்சமுதாயம்
3. நிலமானியச்சமுதாயம்
4. முதலாளித்துவ சமூகஅமைப்பு

இதன் அடிப்படையில் மட்டக்களப்பில் கூத்தானது நிலமானிய சமூக அமைப்பின் காலத்திலிருந்து தோற்றம் பெற்றதாக அறியக்கூடியதாக உள்ளது என மேலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமான விளைச்சல் நிலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயமே இன்றும் முக்கிய தொழிலாக இருப்பதால் விவசாயத்தைக் கொண்ட நிலமானிய சமூகஅமைப்பே நிலவுகிறது.

மற்றும் மட்டக்களப்பு மாண்மியப்போட்டி கல்வெட்டில் 22 சாதியினரைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு சாதியினருக்கும் ஒவ்வொரு குலவிருதுகள் கூறப்படுகின்றன, இவை ஒவ்வொரு சாதியினருக்கும், இன்ன இன்ன தொழில் என விதிக்கப்பட்டிருந்தன. மற்றும் சாதியமைப்பைப்பற்றித்தரும் முதல் நூல் மட்டக்களப்பு மான்மியமாகும். மட்டக்களப்பு மான்மியம் 30 சாதிகளைக் கூற SO. கனகரெத்தினம் 17 சாதிகளையே குறிப்பிட்டிருக்கின்றார்.

எப்படியிருந்தாலும் சாதியமைப்பில் உயர்குடியினராக மற்றும், முக்குகரும், இதில் கலிங்க குடி, படையாட்சிகுடி, உலகிப்போடிகுடி போன்ற குடிகளுக்கே கொக்கட்டிச்சோலை

தான்தோன்றீஸ்வரர் கோயிலில் முதலிடம் உள்ளது. ஏனைய குருக்கள் மடம். பழுகாமம், மண்டூர் போன்ற இடங்களில் வெள்ளாளர் உயர் குடியாக உள்ளது. மற்றும் வந்தாறுமூலை சிற்றாண்டிகளில் பெரியபரமக்குட்டிக்குடி, சின்னப்பரமக்குட்டிக்குடி, மஞ்சள் பரமக்குட்டிக்குடி, காவேரி கண்டக்குடி இவைகளுக்கே வந்தாறுமூலை மகாவிஸ்ணு கோயிலில் இடம்உண்டு. மற்றும் அரசடித்தீவு அம்பிளாந்துறை, பண்டாரியவெளி ஆகிய ஊர்களில் கலிங்கக் குடி, படையாட்சி குடி மக்கள் கூடுதலாகவும், கொக்கட்டிச்சோலையில் கோயிலார் குடியும், உள்ளதாக அறியமுடிகிறது. மற்றும் ஏனைய இடங்களில் கலப்புத்திருமணத்தால் எந்தக்குட்டி என்றே தெரியாமல் போயுள்ளது. பட்டிப்பளைப்பிரதேசத்தில் குடி வகுத்துவார். இன்றும் பார்ப்பதுண்டு கோயில் சடங்குகளிலும், மரணவீடுகளிலும் இன்றும் குடி கூறும் முறை உள்ளது.

அதிகளவு நிலங்களுக்கு முக்குகர் சாதியினருக்கே சொந்தக்காரர்களாக உள்ளது. அடுத்த படியாக சீர்பாதக்காரரும், கரையாரும் காணப்பட்டனர். மூக்குகருக்கும் வெள்ளாளருக்கும், அதிகளவு வயல் நிலங்கள் இருந்தமையால் சமூகத்தின் தலைமை ஸ்தானம் இவர்களிடமே சென்றடைந்தன. இது பற்றிய தெரிவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் மண்டூர் கந்தசாமி ஆலய தேசக்கோயில்களில் வகுக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்தையும் ஊழியத்தையும் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு சமூகமரபு எவ்வாறு இருந்தது என்பது பற்றி அறிவதற்கு போதிய சான்றாதாரங்கள் இல்லாமையால் வரலாற்று ஆய்வாளர்கள் மட்டக்களப்பு வரலாறு பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. மட்டக்களப்பு மாநிலத்திற்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் வந்தார்கள் என "இராமாயணசமூகம்" என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

கி.மு 540ல் விஜயன் என்ற சிங்களமன்னன் பாண்டிய நாட்டிலிருந்து கொண்டு வந்த தமிழ் மக்களை "கதிரகால" என்னும் மலைச்சாரலில் குடியேற்றினான் என்றும் அப்பகுதி அக்காலத்து வேடரால் குடியிருக்க பெற்றது என்றும் சிங்களச்சரித்திர நூல்கள் கூறுகின்றன.மற்றும் முதலாம் கஜபாகு மன்னன் கி.பி. 113ல் சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி சிலையையும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய மக்களையும் ஈழத்திற்கு வருவித்தான் என்றும், 2ம் கஜபாகுமன்னன் சேர நாட்டிற்கு படையெடுத்துச்சென்று ஆயிரத்து இருநூறு தமிழ் மக்களைச் சிறைப்பிடித்து கொண்டு வந்து மட்டக்களப்பு மாநிலத்தில் குடியேற்றினான் என்று நூல்கள் மூலம் அறியமுடிகிறது. மட்டக்களப்பில் வாழும் தமிழ் மக்கள், சேரநாட்டு மக்களுடனும் தொடர்புடையவர்களாகக் காணப்படுவதையும் காணலாம்.

மட்டக்களப்பு மாநிலத்தில் பண்டுதொட்டு தமிழ் மன்னரின் ஆட்சி நிலைபெற்றிருந்தமை பற்றியும், அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தவர்கள், மூன்று கலிங்கத்தமிழ் மன்னர்கள் கண்டிராட்சியம், யாழ்ப்பாணராட்சியம், கோட்டை ராட்சியம் என்பவற்றை தமிழ் மன்னர்கள் ஆண்டதாகவும், கோட்டை ராட்சியம் எனும் புளியந்தீவில் ஒரு மன்னன் ஆட்சி நடத்தியதாகவும் மட்டக்களப்பு மாண்மியம் கூறுகிறது. இந்த மன்னர்களை பற்றிய செய்திகளை ஈழத்துத்தமிழ் வரலாற்றுச் சான்றுகளான, தட்சணகைலாய புராணம், குளக்கோட்டன் கல்வெட்டு, கோயில் செப்பேடுகள் வாயிலாக நாம் அறியலாம். மட்டக்களப்பு பிரதேச முழுமையான வரலாற்றுப்

பின்னணியை பேராசிரியர். சி. மொனகுரு அவர்களது மட்டக்களப்பு மரபுவழி நாடகம் என்ற நூலிலும் மற்றும் வெல்லவூர் கோபால் அவர்கள் எழுதிய "மலையாள நாடும் மட்டக்களப்பும்" என்ற நூலில் பக்கம்-25 தொடக்கம் பக்கம்-48 வரை மட்டக்களப்பு சமூகஅமைப்புப்பற்றி எழுதியுள்ளார்.

முன்பு குறிப்பிட்ட சுருக்கமான வரலாற்றுகளில் இருந்து கிடைக்கும் சான்றுகளிலிருந்தும் மட்டக்களப்பில் ஆரம்பத்தில் பூர்வீககுடிகள் இருந்தன என்றும் காலத்திற்குக்காலம் இந்தியாவில் பலவேறு பகுதிகளில் இருந்தும் மட்டக்களப்பில் பல பாகங்களில் பல குடியேற்றங்கள் நடைபெற்றன என்றும், இந்திய அரசர்களின் சிறப்பாக சோழ கலிங்க ஆட்சிக்கும் சிங்கள அரசர்களின் ஆட்சிக்கும் இப்பிரதேசம் உடன்பட்டிருந்ததென்றும், பின்னர் ஐரோப்பியர் வருகையின் பின் புதிய புதிய வருகையும், மதங்கள் கலாச்சாரங்கள் என்பனவும் இங்கு வந்தடைந்தமையால் சமூகஅமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. என்று நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இந்த சமூகவரலாற்றுப் போக்கிற்கூடாகவே மட்டக்களப்பில் இன்று காணப்படும் சமூகஅமைப்பு உருவாகியது. இவ்வாறு சமூகஅமைப்பில் சாதி முறைமைகள் காணப்பட்டாலும் இவை இன்னும் கிராமங்களில் உண்டு எனினும் ஆங்கிலேயர் வருகையும் பொருளாதார அசைச்சிதைவுகளுமே இவ்வமைப்பை பலவீனப்படுத்தியுள்ளன. கிறிஸ்தவர்களின் வருகையும் மத்திய வகுப்பினரின் தோற்றமும் நகரப்பகுதிகளில் இவ்வமைப்பின் தகர்விற்கு மூலகாரணமாக இருந்தது என பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களின் "பழையதும் புதியதும்" எனும் நூலில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. மற்றும் காலத்திற்கு காலம் வந்து குடியேறிய குலங்களும் குடிகளும் தாம் குடியேறிய பகுதிகளில் தத்தமக்குரிய தத்துவங்களுடன் வாழ்ந்தாலும் பொது ஆட்சியாளரின் கீழ்வரும் பொழுது சில பொது விதிகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. அதற்கியவே சமூக அமைப்பும் உருவானது.

இந்தவகையில் மனித சமுதாயம் மட்டக்களப்பில் கலைச்சமுதாயமாக இருந்து வந்தது. பண்பாடு அரசியல், பொருளாதாரம், கலை என்பவற்றில் தொடர்புடைய ஒரு சிறந்த சமூகமாக இருந்து வந்துள்ளது. தற்போது மக்களின் அறிவு வளர்ச்சியால் நாகரிகமான ஒரு சமூகமாக மாறியுள்ளது. உடை, உறவு முறைகளில் பெரும் மாற்றத்தினை அடைந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

## மட்டக்களப்பு சடங்கும் கலையும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடுதலாக சடங்கு வழிபாடே முக்கிய இடம் பெறுகின்றது. இங்கு ஆடிப்பந்தல் பிடிக்கும் சடங்குதான் முன்னைய காலத்தில் இருந்தது. அது இன்றும் சில கிராமங்களில் உள்ளது. ஆகமம் சாராத முறையில் அம்மனுக்கு பந்தலிட்டு கும்பம் ஏற்றி அதில் மாரியம்மன், பேச்சியம்மன். இவைகளுக்குரிய முகக்களை செய்து, கும்பத்தில் பதித்து, மந்திரவாதிகள் பூசாரியாக இருந்து மந்திரம் சொல்லி உடுக்கை, பறை, சிலம்பு மணி ஆகிய இசைகளில் முழங்கி, சிலரை அதில் தெய்வம் ஆடப்பண்ணி, அவர்களூடாக மக்களுக்கு கட்டுச்சொல்லி மக்களை அந்த தெய்வ ஆசியுடன் மனமகிழ்வோடு வாழவைக்க இச்சடங்கு இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில், நாறபதுவட்டை மாரியம்மன் சடங்கு, அரசடித்தீவு, அம்பிளாந்துறை, மகிளூர் முதலைக்குடா, முனைக்காடு ஆகிய இடங்களில் மாரியம்மன் சடங்கும், பழுகாமம், பாண்டிருப்புகளில் திரௌபதையம்மன் சடங்கும், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, மகிழடித்தீவு, கன்னங்குடா, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் கண்ணகியம்மன் சடங்கும் சிறப்பாக இடம் பெறுகின்றன. அத்தோடு சில இடங்களில் குமாரதெய்வச்சடங்கு, நரசிங்க வைரவர் சடங்கு, வதனமார் சடங்கு, காத்தவராயன் சடங்கு, காளி சடங்கு, துட்டப்பிசாசுகளைக் கலைக்கும் சடங்கு, வீட்டுச்சடங்கு, மண்டூர் கந்தசுவாமி கோயில் தாலி கட்டும் சடங்கு, போன்ற சடங்குகளும் இன்னும் பல இதரசடங்குகளும் இங்கு முக்கியமாக இடம்பெறுகிறது.

இந்தச்சடங்குகள் அனைத்தும், மழைக்காகவும், நோய்ப்பிணியைத்தீர்ப்பதற்காகவும், பயத்தினாலும், தங்களது குறைகளைப்போக்கவும் இது காலம் காலமாக இடம்பெற்று வருகின்றது. இச்சடங்கும் மக்களும் பின்னிப்பிணைந்ததாக உள்ளது. இது வருடத்திற்கு ஒரு முறையே நடைபெறும். ஓலைக்கிடுகு பின்னி புதுக்கம்பு நாட்டி, குருத்து வேப்பங்குழையால் அலங்கரித்த பந்தல் இட்டு அதிக மக்களது விருப்பத்தெய்வத்தின் முகக்களையை வைத்து பூசை இடம்பெறும்.

சடங்குகளுடன் கலைகளும் இணைந்தே வந்திருக்கின்றது சடங்குக் காலங்களில் பலகலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றது. சடங்குகளின் ஊடாகவே கூத்துக்கலையும் வந்துள்ளது. தென்மோடி வடமோடிக் கூத்துக்கள், கோலாட்டம், கும்மி, வசந்தன்கூத்து, நாடகங்கள், என்பன சடங்குக்காலங்களில் நடைபெறும், இரவு வேலைகளில் கோயில் முன்றலில் இடம்பெறும், இச்சடங்குக் காலங்களில் மக்கள் கலைகளை நிகழ்த்துவதற்கு ஆர்வமாக இருப்பர். சடங்கு வரும் என்று பல புதிய உடைகளைத்தைத்து, எடுப்பர், இதுவும் ஒரு கலை அம்சத்தையே காட்டுகிறது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் இடம்பெறும் இச்சடங்குகளில், கும்பம் வைத்தல், ஊர்வலம் வருதல், தோரணம் கட்டுதல், தவநிலை, தீமிதிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். அதேவேளை எல்லா சமூக மக்களும் தங்களது பகைமைகளை மறந்து ஒன்று கூடி இச்சடங்கினை நடத்துவதற்கு ஒத்தாசை புரிவர், இச்சடங்குகள் ஒரு கலை வடிவமாகவே திகழ்கிறது. இச்சடங்கு காலங்களில் தங்களது தீமைகள் மறைந்தமைக்கு கடனாக நேர்த்திக்கடன்களைச் செலுத்துவர். சத்தியம் செய்து தங்களது உண்மை, பொய்மைகளை வெளிப்படுத்துவர்.

இச்சடங்குகளைவிட ஆகமம் சார்ந்த கோயில்களான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், தாந்தாமலை முருகன் கோயில் என்பவையும், நேர்த்தி கடன் தீர்க்கும் மாமாங்கப்பிள்ளையாராலயம், வாயைத்துணியினால் கட்டிப்பூசை செய்யும் மண்டூர் முருகன் கோயில், மற்றும் பல பிள்ளையார் கோயில்களும் விழாக்காலங்களில் கலை நிகழ்வுகள் இடம்பெறும், அத்தோடு பிரபலமான பண்டாரயாவெளி நாகதம்பிரான் கோயிலும் விழாக்காலங்களில் கலை நிகழிவுகளும் இடம் பெறுவதுண்டு.

தற்போது சில பெருமைமிக்க கோயில்களில் போரதீவு காளிகோயில், ஏறாவூர் காளிகோயில், செங்கலடி கருமாரியம்மன் கோயில் இவைகளெல்லாம், முன்பு சடங்காகவே நடந்தது. தற்போது சடங்கோடு இணைந்த விழாவாக நடைபெறுவதையும் காணமுடியும். இந்தக்கோயில்களிலும் பலகலை நிகழ்வுகள் சடங்கு விழாக்காலங்களில் நடைபெறும்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் மக்களிடம் பல சடங்குகள் சாராதகலைகளும் முக்கிய இடம் வகிக்கிறது. கைவினைக்கலைகளிலும், இவர்கள் பெருமை பெற்று இருக்கினறனர். பாய், பெட்டி, கிடுகு, சுழுகு, குட்டான், கூடை பின்னுவதிலும் திறமைமிக்கவர்கள் அத்தோடு விளையாட்டுப்பொருட்கள் செய்தல், மீன்பிடி உபகரணங்கள் செய்தல், மட்பாண்டப்பொருட்கள் செய்தல், சிற்பம் ஓவியம், போன்ற கலைகளைச் செய்பவர்கள் இங்கு உள்ளனர். தங்களது தேவையைக் கருத்தில் கொண்டு தங்களது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைச் செய்வதில் வல்லமையுடையவர்கள்.

சடங்குகளின் அடியாகவே கலைகள் தோன்றியுள்ளன. என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சடங்கில் இடம்பெறும் நிகழ்வுகள் அனைத்திலும் கலையம்சத்தையே காணமுடிகின்றது. சடங்குக் காலங்களில் பூசாரி உடுக்கை அடிப்பதும், மணி, பறை அடிப்பதும், தெய்வம் ஏறப்பட்டு ஆடுவதும், மந்திரம் சொல்லிக் கட்டுவதும், ஊர்வலம் வருதலும், தோரணம் கட்டுவதும், தவநிலை ஏறுவதும், தீப்பாய்வதும், இவையெல்லாம் பார்ப்போருக்கு கலையம்சத்தையே வெளிக்காட்டுகிறது. கலையும் சடங்கும் பின்னிப்பிணைந்த ஒன்றாக இங்கு காணப்படுகின்றது.

சடங்குக் காலங்களில்தான் வரலாற்றுக்கூத்துக்கள் இடம்பெறும். தருமத்தைக்காக்கவும் அதர்மத்தை அழிக்கவும், எழுந்த கூத்துக்களில், "தருமபுத்திர நாடகம்" எனும் கூத்து தர்மத்தைக்காத்து அதர்மத்தை அழிப்பதாக இக்கூத்து இடம்பெறுகிறது. கண்ணகியம்மன் கோயில்களில், அர்ச்சுனன் தவசு என்ற கூத்து, சடங்குக்காலங்களில் தெய்வம் ஏறப்பெற்று ஆடுவோர்கள் நிகழ்த்திக் காட்டுவர். அதைவிட வந்தாறுமூலை விஸ்ணு விழாவில் கண்ணன் உரலோடு கட்டுப்பட்ட கதையை நாடகமாக கோயில் முன் வாசலில் நிகழ்த்திக்காட்டுவர்.

அத்தோடு கந்தர் சஷ்டி விரதம் இறுதியில் சூரன் போர் முருகன் திருமணம் என்பன தெய்வீக அம்சத்தை வெளிப்படுத்துவதாக இந்தக் கலை நிகழ்வு இடம் பெறும். மக்கள் மத்தியில் கலையுணர்வு கள் வெளிப்படுத்தும் ஒரு களமாக கோயில் சடங்குகள் அமைவதையும் நாம் காணலாம்.

## மட்டக்களப்புச் சமுகத்தில் கூத்தக்களின் இடம்

மட்டக்களப்ப பிரதேசத்தில் கூத்துக்கள் முக்கிய இடம் வகிக்கின்றது. இங்கு விடிய விடியக் கூத்து ஆடப்பட்டன. பெரும்பாலும் கிராமப் புறங்களில் நடைபெற்ற இக் கூத்துக்கள் ஒரு சமூக விழாவாகவே நடந்தது வட்டமாக உயர்த்தப்பட்ட குரந்தோலை, சேலை வண்ணக்டதாசிகளால் அலங்கரிக்கப்பட்டதுமான மேடையில் பார்வையாளர் சூழ்ந்திருக்க கூத்துப்பழக்கிய அண்ணாவியார் இடுப்பில் மத்தளத்தைக் கட்டியபடி பக்கப்பாட்டுக்காரர், தாளக்காரர், ஏடுபார்ப்போர் என்பவர்கள் மேடை மீது நடுவே நிற்க, கூத்தாடுபவர் அவர்களைச் சுத்திச் சூழ்ச்திருக்கும் மக்களைப் பார்த்தபடி ஆடிப்பாடி கூத்தை ஆடுவர். கூத்தில் பின்னணி வாத்தியங்களாக மத்தளம், சல்லாரியை மட்டுமே பயன்படுத்தவர். கூத்தாடியவர் அதே உடை ஒப்பனையுடன் பிற்பாட்டுக்காரராகவும் பணிபுரிவர் கூத்தில் ஆண்கள் மட்டுமே பங்கு கொண்டனர்.

கூத்தின் பார்வையாளராக கிராமப் பொதுமக்களே பாய் தலையணை கொண்டு போட்டு சௌகரியமாக அமர்ந்திருந்தும், படுத்திருந்தும் கூத்தைப் பார்த்து மகிழ்வர். கிராமிய மக்கள் புராண

இதிகாசக் கதைகளை அறிந்திருப்பர். கூத்துக்களும் மக்களுக்கு விளங்கக்கூடியதான அவர்கள் அறிந்த புராணக்கதை வரலாற்றுக் கதைகளையே வைத்து கூத்தாடுவர். கூத்தக் கென உடை ஒப்பனை ஆபரணம் மூடி ஆயுதங்கள் என்பனவும் தனித்துவமாக உள்ளது. ஒவ்வொரு பாத்திரமும் தன்னைப் பற்றிய அறிமுக விருத்தத்தைப் பாடியதும் ஒரு நீண்டதாளக் கட்டுக்கு ஆடிய பின்னரே தருப் பாடலைப் பாட ஆரம்பிக்கும். மேடை மீது நடுவில் நிற்கும் சபையோரினால் இத்தாளக்கட்டுக்கள் கூறப்படும். பிற்பாட்டுக்காரர் கூத்தர் பாடும் பாடலை முடிக்க முன் அவர்களும் சேர்ந்து பாடுவார். இது ஒரு உற்சாகத்துடன் பாடுவர். ஒலி வாங்கி ஒலிபெருக்கி இல்லாததால் முன்னர் அவர்களின் உச்சதொனியில் பாடுவர். இது மக்களுக்கு ஒரு இனிமையாக இருக்கும்.

சமூகத்தில் கூத்திற்கு ஒரு முக்கிய இடம் இருந்தது. முன்னர் சமூக மக்களுக்கு பொழுதுபோக்கு நிகழ்வாக இது இருந்துள்ளது. அறுவடை முடிந்ததும். ஊர்மக்கள் ஒன்றுகூடி கூத்து ஆடுவதற்கான ஒழுங்கினை அமைத்துக் கொள்வர். இது அந்தக் கிராம பெரியவராக இருப்பார். இந்த வகையில்கூத்து ஆடுவதங்கு என்றே ஆட்களைத் தெரிவு செய்வர். மட்டக்களப்புக் கூத்து மக்கள் மத்தியில் பெரும் பங்கினை வகிக்கின்றது.. இங்கு தென்மோடி, வடமோடி கூத்துக்கள் முக்கிய இடம் பெற்றாலும் பாத்திரமேற்று ஆடும் கூத்தர்களின் குடும்பங்கள் கூத்தாடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

அத்தோடு சமூக ஒற்றுமைக்கும், சமூக உறவுக்கும், திருமணத்திற்கு ஆள் தெரிதலும், ஏனைய சாதிகளுக்கும் பங்கு உண்டு. கூத்துப் பழகி சதங்கை கட்டி ஆடும் பொதும் ஒத்திகை பார்ப்பும் போதும் மக்கள் மக்கிய இடம் பெறுவர். சமூக உறவினரை ஏற்படுத்த கூத்து ஒரு பாலமாக இடம் பெறுகின்றது. கூத்ததடுபவர் தமது உறவுகளுக்கு அறிவித்து அவர்களையும் தனது கூத்ழைபார்ப்பதற்கு அழைப்பு விடுப்பர் அப்பொது ஏனைய உறவுகளும் கூத்தை வந்து பார்த்து மகிழ்வர்.

மேடை அமைக்கும்போது ஊர்பொதுமக்கள் உதவி செய்வர். அத்தோடு அவ்வூரில் சலவை செய்யும் வண்ணானும் பங்கு கொள்வான். இவன் ஊருக்கு தெரியப்படுத்த இவனே இங்கு முக்கியமாகின்றான். மற்றும் ஒரு பெண்ணுக்கு மணமகளைத் தெரிவு செய்ய இக்கூத்தே ஒரு இணைப்பாக இடம்பெறுகின்றது. பொழுது போக்கிற்காக ஆடப்படும் இக்கூத்து, கூத்தருக்கு பொருளாதார வசதியையும் பெற்றுக்கொடுக்கிறது. கூத்தாடுபவரின் உறவினர்கள் கூத்தாடுவதைப் பார்ப்பது மட்டுமல்லாது பல பெறுமதியான பரிசுப் பொருட்களையும் வழங்குவர், இதனை மூலம் கூத்து சமூகத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது.

***திரு.K.பரமனாந்தம் M.A***
***ஆசிரியர்,***
***மட்/கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.***

# கண்டலடி கிராமம்

பண்டித்தீவு என்னும் கடற்கரை அருகாண்மையில் மேற்குப்பக்கத்தில் சுற்றிவரவுள்ள ஆறு ஒன்று உள்ளது அந்த ஆற்றில் மீன், நண்டு, இறால் இவைகளெல்லாம் அதிகமாக இவ் ஆற்றில் உற்பத்தியாகும். ஆறு அவற்றைச் சுற்றிவர உள்ள இடங்களில் கண்டல் கண்ணாக் காடு உள்ளது. இவ்வ ஆற்றில் அதிகமாக உண்டாகும் மீன் இனம் முறாக்கன் மீன் இனமாகும். இதன் காரணமாக இவ் ஆற்றுக்கு முறாணை எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ் ஆற்றினைச் சுற்றி வர உள்ளது கண்டல் கணணா காடு ஆகும். இதன் காரணமாக இதற்கு அண்மையில் உள்ள இடத்திற்கு க்ண்டலடி என பெயரிடப்பட்டள்ளது. ஆரம்பத்தில் கண்டலடி கிராமத்தில் குடியேறிய மக்கள் எல்லாமாக ஆறு, ஏழு குடும்பங்கள் தான் அவர்கள் அந்தக் காலத்தில் குடியிருப்பதற்காக கம்புகளை வெட்டி சிறுகுடிசைகளை உற்பத்தி செய்து கூரை மேய்வதற்கு இலுக்குப் புல்களை வெட்டி கூரை மேய்த்து அதில் சீவித்து வந்தார்கள் அந்தக் குடும்பங்களில் வேடுவ மற்றும் கிறிஸ்தவக் குடும்பங்களும் இருந்தன. இதில் வேடுவ இனத்தவர்கள் தேன், இறைச்சி, கிழங்கு வகைகளை காட்டிற்கு சென்று எடுத்ததுடன் இவைகளை சேமித்து வைத்து மற்றவர்களுக்கும் கொடுத்ததுடன் தமது காலத்தினை கடத்தி வந்தனர். மற்றைய குடும்பத்தினர் ஆற்றில் மீன்களைப் பிடித்தும் கரவலை இழுத்தும் மீன் பிடித்து விற்று தங்கள் சீவியங்களை களித்து வந்தார்கள். அக் காலத்தில் கண்டலடி கிராமத்தில் உள்ளவர்களின் பெயர்கள் வயிரர், வயிரி, பத்தர், தெய்வி, வாப்பியர், மாரிபக்தி என்னும் பெயர்களில் இருந்தார்கள். கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பெயர் விபரங்களை பார்க்கும் ஆணையர், செபமாலை, அருளப்பு, யூசை அன்னம்மா, பயர் போன்றவையாகும். இவர்களில் சிலர் வாகரையிலும் வசித்து வந்தார்கள். அவர்களுள் அந்தோச்சி யார் என்பவர் குறிப்பிடத்தக்கவர். அடுத்து பேதுருப் பிள்ளை உடையார் அவருடைய மகன் சந்தியாப்பிள்ளை விதானையார் ஆவார். அடுத்து செல்லத்துரை ஏனபவர் மேசனாக கடமையாற்றி வந்தார். மற்றும் கணபதி உபாத்தியார், செல்லப்பா வாத்தியார் என்போர் பாடசாலையில் கடமையாற்றி வந்தனர். அந்தக் காலத்தில் பள்ளிக்கூடமாக வாகரையில் கிறிஸ்தவ பாடசாலை ஒன்றுதான் இருந்தது. வாகரையில் உள்ளவர்கள் எல்லாம் வாகரைக்கு சென்று கல்வி கற்று வந்தார்கள். 1980 ஆண்டில் கண்டலடி கிராமத்தில் புதிய பாடசாலை கட்டப்பட்டது. பாடசாலையை கண்டலடி கிராமத்தில் கட்டுவதற்காக அரும்பாடுபட்டவர் S.சேனாதிராசா தவிசாளர் ஆவார். இவருடைய ஊக்கத்திலேயே இப்பாடசாலை கட்டப்பட்டது. இவரது மூத்த மகளின் பெயரான அருந்ததி என்னும் பெயரே இப்பாடசாலைக்கு சூட்டப்பட்டது.

இக்காலத்தில் கல்வி கற்றும் கொடுத்த ஆசிரியர்கள் கிறகரி தவராசா, ராசாத்தி, பரிமளா, மோகன், வசந்தராசு, ரூணி போன்ற ஆசிரியர்களை குறிப்பிடலாம்.

தற்போது இக் கண்டலடி கிராமமான சிலர் அரச சேவையிலும் உள்ளனர். மற்றும் பல்வெறு தொழில்களிலும் ஈடுபட்டு வருவதனை காணலாம். கண்டலடி கிராம மக்கள் கல்வியிலும் கலாசாரத்திலும் நடைமுறையிலும் அக்காலத்தை விட திருந்தியுள்ளனர் என்பதனை மனப்பூர்வமாக இக் கட்டுரையில் தெரிவித்தக் கொள்கிறேன். நன்றி.

**கலாபூசணம்.க.இளையதம்பி**
**கண்டலடி.**

# வாகரை வாழ் வளம்

தந்தான தான தன தானா - தன
தந்தான தான தன தானா - தன
தந்தான தான தன தானா

வாகரையின் வளம் பாட வந்தோம் - இங்கு
வண்ணமுறும் காட்சிகளும் கண்டோம் - இங்கு
வண்ணமுறும் காட்சிகளும் கண்டோம்.

தந்தான........

தோகையரின் பெரும் குணமும் உண்டு - எழில்
தேன் மொழியில் பாடிடவும் மாதருண்டு - எழில்
தேன் மொழியில் பாடிடவும் மாதருண்டு

தந்தான........

மானோடு மரையுலாவும் தேசம் - அழகு
மாங்குயிலும் கிளியும் பாடிப் பேசும் - அழகு
மாங்குயிலும் கிளியும் பாடிப் பேசும்

தந்தான........

தேனோடு பூவின் மணம் வீசும் - இங்கு
தேவருக்கும் வாழ மனம் நாடும் - இங்கு
தேவருக்கும் வாழ மனம் நாடும்

தந்தான........

வண்ண மயில் ஆடிவரும் காடு - நல்ல
வண்ணம் கொண்டு ஓடிவரும் ஆறு - நல்ல
வண்ணம் கொண்டு ஓடிவரும் ஆறு

தந்தான........

எண்ணமதை கொள்ளை கொள்ளும் ஊரு - நீ
எங்கும் இவை கண்டதுண்டா கூறு - நீ
எங்கும் இவை கண்டதுண்டா கூறு

தந்தான........

கலையோடு கல்வி வளம் நன்று - இங்கு
கலைவளர்த்த பெரியவரும் உண்டு - இங்கு
கலைவளர்த்த பெரியவரும் உண்டு

தந்தனா........

கொடையோடு வாழும் மாந்தர் என்று -பலர்
கூற நாமும் கேட்டோமே இன்று - பலர்
கூற நாமும் கேட்டோமே இன்று

தந்தனா..........

கயலோடு செத்தல் ஓட்டி நண்டு - மேலும்
கணையானும் றாலும் ஓடும் ஆறு - மேலும்
கணையானும் றாலும் ஓடும் ஆறு

தந்தனா...........

வயலோடு வளம் கொழிக்கும் ஊரு - இந்த
வளம் கண்டு உள்ளமதை நாடு - இந்த
வளம் கண்டு உள்ளமதை நாடு

தந்தனா...........

கறவையினம் பால் சொரிந்து மேயும் - இளம்
கன்றுகளும் துள்ளி ஓடிப் பாயும் - இளம்
கன்றுகளும் துள்ளி ஓடிப் பாயும்

தந்தனா............

பறவையினம் குதுகலித்து ஓயும் - அந்த
பசுங் காவில் அழகு நிலா காயும்

தந்தனா...........

பணிச்சங் கேணிப் பாலம் மேலே காற்று - உயர்
பாவலர் போல் பாடிவரும் பாட்டு - உயர்
பாவலர் போல் பாடிவரும் பாட்டு

தந்தனா...........

இனிக்கும் இன்பம் ஊறிவரும் பார்த்து - இவை
அத்தனையும் உண்மை என்று போற்று - இவை
அத்தனையும் உண்மை என்று போற்று

தந்தனா.............

**தெ.தில்லைநாயகம்**
**ஆசிரியர்**
**மட்/வம்மிவட்டவான், வித்தியாலயம்**
**கதிரவெளி.**

# தமிழ் உரைநடை வளர்ச்சிப் போக்கு



சங்க காலத்திலிருந்து! நவீனயுகம் வளர நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் இலக்கியமானது செய்யுள் நடை, உரை நடையென இரு பெரும் பிரிவுகளையுடையது. என்பதனை வரலாற்று மூலகங்களால் அறிய முடியும்.

சங்ககால உரை நடை நூல்கள் எவையும் எமக்குக் கிடைக்கப் பெறாதமையால் சங்கமருவிய காலத்தில் எழுந்ததென இன்று பலரும் குறிக்கும் தொல்காப்பியம் உரை நடை பற்றி கூறுவதாவது

"பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாவின்றெழுந்த கிளவியாலும்
பொருளொடு புணராப் பொய்ம் பொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் – என்று
உரை நடை வகையே நான்கென மொழிப"

என நால்வகை உரை நடைகள் பற்றி குறிப்பிடுகின்றது. எனவே அவற்றிற்கு உதாரணமாகக் கூறக்கூடிய உரை நடைகளைப் பண்டைய இலக்கியங்களில் நாம் காண முடியாதுள்ளது.

இற்றைவரை கிடைத்தள்ள நூல்களிற் சிலப்பதிகாரத்தில் வரும் உரைநடைப் பகுதிகளே காலத்தால் முற்பட்ட உரைநடை எனக் குறிக்கத்தக்கனவாகும். அவையும் செய்யுள் நடை போன்றே காணப்படுகின்றன.

"உரைப்பாட்டுமடை" எனவும் "கட்டுரை" எனவும் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் பகுதிகளில் அக்கால உரைநடையினைக் காணமுடிகின்றது. உரையும் பாட்டும் கலந்து வருவது "சம்பு" நடையென அழைக்கப்படும். சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு உரைப்பகுதியை நோக்கலாம்.

"குடத்துப் பால் உறையாமையும்
குவியிமிலேற்றின் மடக்கண் நீர் சோல்தலும்
உறியில் வெண்ணெய் உருகாமையும்
மறி முடங்கி ஆடாமையும்
ஆன் மணி நிலத்து அற்று வீழ்த்தாலும்
வருவதேமார் துன்பம் உண்டென
மகளை நோக்கி மனமயங்காதே
மண்ணின் மாதர்க்கு அணியாகிய

கண்ணகியும் நான் காண

ஆயர் பாடியில் எருமன்றத்து

மாயவனுடன் தம்முன் ஆடிய

வால் சரிதை நாடகங்களில்

வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடாடிய

குரவை ஆடுதும் யாமென்றாள்

கறவை கன்று துயர் நீங்குக எனவே"

சிலப்பதிகாரம் கி.பி. நாலாம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் எழுந்தது என்பர். அதில் இடம்பெறும் உரை நடைப்பகுதிகளைப் பார்க்கும் பொது ஆரம்ப கால உரை நடைகள் செய்யுள் நடை போலவே அமைந்திருத்தல் கூடும் என அனுமானிக்க முடிகின்றது.

பல்லவர் காலத்தில் (கி.பி.600-900) தோன்றிய இறையனார் களவியல் உரையே தமிழில் முதன் முதலாகத் தோன்றிய உரைநடை நூல் என்று குறிப்பிடக் கூடிய பெருமையைப் பெறுகின்றது. இந் நூலைத் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு மைக்கல் எனலாம்.

பின்னர் தோன்றிய இலக்கிய, இலக்கண உரையாசிரியர்களுக்கெல்லாம் வழிகாட்டி யோல இந்நூலின் உரை நடை அமைந்துள்ளது. சூத்திரங்களுக்கு எழுதப்பட்ட உரையே ஆயினும் தனித்தன்மை வாய்ந்தது.

மிக இறுக்கமானது, தர்க்க ரீதியானது வினாக்களை எழுப்பி விடை கூறுவது சந்தேகங்களைக் கிளப்பி அவற்றை மறுத்துத் தனது கொள்கையை நிறுவுவது. ஓரளவுக்கு வட சொற்கலப்பு காணப்படினும் அருந்தமிழ் உரைநடை எனப்போற்றத்தக்கது. இரண்டு, மூன்று அடிகளில் வரும் முதலாம், இரண்டாம் சூத்திரங்களுக்குத் தனித் தனி இருபது, முப்பது பக்கங்களில் உரை பிரித்திருப்பதிலிருந்து இவ்வுரை நடையின் பெருமையை உணரலாம்.

பல்லவர் காலத்தில் வடசொற்களைத் தமிழ்ச் சொற்களோடு கலந்து எழுதும் வழக்கம் பெருகி விட்டதெனலாம். இவ்வாறு வரும் உரைநடை "மணிப்பிரவாள உரைநடை" என அழைக்கப்பட்டது. (மணி - இரத்தினம், பிரவாளம் - பவளம்) இரத்தினக் கற்களையும் பவளமணிகளையும் கலந்து ஒரு மாலையிற் கோத்தது போன்று வருதலின் இவ்வாறு அழைக்கப்பட்டது. ஸ்ரீ புராணம், கயசிந்தாமணி என்ற இரு சமய நூல்கள் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட உரைநடை நூல்களாகும்.

பல்லவர் காலத்தில் எழுந்த ஸ்ரீ புராணம், கயசிந்தாமணி தோற்றத்தின் பின்னர் அக்காலந்தொட்டு பதினேழாம் நூற்றாண்டுவரை தமிழில் உரைநடை நூல்கள் எவையும் தோன்றவில்லை என்றே கூற வேண்டியிருக்கிறன்றது. உரை நடை நூல்கள் தோன்றிப் பின் ஏட்டில் எழுதிப் பாதுகாக்கும் சிரமம் காரணமாகப் பேணப்படாது அழிந்தும் இருக்கலாம். ஆயினும் இவ்விடைக்காலத்தில் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களுக்கும் சிறந்த உரைகள் எழுதப்பட்டன.

உரையாசிரியர்களுள் பேராசியரியர், இளம்பூரணம் சேனாவரையர் நச்சினாக்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் என்போர் சிறந்த உரையாசிரியர்களாகப் போற்றப்படுகின்றார்கள். பேராசிரியர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய நால்வரும் தொல்காப்பியத்துக்கு உரை வகுத்துப் புகழ் பூண்டோராவர். நச்சினார்க்கினியர் ஆகிய நால்வரும் தொல்காப்பியத்தக்கு உரை வகுத்துப் புகழ் பூண்டோராவர். நச்சினார்க்கினியர் பத்தப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி என்பவற்றுக்கும் உரை எழுதியுள்ளார். பேராசிரியர் திரக்கோவையாருக்கும், பரிமேலழகர் திருக்குறள் பரிபாடல் என்ற இரு நூல்களுக்கும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தக்கும் அரிய உரைகளை எழுதியுள்ளார்.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் அச்சுயந்திர சாலைகளை நிறுவனர். இதன் போது றொபேட் நொபிலி என்னும் எனும் பெயர் உடைய தத்துவ போத சுவாமிகள் கொன்ஸ்ரன்சியஸ் பெஸ்கி எனும் பெயர் உடைய வீரமாமுனிவர் ஆகிய இரு ஐரோப்பிய பெரியார்களும் பிற்கால உரை நடையின் தந்தையர் எனப் போற்றப்படுகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் அவர்களை “வசன நடை கைவந்த வல்லாளர்” எனச் சூரிய நாராயன சாஸ்திரியார் போற்றுகின்றார். சைவம், தமிழும் பற்றிச் சாதாரண மக்களும் நன்கறிய வேண்டும் என்னும் பெரு நோக்குடன், அவர்கள் வாசித்து உணரக் கூடிய இலகுவான உரைநடையினை நாவலர் அவர்கள் கையாண்டனர், சைவவினாவிடை, பாலபாடம் போன்றன மாணவர்களுக்காக எழுதப்பட்டவையாகும். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற செய்யுள் நூல்களைப் பலரும் கற்றுணரத்தக்க வகையில் உரைநடையில் எழுதியுள்ளார்கள்.

ஆங்கில மொழியை எழுதும் போது கையாளப்பட்டு வந்த நிறுத்தற்குறிகளை தமிழ் உரைநடையை எழுதும் போது பயன்படுத்திய பெருமையும் நாவலர் அவர்களையே சாரும். தேவையான இடங்களில் வட சொற்களும் அவருடைய உரை நடையில் கலந்துள்ளமையைக் காணலாம்.

சுவாமி வேதாசலம் என்ற தம்முடைய பெறரை தமிழ்ப் பெயராக மறை மலையடிகள் என மாற்றிக் கொண்டார். அடிகளின் உரைநடையும் பாமரர் வாசித்து விளங்க முடியாதவாறு அமைந்திருப்பதைக் காணலாம். இக்காரணங்களால் தனித் தமிழ் இயக்கம் தோல்வி கண்டதாயினும் தேவையற்று வடசொற்களைப் புகுத்தாமல் அவற்றுக்கேற்ற பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திக் குறைந்த அளவு வட சொற்கலப்புடன் எழுத எழுத்தாளர்களைத் தூண்டி வெற்றி கண்டது என்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர்.

உசாத்துணை நூல்கள்:

1. தமிழ் உரைநடை வரலாறு - வி.செல்வநாயகம்
2. தமிழ் உரைநடை இலக்கியம் - தே.க. நிறுவனம்

**திரு.சி.ஜீவானந்தம்** (B.A DIP IN 1st Year)
**மட்/கதிரவெளி விக்கேஸ்வரா வித்தியாலயம்**
**கதிரவெளி.**

சிறுகதை

# ராமுவின் காணாமல் போன மூக்கு



ஒரு சர்க்கஸ் குழுவில் ராஜா ராமு ராமா என்று மூன்று கோமாளிகள் இருந்தனர். சர்க்கசை பார்க்க வரும் மக்களுக்கு வேடிக்கை விளையாட்டுக்கள் காட்டுவது அவர்களது வேலை. அவர்களது கோமாளித்தனங்களைப்பார்த்து எல்லோரும் சிரித்து மகிழ்வார்கள். அதிகாலையில் சிங்கம் கர்ச்சிக்கும் சத்தம் கேட்டதும் கோமாளிகள் நித்திரை விட்டு எழுவார்கள். எழுந்ததும் தங்களது கோமாளி உடைகளை அணிந்து கொண்டு பகிடிச்செயல்களைச் செய்ய ஆயத்தம் செய்து பயிற்சி எடுப்பார்கள் அவ்வாறு ஒரு நாள் ஆயத்தம் செய்த போது ராமுவிற்கு எதிர்பாராத அதிர்ச்சி ஏற்பட்டது. ராமுவின் மூக்கை காணவில்லை.

ராமு அங்கும் இங்கும் பித்து பிடித்தவன் போல் நடந்தான் அவனுக்கு வெட்கமாய் இருந்தது. ஒரு கடதாசிப் பையை எடுத்து தனது மூக்கை மூடிக்கொண்டு வந்தான். ராஜாவிற்கு புரியவில்லை "என்ன நடந்தது ராமு?" என்று கேட்டான். "எனது மூக்கை காணவில்லை!" என ராமு மெதுவாக கூறினான். அதைக்கேட்டதும் ராஜாவும் ராமுவும் சிரிக்கத் தொடங்கினார்கள். "மூக்கில்லாத மனிதன்!" என கேலி செய்யதார்கள். "உண்மையாகவே எனது மூக்கு தொலைந்து விட்டது." என அவர்களிடம் ராமு கவலையோடு கூறினான். ராஜாவிற்கு கோபம் ஏற்பட்டது. "நாங்கள் கோமாளிகள் சிவப்பு மூக்கு இல்லை என்றால் கோமாளிகளாக இருப்பதில் அர்த்தம் இல்லை" என ராமுவிற்கு ஏசினான். "நான் என்ன செய்வது?" எனது மூக்கை காணவில்லை என்றால் மூக்கு இல்லாது என்னால் விளையாட்டு காட்ட முடியும். என ராமு கூறினான்.

ராஜா ஒரு சிறிய கதிரையின் மேல் ஏறி நின்று நான் தான் கோமாளிகளின் தலைவன் நீ உனது சிவப்பு மூக்கை தேடி எடுத்துக்கொண்டால் தான் உன்னை மீண்டும் சேர்த்துக் கொள்வேன் என சத்தமாக கத்தினான்.

உடனே ராமு கண்களை கைகளால் பொத்திக் கொண்டு அழத்தொடங்கினான். நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டையைக் கண்டதும் ராமு மயக்கமடைந்து விழுந்தான். ராமுவின் கண்களில் இருந்து கடல் போல் கண்ணீர் பாய்ந்தது.

ராமா மயக்கம் தெளிந்து எழுந்து ராமுவை சமாதானப்படுத்தினான். ராஜாவிற்கு ராமுவைப் பார்க்க கவலையாக இருந்தது "அழவேண்டாம் ராமு....." நாங்கள் உனது மூக்கை தேடிப்பார்ப்போம். இரவு படுக்கும் போது சிவப்பு மூக்கை எங்கே வைத்தான்? எனக் கேட்டான்.

"படுக்கும் போது அருகில் இருந்த மேசையில் மூக்கை கழட்டி வைத்தேன்" என ராமு கூறினான். "சரி... வா!" சர்க்கேஸ் முழுவதும் சுற்றி மூக்கை தேடிப்பார்ப்போம்!" என மூவரும் கிளம்பினார்கள். முதலில் அவர்கள் சர்க்கஸ் மைதானத்தை சுற்றி தேடினார்கள்.

அங்கே ஒரு சர்க்கஸ் விளையாட்டுக்காரன் தனது குரங்குடன் பயிற்சி செய்து கொண்டு இருந்தார்கள். அவரது கையில் சிவப்பு மூக்கு போன்ற பொருள் இருந்தது. "அதோ! எனது

மூக்கு.....!" என சத்தம் இட்டவாறே அங்கு ஓடிச்சென்றான். ஆனால் அவரது கையில் இருந்தது ராமுவின் மூக்கு அல்ல அவை சிவப்பு நிறப்பந்துகள்.

ராமுவிற்கு ஏமாற்றமாக இருந்தது கவலையுடன் அவரிடம் கேட்டான் "எனது மூக்கை காணவில்லை நீங்கள் காண்பீர்களா?" "என கையில் சிவப்பு நிற பந்து தான் இருக்கின்றது." என அவர் கூறினார். இங்கிருந்த குரங்கு கடக்கண்ணால் பார்த்துக் கொண்டு இருந்தது ராமுவிற்கு குரங்கின் மேல் சந்தேகம் ஏற்பட்டது.

அந்தக் குரங்கை பார்த்தாயா? அதன் பார்வையைப் பார்த்தாயா? குரங்கு தான் மூக்கை எடுத்திருக்கும். என ராமுவிடம் மாமா கூறினான். "இல்லை சரியான சான்று இல்லாமல் யாரையும் சந்தேகப்படக் கூடாது என்று ராஜா அவர்களிடம் கூறினான்.

"வாருங்கள் வேறு இடத்தில் தேடிப்பார்க்கலாம்." என அவர்களை அங்கிருந்து கூட்டிச் சென்றான். அங்கு அமைக்கப்பட்டிருந்த நீர்த்தடாகத்தில் ஒரு நீர் நாய் இருந்தது. இது தனது மூக்கில் சிவப்பு நிறப்பந்தை வைத்து விளையாடிக் கொண்டு இருந்தது. அந்தப்பந்தை சரி பாதியாக வெட்டினால் நல்ல மூக்காக இருக்கும். அதைக்கேட்டு பார்க்கலாம் வா! என ராமா ராமுவை அழைத்தான். அவர்கள் மூவரும் நீர் நாய்க்கு அண்மையாக சென்றார்கள். அன்பார்ந்த நீர் நாய் அவர்களே நீங்கள் வள்ளல் என்று கேள்விப்பட்டு இருக்கின்றோம். இவருடைய மூக்கு தொலைந்து விட்டது. உங்கள் மூக்கில் வைத்து விளையாடும் பந்தை தருவீர்களா? அதை இவருக்கு மூக்காக பயன்படுத்தலாம் என ராஜாவும் ராமாவும் மன்றாட்டமாக கேட்டார்கள்.

"நல்ல கேள்வி இது!" எவ்வளவு கொடை வள்ளல் ஆனாலும் தனக்கு தேவையானதை கொடுத்து விடலாமா? இவற்றை தந்தால் சர்க்கஸில் எனக்கு வேலையில்லாது போய்விடும். இந்தப்பந்தை தரமுடியாது. நீர் நாய் சொல்வதை கேட்டதும் அவர்கள் ஏமாற்றத்துடன் சர்க்கஸ் கூடாரத்திற்குள் சென்றார்கள். அங்கே சர்க்கஸ் முகாமையாளர் இருந்தார். அவர் சிவப்பு மூக்கு போன்ற ஒரு பொருளை வைத்திருப்பது தெரிந்தது.

அதோ எனது சிவப்பு மூக்கு என்று ராமு சத்தமிட்டவாறே ஓடிச்சென்றான் ஓடிய வேகத்திலேயே அவர் மேல் பாய்ந்தான். அவர் தடார் என கீழே விழுந்தார். என்ன விளையாடுகிறாயா? ராமுவிடம் கோபமாக கேட்டார். ராமு பயந்து நடுங்கினான். எனது சிவப்பு மூக்கு தொலைந்துவிட்டது நீங்கள் வைத்திருப்பது எனது என நினைத்தேன் என கவலையுடன் கூறினான். இது உனது மூக்கல்ல சிவப்பு அப்பிள் அதை நான் சாப்பிட்டுக்கொண்டு இருந்தேன். அது உனக்கு தெரியவில்லையா? என ஏசினார். ராமுவிற்கு அழுகை வந்தது எங்கு தேடியும் சிவப்பு மூக்கு கிடைக்கவில்லை கடதாசிப்பையினால் முகத்தை மூடிக்கொண்டு இருப்பது வெட்கமாக இருந்தது. கீழே விழுந்து ராஜாவின் கைகளைப் பிடித்து அழுதான். ராஜா எப்படியாவது மூக்கை தேடித்தா.

"சரி..... சரி..... அழ வேண்டாம்ராமு நாங்கள் மிருகங்கள் இருக்கும் இடத்திற்கு போய் தேடுவோம். என ராஜா கூறியவாறு ராமுவை அழைத்துச் சென்றான். அவர்கள் ஒவ்வொரு கூடுகளைக்கொண்டு சென்றார்கள்.

அப்போது ராமுவின் முதுகில் யாரோ மெல்லத்தட்டினார்கள். அவன் திரும்பிப் பார்த்தான். அவனருகில் பேசும் யானை கிரன் வந்து நின்றது. என்ன ராமு உனது மூக்கை தொலைத்து விட்டாயா? எனக் கேட்டது.

அந்த சிவப்பு மூக்கு இல்லாமல் விட்டால் எனக்கு வேலையே போய்விடும் எனப் பரிதாபமாக கூறினான். கிரன் அவனைப்பார்த்து சிரித்தது. கவலையை விடு ராமு இதோ உனது மூக்கு என்று கூறியவாறு தனது தலை மேல் இருந்த சிவப்பு மூக்கை அவனிடம் கொடுத்தது.

ராமுவிற்கு ஆச்சரியமாய் இருந்தது இது எப்படி உனக்கு கிடைத்தது. இதை எங்கே கண்டு எடுத்தாய் என்று கிரனிடம் கேட்டான். நான் காலையில் தேகப்பயிற்சிக்காக நடந்து சென்ற போது குரங்கார் இந்த மூக்கை வைத்து விளையாடிக்கொண்டு இருந்தார். இது உனது மூக்கு என்று எனக்கு தெரியும் அதனால் அவரிடம் இருந்து வேண்டி வந்தேன். இந்த மூக்கு எப்படி குரங்காருக்கு கிடைத்தது. ராமுவிற்கு ஒன்றுமே புரியாமல் இருந்தது. ராமு கோமாளியாரும் நீங்கள் சிவப்பு மூக்குகளை அணிந்து கொண்டு குரங்குச் சேட்டை செய்கின்றீர்களாம் அதைப்பார்க்கத்தான் மக்கள் வருகின்றார்களாம் தனது விளையாட்டுக்களை பார்ப்பதில்லையாம் அதனால் குரங்காருக்கு பொறாமை ஏற்பட்டது. அது தான் நீ தூங்கும் போது உனது கோமாளி மூக்கை களவெடுத்து விட்டார் இவ்வளவு கெட்டவரா? குரங்காரு என ராமு கேட்டார்.

இல்லை அவர் கேட்டவர் இல்லை போட்டி உணர்வு அவரை பொறாமை கொள்ளச் செய்கிறது. குரங்காருக்கு நல்ல புத்திமதி கூறியிருக்கின்றேன். எப்படி அவர்களை பார்த்து பொறாமை படக்கூடாது போட்டி உணர்வு இருக்கலாம் அது மற்றவர்களை பாதிக்கும் பொறாமையாக மாறக்கூடாது. உங்கள் திறமையைக்காட்டி முன்னேற வேண்டும். எனக்கூறினேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்டார்.

எனது மூக்கு கிடைத்துவிட்டது.....! " எனது மூக்கு கிடைத்துவிட்டது.....!" என சத்தமிட்டவாறு கடதாசிப்பையை கழட்டி வீசினான். ராஜாவும், ராமுவும், ராமாவும் துள்ளிக்குதித்து நடனமாடி மகிழ்ந்தார்கள்.

பொன்னம்பலம் துலாஞ்சலி
வாகரை மகாவித்தியாலயம்.


தூய மனதுடன் செய்யும் செயல்களினால், நன்மைகள் நம்மை நிழல் போல் தொடர்கின்றன.

-புத்தர்-

மன உறுதியுள்ளவன் மிகப் பெரிய கஷ்டங்களைக்கூட எளிதாகத் தாண்டி வெற்றி பெற்று விடுகின்றான்.

-இங்கிலாந்துப் பழமொழி-

# பண்பாடு



இந்து சமுத்திரத்தின் முத்தாம் என்றும்
இலங்கும் எங்கள் தேசம்!
முந்தையோர் கட்டிக்காத்த
எங்கள் சிறு தேசம்!

பல்லினங்கள் பௌவியமாய்
வாழும் எங்கள் தேசம்
சொல்லொணா துன்பமெல்லாம்
துவண்டு நின்ற தேசம்.

சிங்களவர், தமிழர், முஸ்லீம், பறங்கியர்
ஒன்று கூடி வாழ்ந்திடும் இனிய தேசம்
இனிய வளம் நிறைச்தோம்பும்
வணமிகு அருந்தேசம்

புத்தனின் போதனையை பௌத்த மதம் கூறும்
கீதையின் பெருமைதழன இந்து மதம் உரைக்கும்
குரானின் சிறப்புதனை இஸ்லாம்மதம் உணர்த்தும்
வைபிளின் மறைதனை கிறிஸ்தவமோ புலர்த்தும்

தேயிலை தென்னை இறப்பம் பெரும்
ஏற்றுமதி பொருளாம்
பெரும் வருவாயை ஈட்டி தரும்
மதிப்பு மிகு பொருளாம்.

முரண்பாட்டின் காரணத்தால்
முரண்பட்ட தேசம் - இனி
செளித்தோங்கும் காலமதால்
சிறந்து எழும் தேசம்

அன்பு எனும் நதியினிலே
அனைத்து இனமும் நீந்தி
என்றைக்கும் வாழ்ந்திடில்
இமயம் வரை உயரும்

இனமத பெதங்கள் யாவும் பறந்தே
இணக்கமாய் வாழ்ந்திடுவோம்
இறுதிவரை நாமென்றும்
இந்நில மீதிலே ஐக்கியமாக

ஒருவருக்கொருவர் நல்லதோர்
உறவினராய் வென்றும்
உதவிகள் பலதை செய்து
உவகை கொண்டாடிடுவோம்

அத்தனை பெருமை பெற்று
அழகு மிளிரும் தேசமதை
எத்தனை இடர்கள் படினும்
இமயம் போல உயர வைப்போம்.

**மகேஸ்வரம் அபிராமி**
**பால்சேனை GTMS**

# இந்து சமயத்தின் வரலாறு பற்றிய ஓர் பார்வை

இந்து மதம் உலகில் உள்ள மதங்களில் மிகத் தொண்மையான மதமாகும். இது தொன்று தொட்டு நிலவி வருகின்ற சமயம் என்பதால் சனாதன தர்மம் எனவும் அழைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்பும் பெருமையும், பழமையும் வாய்ந்த இந்து மதம் கடவுள் உண்மை என்பதனை ஏற்றுக் கொள்ளவதனால் வைதீக சமயம் எனவும் அழைக்கப்படுகிறது.


இந்து மதம் சைவம், சாக்தம், வைணவம், காணபாத்தியம், கௌமாரம், சௌரம் என பல சமயப் பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதனோடு சமய ஞானியர்கள் மகான்கள் அனுபூதிமான்கள் என்போரது சிந்தனைகளும், பல்வேறு இலக்கியங்களையும் கொண்டு அமைந்துள்ள இந்து மதம் சிறப்பு பெறுகிறது.

இந்து மதம் யுகங்கள் பல கடந்து நிலவி வருகின்ற சமயம் ஆகும். இது இந்தியாவிலே தோற்றம் பெற்று உலகலாவிய ரீதியில் பரந்து காணப்படுகிறது. இவ் இந்து மதமானது சமய தத்துவங்களையும் வழிபாட்டு மரபுகளையும் இந்துக்களின் நாகரீக பண்பாட்டு சிறப்புக்களையும் கொண்டு அமைந்ததால் இந்து மதம் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

இந்து மதமானது வேதம், ஆகமம், புராணம், சைவத்திருமுறைகள் போன்ற சமய இலக்கியங்கள் மூலமும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஞானியர்கள், சித்தர்கள் மூலமும் சிறப்புற்று திகழ வழி வகுத்தது எனலாம்.

இவ்வாறு பழமையும், பெருமையும் வாய்ந்த இந்து மதத்தின் தொண்மையை அறிந்து கொள்ள வேண்டுமாயின் சிந்து நதி பாயும் பிரதேசத்திற்குள் நுழைய வேண்டும். சிந்துவெளி காலம் என்பது இற்றைக்கு சிந்து நதி பாயும் பிரதேசத்தை (தற்பொழுது பொழுது பாகிஸ்தானில் உள்ளது) உள்ளடக்கியதெனவும் இப்பிரதேசத்தில் திராவிட மக்கள் உன்னதமான ஒரு நாகரீகத்தை ஏற்படுத்தினர் எனவும் தொல்பொருட்கள் சான்று பகர்கின்றது.

சிந்து வெளி பிரதேசத்தில் வாழ்ந்த திராவிட மக்கள் சமயம் பண்பாடு வாழ்க்கை முறை என்பவற்றில் சிறந்து விளங்கினர் எனவும் அவர்களது நாகரீகம் மேற்காசிய பிரதேசத்தில் இருந்து



வந்த வருகையும் திராவட மககளுககும ஏறபடட போர் வெள்ளம் என்பனவற்றால் சிதைவுற்றது என கூறப்படுகிறது.


சிந்து வெளியிலே சிறப்புற்ற விளங்கிய இப்பிரதேசத்தை உள்ளடக்கிய 1922ம் ஆண்டு இந்தியாவுக்கு வருகை தந்த அறிஞர்கள் அகழ்வாராட்சி மேற்கொண்டு ஹெரப்பா, முகஞ்சதாரோ என இரு சகரங்களிலும் முத்திரைகள், இலிங்கங்கள், தாயத்துக்கள், கற்சிலைகள், மட்பாண்டங்கள் கட்டிட சிதைவுகள், சிற்பிகள் கலைப் பொருட்கள் போன்றவற்றை கண்டுபிடித்தார்கள் எனவும் இதன் வாயிலாக இந்து மதம் சிறப்புற்று விளங்கியது எனவும் உலகிற்கு எடுத்துக் கூறினர்.

சிந்து வெளியிலே இந்து சமய வழிபாட்டு மரபுகளும் சமய நம்பிக்கைகளும் இடம் பெற்றமைக்கு ஆழ்வுச் சான்றுகள் ஆதாரமாக உள்ளன.

சிந்து வெளிகால மக்கள் தெய்வ உருவங்களை ஊர்வலமாக கொண்டு வழிபாடு செய்தனர் எனவும் சிவனது யோகி வடிவம் அம்மனது உருவங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட சான்றுகள் கிடைக்கப்பெற்றன. இலிங்கம் உருவங்களை வழிபட்டரெனவும் அவற்றை உடம்பிலே தாயத்துக்களை அணிந்தனர் எனவும் சான்றுகள் மூலம் அறிய முடியும் வீடுகளிலே பூஜையறைகள் காணப்பட்டன. இதற்கு ஆதாரமாக தீப தூப ஆராதனைகள் இடம் பெற்றன என்பதற்கு புதையுண்ட கட்டிட சிதைவுகள் சான்று பகர்கின்றன.

சிந்து வெளிகால மக்கள் கண்மம் மறுபிறப்பு போன்ற சமய நம்பிக்கைகளையும் பின்பற்றி வாழ்ந்தனர் அவர்கள் இறந்தவர்களின் உடம்பை தாளிகளிலே வைத்தப் போணினர். இவ்வாறு சமய வழிபாட்டு மரபுகளையும் நம்பிக்கைகளையும் பின்பற்றி வாழ்ந்தனர் எனக் கொள்ள முடிகிறது.

சிந்துவெளி காலத்தின் இந்துக் கலைகள் வளர்ச்சியடைந்தமைக்கு அகழ்வுச் சான்றுகள் ஆதாரமாக உள்ளனர். சிற்பம், இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற இடங்களிலே நிலத்திற்கு அடியிலான பல கட்டிட சிதைவுகள் காணப்பட்டன. இவை தள அமைப்பினைக் கொண்டு அமைந்திருந்தன. இருமாடி வீடுகளை கொண்ட கட்டிட அமைப்புகளும் 250 அடி நீளம், 70 அடி கொண்ட கட்டிட அமைப்புக்களும், 90 அடி நீளம், 90 அடி அகலம் கொண்டமைந்த கட்டிட அமைப்புகளும் அரச சபைகளும் களஞ்சிய சபையாக இருந்திருக்கலாம்.





சிந்து வெளியிலே மனித உருவங்கள், யோகவடிவங்கள், லிங்கம் என்பவை சிற்பங்களை வளர்சியை சான்று பகர்கின்றது. அடுத்து உலோகத்திலான நடனப் பெண்ணின் உருவம் நடனக் கலை வளர்ச்சிக்கு சான்றாகும். இவ்வாறான தெய்வ நம்பிக்கைகள் வழிபாட்டு மரபுகள் என்பவற்றை நோக்கும் போது இன்றைய இந்து சமயத்தோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதை காணலாம்.

தமிழ் நாட்டிலே இந்து சமயம் வரலாற்று ரீதியாக பல்வேறு கால கட்டத்தில் வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை காணலாம். சங்க காலம் முதல் சோழர் காலம் பல்லவர் காலம், பாண்டியர் விஜய நகர நாயக்க மன்னர்கள்

சங்ககாலம் என்பது கி.பி 1-3ம் நூற்றாண்டு வரையாக காலப்பகுதியாகும். இக்காலம் இயற்கை நெறிக்காலம் என கருதப்படுகிறது. இக்காலம் சமய நெறியின் காலமாக கருதப்படுகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறை வாழ்ந்த சங்ககால மக்கள் நில அமைப்புக்கேற்ப தெங்கங்களை வழிபட்டரென கூறப்படுகிறது.

இவ்வாறு சங்ககாலத்தில் முருகனுக்கும் சிவனுக்கும் கோயிலகள் இருந்ததாக சிலப்பதிகாலம், மணிமேகலை, திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பன கூறுகின்றன. இக்காலத்தில் பரிபாடல் என்னும் நூலிலே முருகன், திருமால், கொற்றவை என்னும் தெய்வங்கள் பற்றியும் கூறப்படுகிறது. சங்க காலத்தில் சூரியன், சந்திரன் என்பன வழிபட்டதோடு சிவலிங்கமும் வழிபடப்பட்டதை இக்கால மக்களின் வழிபாட்டு மரபுகளாக "வேலன் வெளியாடல்" "குரவைக் கூத்து" "குன்றக் குரவை" , யாக வழிபாடு, நடுகல் வழிபாடு என்பன இடம்பெற்றன என்பதற்கு சங்ககால இலக்கியம் சான்று பகர்கின்றது. அதனைத் தொடர்ந்து வருகின்ற காலம் பல்லவ மன்னர்கள் காலமாகும். பல்லவர் பாலம் என்பது கி.பி 4-9 நூற்றாண்டு வரையான காலமாகும். இக்காலம் இந்து சமய வரலாற்றில் முக்கியமான ஒரு கால கட்டமாகும். இந்து சமய வரலாற்றில் முக்கியமான ஒரு

கால கட்டமாகும். இக்காலத்தின் பக்தி இயக்கம் தோன்றி சைவ, வைணவ சமயங்கள் வளர்ச்சி பெற்று விளங்கிய சிறப்பினைக் காணலாம்.

இவ்வாறு சிறப்புடன் விளங்கிய பல்லவர் காலம் இரண்டு கால கட்டங்களில் ஆட்சி செலுத்தினர். இத்தகைய கால கட்டத்தில் களப்பினரின் ஆட்சி நிலவியதால் வைதீக மதங்களின் வீழ்ச்சியும் அவைதீக மதங்களின் எழுச்சியும் மேலோங்கி காணப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் தான் வைதீக மதங்களை காப்பாற்றும் பொருட்டு பக்தி இயக்கம் தோன்றியது எனலாம். நாயன்மார்கள் தலைமையில் இந்து சமய பக்தி இயக்கம். ஆழ்வர்களது தலைமையில் வைணவ பக்தி இயக்கமும் தோன்றியது. இவ்வாறு இவர்களால் முன்னெடுத்த பக்தி இயக்கம் பெரு வெற்றிகளையீட்டியது எனலாம்.

பல்லவ காலத்தில் இந்து சமயமும், கலாசாரமும் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. பல்லவ மன்னர்கள் ஆலயங்களை அமைத்ததோடு கால வளர்ச்சிக்கும் பங்காற்றினர். வேதம், ஆகமம், புராணம் போன்ற வந்தனர் சமயக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பினர்.

பல்லவ காலத்தில் அமைக்கப்பட்ட ஆலங்களில் திருச்சி, தரவானூர், மகேந்திர வாடி, மாமண்டுர் ஆகிய இடங்களிலே குடவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டதோடு இவை மண்டபம், தூண்கள் எனபவற்றை கொண்டு காண''பட்டன. மாமல்லபுரத்தில் ரதம் திரௌபதை ரதம், கணேச ரதம் என்பன அமைக்கப்பட்டன. காஞ்சிபுரத்திலே காஞ்சி கைலாசர் நாதர் ஆலயம், காஞ்சி வைகுந்தப் பெருமாள் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

பல்லவர் காலத்தில் கட்டிட சிற்ப இசை நடனக் கலாசாரம் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. மாமல்லபுரத்துக் கோயில்களிலும் காஞ்சிபுரக் கோயில்களிலும் இதிகாசக் கதைகளை சிற்பங்களாக செதுக்கப்பட்டன. இவ்வாறு பல்லவர் காலத்தில் இந்து சமயமும் கலாசாரமும், கலைகளும் வளர்ச்சி பெற்று சமய வரலாற்றிலே பல்லவர் காலம் முக்கியம் பெருகின்றது.

பல்லவர் ஆட்சி காலத்தை அடுத்து வருவது சோழராட்சிக் காலமாகும். இக்காலத்தில் இந்துமதம் பெரும் வளர்ச்சியுற்று காணப்பட்டது. காரணம் தமிழ் மன்னர்கள் பேரவை நிறுவி ஆட்சி செலுத்திய காலமாகும். சிற்பம், இசை, நடனம், ஓவியம் போன்ற பெருவளர்ச்சியுற்றதோடு தஞ்சைக் கோயிலிலே சிவனது புராணக் கதைக்ளும் சிவனது 5 வகையான நடன வகைகளும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுட்டன. தஞ்சை கோயிலிலே பிரமாண்டமான கருங்கல்லினை நந்தி உருவம் செதுக்கப்பட்டது. இதே போன்று இசைக்கலை நடனக் கலை வளர்ச்சிக்கும் இசை நடன மண்டபங்கள் அமைக்கப்பட்டதோடு ஒருவர் நாயகம் ஆலயம் தோறும் நியமிக்கப்பட்டு திருமுறைகள், திவ்விய பிரபந்தங்கள் ஆலயங்களிலே நிகழ்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. இக்கால கட்டத்திலே சைவ இலக்கியங்களும் வைணவ இலக்கியங்களும் சொரூப ரீதியாக தோற்றம் பெற்றது எனலாம்.

சோழர் காலத்தில் இந்து வெண்கல படிமக்கலை பெருவளர்ச்சியுற்றது எனலாம். சோழ அரசர்கள் சிற்பக் கலைக் கூடங்கள் அமைத்து சிற்பக்கலையை முதன் முதலாக ஆரம்பித்தனர். ஆகமங்கள் சிற்பசாஸ்திரங்களை பின்பற்றி பல்வெறு சிற்ப வெங்கல விக்கிர படிமக்கள் உருவாக்கபப்பட்டன.

இச் சோழர் கால படிமக்கலை தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் பொலனறுவைக் காலத்திவும் வளர்ச்சி பெற்றது எனலாம். பொலனறுவைக் கால ஆலயங்களிலே பல நடராஜ உருவங்களும், காரைக்கால் அம்மை போன்ற வடிவங்களும் கண்டு எடுக்கப்பட்டன. இலங்கைளிலும் படிமக்கலை வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சோழர் காலத்தில் கிடைக்கப்பெற்ற படிமக்கலை விக்கிரகங்களை என்பன ஆலய வழிபாட்டிலே முக்கியம் பெருகின்றது. தஞ்சை கோயிலிலே 63 நாயன்மார்களது திருவுருவங்கள் படிமங்களாக வைக்கப்பட்டு வழிபாடும் இடம்பெற்று வருகிறது.

இவ்வாற சோழர் காலத்தில் இந்து சமயம், இந்து கலாசாலம், சைவ, வைணவ இலக்கியங்களை இந்து படிமக்கலை என்பன வளர்ச்சி பெற்று இவ் சோழர் ஆட்சிக் காலம் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

இந்து சமய வரலாற்றின் அடுத்த கட்டமாக திகழ்வது நாயக்கர் காலம் இக்காலம் கி.பி 15-16 நூற்றாண்டு வரையான காலமாகும். இக்கால கட்டத்தில் முக்கியமாக நோக்க வேண்டிய காரணம் இக்கால பகுதி இஸ்லாமியர் இந்தியாவுக்குள் வருகை தந்தமையாகும். இவர்கள் இஸ்லாமிய மதத்தை பரப்புவதையும் இங்கு அமைந்த ஆலயங்களில் உள்ள பொக்கிசங்களை சூறையாடுவதையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டனர்.

எனவே இக்கால பகுதியில் இந்து சமய மரபு அழிக்கப்பட்டதோடு இந்து கலாசாரம் பாதிக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் இந்து சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாக்கும் நோக்கோடு நாயக்க வம்ச மன்னர்கள் ஆட்சியை கைப்பற்றி ஆட்சி செலுத்தினர். இவர்களது ஆட்சிக் காலத்திலே சோழர் ஆட்சிக்காலத்தில் அமைந்த பிரமாண்டமான ஆலயங்கள் அமைக்கப்பட்டன. உதாரணமாக மதுரை மீனாட்சியம்மன் சிறிரங்கம் போன்ற உயரிய ஆலயங்களை குறிப்பிடலாம். இவர்களது ஆட்சிக்காலத்தில் கட்டிட சிற்ப ஓவியங்கள் மிகவும் அதீ கூடிய வளர்ச்சியினை பெற்றுள்ளமையைக் காணலாம். இந்து மதம் சிறப்புற்று விளங்க வழிவகுத்த நாயக்க வம்ச மன்னர்கள் போற்றுதலுக்குரியவர்களே.

விஜய நகர நாயக்கர் காலத்திற்கு பிற்பட்ட காலம் பகுதியை நாம் அறிய வேண்டுமாயின் நாம் 16-20 நூற்றாண்டின் இரண்டாம் தசாப்த காலம் வரை பயனிக்க வேண்டியுள்ளது. இக்கால கட்டமானது மேலைத்தேய ஆட்சியாளர்களது கால கட்டமாக கணிக்கப்படுகிறது. மேல்நாட்டார் வருகையினால் இக்காலப்பகுதியில் அரசியல், கலாசாரம், கல்வி, சமயம், பொருளாதாரம் போன்ற துறைகளில் பல மாற்றங்கள் ஏற்படலாயின.

இவ்வகை மாற்றங்கள் படித்த மத்திய தர வகுப்பை சார்ந்திருந்த இந்துக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. பகுத்தறிவுக்கு புறம்பான கிறிஸ்தவ மதக் கருத்துக்களும், கிறிஸ்தவ மத குருமார்களின் திட்டமிட்ட செயற்பாடும் அச்சமயங்களுக்கு கிடைத்த அரசாங்க ஆதரவு, கிறிஸ்தவ கல்வி ஊடாக கிடைத்த வேலை வாய்ப்பு ஆங்கில மொழிக் கல்வியில் உபயோகம் இந்து சமய விழுமியங்களை அறிய மேல்நாட்டார் கொண்ட ஆர்வம், இலங்கை, இந்தியர் போன்ற நாட்டாரின் மேலைத்தேய கலாசார விருப்பம் இந்து சமய சமூக போன்ற சீர்திருத்தங்களைப்

சுதேசிய மதம், சுதேசிய கலாசாரம் என்பவற்றில் வீழ்ச்சி இத்தகைய சூழ்நிலையில் இந்து சமயத்தை சீர்திருத்தி வைதீக மதத்தின் பால் மக்கள் நெறிப்படுத்த வேண்டும் என்ற நோக்கொடு நவீன இந்து சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

ஐரோப்பிய ஆட்சியாளர்கள் வருகையாலும் அதனால் ஏற்பட்ட அரசியல் ஆதிக்கமும் இலங்கை, இந்திய வரலாற்றில் முக்கியமான திருப்பு முனையாக அமைந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்போரை விடவும் பிரித்தானியர் ஆட்சி இலங்கை, இந்திய வரலாற்றில் பாரிய வரலாற்று பிரிவாக அமைந்துள்ளது.

இவ்வாறான இக்கட்டான கால கட்டத்தில் இருந்து சமூக மக்களை நெறிப்படுத்தி அவர்களை சமயத்தின்பால் ஈடுபாடு கொள்ள நாடு தழுவிய ரீதியில் பல இந்து சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இவை 18ம் நூற்றாண்டின் பின்னரான காலப்பகுதியிலே தோற்றம் பெற்றவையாக காணப்படுகின்றது.

1828 - பிரம சமாஜம்

1865 - சமரச சன்மார்க்க சங்கம்

1867 - பிரார்த்தனை சமாசம்

1875 - ஆரிய சமாசம்

1875 - பிரம்ம ஞான சங்கம்

1886 - தொடக்கம் இன்றுவரை கிராம கிருஸ்ண சங்கம்

இவ்வாறான சீர்திருத்த இயக்கங்கள் பல வெற்றிகளை கண்டாலும் பூரணமாக செயற்பட முடியவில்லை. இதன் பின்பு 14ம் நூற்றாண்டின் காலப்பகுதியில் இலங்கையில் மதப் புணருத்தாரன இயக்கம் தோன்றியது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமய மறுமலர்ச்சியானது கல்வியினை மையமாக கொண்டே இடம் பெற்றது. 14ம் நூற்றாண்டில் லண்டன் மிஷனரி சங்கம், பப்ரிஸ்ட் சங்கம், வெஸ்லியன் மிஷனரி, அமெரிக்க மிஷனரி போன்றவை தமது கிறிந்தவ மதத்தை பரப்புவதிலீடுபட்டனர். எனவே இவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இந்து பௌத்த மதங்கள் பாதிக்கப்பட்டன.

அந்த வகையில் கிறிஸ்தவ் மிஷனரி கல்வி மூலம் எதிர்நோக்கிய சவால்களுக்கு முகம் கொடுபடபதற்கு இந்து சமயத்தவர்களும், அக்காலத்தில் ஒன்றுபடத் தொடங்கினர். அதன் பிரதி பலனாக இந்து சமயத்தின் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. கிறிஸ்தவ கல்வியினால் இந்து கலாசாரமும் பாரம்பரிய பழக்க வழக்கங்களும் பலவீனப்பட்டுப் போகும் என்ற அச்சம் ஏற்பட்டது. இதனால் மிஷனரி கல்விக்கு எதிரான இயக்கங்கள் பல தோற்றம் பெற்றன. அவ்வாறான இயக்கத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தலைமை ஏற்றார்.

இந்த வகையில் எழுச்சியடைந்த இந்து மதமானது நாட்டு விடுதலையோடு சுதந்திரம் பெற்றதோடு தற்பொழுது வடகிழக்கு மாகாணங்களிலே தமிழர் செரிந்து வாழுகின்ற பகுதிகளில் இந்து மதம் மேலோங்கிக் காணப்படுகிறது. குறிப்பாக நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் பக்தி சார்ந்த விடயங்களில் அதிக நாட்டம் கொண்டு காணப்படுகிறார்கள்.

கிராமப் புறங்களிலே அதிகளவிலான சிறிய ஆலயங்கள் அமைக்கப்பட்டு கிராமியத் தெய்வ வழிபாடு இடம் பெற்று வருகிறது. கிராமியத் தெய்வங்களாக மாரியம்மன், காளி, நரசிங்கர், வைரவர், முத்துமாரி போன்ற தெங்வங்கள் காவல் தெய்வங்களாகவும் வழிபடப்படுகிறது. பூஜை முறைகள், காவடி எடுத்தல், கற்பூர சட்டி கடுத்தல், தீ மிதித்தல் என்பனவும் நேர்த்தி வைத்தல் போன்ற பாரம்பரிய சமய முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பழமையும் பெருமையும் வாய்ந்த இந்து மதம் மிகவும் சிறப்பு பெறுகிறது.

*க.சசிகுமார்,*
*கண்டலடி,*
*வாகரை.*

- கோவைத் தனத்தை விடப் பெரிய பாவம் வேறெதுவும் இல்லை. கோவைகள் என்றுமே காப்பாற்றப்பட மாட்டார்கள். இது நிச்சயம்

-விவேகானந்தர்-

- மற்றவர் கையை எதிர்பார்க்காதே உன் கொள்கைகளை நீயே சாதித்துக் கொள்ள முயற்சி செய்.

-செயின்ட ஜஸ்ட-

- எவன் பிறரிடம் நெறிதவறி நடக்கிறானோ, அவன் தனக்குத்தானே கேடு விளைவித்துக் கொள்கிறான்.

-ஆத்ம சிந்தனை-

# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



**முழுப்பெயர்** : அந்தன் தம்பாப்பிள்ளை.

**கௌரவிக்கப்படும் துறை** : நாட்டுக்கூத்து

**விலாசம்** : வாலாமன்கேணி

**பிறந்ததிகதி** : 1959.02.14

**துறைபற்றிய அனுபவம்:-**

மயிலங்கரச்சை என்னும் இடத்தில் கணபதி தெய்வானை, வேலன் அந்தன் ஆகியோருக்கு பிறந்த இவர் இயல்பாகவே கூத்துக்கலைகளில் ஈடுபாடு உடையவர். இரண்டாம் வகுப்பு வரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தியாவட்டவானில் கல்வி கற்றார். இக்காலப்பகுதியிலேயே கூத்துக்களில் பங்குபற்றுபவராக இருந்துள்ளார். இவரது தகப்பனரான திரு வேலன் அந்தன் என்பவர் சிறந்த அண்ணாவியாராவார். இவர் மூலமாக கூத்து கலையினை அறிந்துள்ளார். அவரது தகப்பனாருக்கு பின்பு 21 வருடகாலமாக கூத்துக்கலைகளில் ஈடுபாடுடையவராக உள்ளார். அவரது முதல் கூத்து அரங்கேற்றம் வாலமன்கேணியில் வீரகுமரன் நாடகமாகும். மிகச்சிறப்பாக இக்கூத்தினை அரங்கேற்றியமை காரணமாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற அண்ணாவியாரானார். பின்பு இக்கலையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக கற்பக கழங்காரி கூத்து, அனுபுத்திரன் நாடகம், இராமர் நாடகம், கண்ணகி சரித்திரம், புவனேந்திரன் நாடகம், மணிமாலன் நாடகம், 14ம் போர் நாடகம் போன்றவற்றை அரங்கேற்றம் செய்துள்ளார். இவரது கூத்துக்கள் வாலாமன்கேணியில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவை சிவன்தீவு, வட்டவான் றால் ஓடை, வாகனேரி, பனிச்சங்கேணி, காயான்கேணி போன்ற இடங்களாகும். தற்பொழுது தனது கூத்துக்கலையினை பிள்ளைகளுக்கு பழக்கி வருகின்றார். 14ம் போர் கூத்தினை ஊரில் உள்ள 19 பேருக்கு இவர் தற்போது பழக்கி வருவது குறிப்பிடத்தக்கது. கூத்துக்களை பழக்குவதும் மேடைகளை அமைத்து கூத்துக்களை அரங்கேற்றம் செய்வதில் திறமையுள்ளவராக விளங்குகின்றார். கூத்துக்கான உடுப்புக்களை தெரிவு செய்வதிலும் பாத்திரங்களுக்கு அவற்றினை சரிவர பொருந்தச் செய்வதிலும் மிகவும் ஆர்வமுள்ளவராக இவர் உள்ளார். இவர் இக் கலையில் மாத்திரமன்றி விஷ வைத்தியத்துறையிலும் ஈடுபாடுடையவராக உள்ளார். பல்வேறு பாம்பு கடிகளுக்கு விஷ வைத்தியம் செய்துள்ளதாக கூறுகின்றார். தன்னிடம் பல பேர் வந்து சிகிச்சை பெற்றுள்ளதாக கூறும் இவர் பாம்பு கடிகளுக்கு வெவ்வேறு பாம்புகளுக்கு வெவ்வேறு விதமாக சிகிச்சையளிப்பதாக கூறுகின்றார்.



**முழுப்பெயர்** : கனகசபை விவேகானந்தராசா.

**கௌரவிக்கப்படும் துறை** : பாரம்பரிய முறிவு வைத்தியதுறை.

**விலாசம்** : புச்சாக்கேணி, கதிரவெளி.

**பிறந்ததிகதி** : 1956.04.14

**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :**

தம்பியப்பா கனகசபை, கந்தையா வள்ளியம்மை என்பவர்களுக்கு 07வது பிள்ளையாக பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியினை அக்கரைப்பற்று R.K.M மகா வித்தியாலயத்தில் கற்று 35 வருடங்களாக வாகரைப்பிரதேசத்தில் வதிகின்றார். தனது முறிவு வைத்தியதுறையினை இவர் தனது அம்மாவின் மூலமாக கற்றதாக கூறுகின்றார். இவரது பரம்பரையே முறிவு வைத்திய துறையில் ஈடுபட்டவர்களாக காணப்படுகின்றன. தனது தகப்பனாரின் அப்பா சிறந்த முறிவு வைத்தியர் என கூறுகின்றார். தனது அப்பாவிடம் இருந்து இந்த முறிவு வைத்திய துறையினை அம்மா கற்றதாக கூறுகின்றார். இவர் தனது வைத்திய துறைக்கு தேவையான மூலிகை வகைகளை கதிரவெளி காட்டுப்பகுதியில் இருந்து பெறுவதாகும் மற்றும் வேறு பொருட்களை கடையில் இருந்து கொள்வனவு செய்வதாகவும் குறிப்பிடுகின்றார். சாதாரணமாக விழுந்து ஏற்பட்ட நோவுகளுக்கு ஒரு கிழமைக்குள் சுகப்படுத்த முடியும் என்றும் எலும்பு முறிவுகளுக்கு மூன்று வகையான சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுவதால் ஒரு மாதம் வரை சுகப்படுத்தி செல்லலாம் என கூறுகின்றார். நோயாளர்கள் வாகரை, பனிச்சங்கேணி, வெருகல் போன்ற இடங்களில் இருந்து வருவதாக கூறுகின்றார். முறிவு வைத்தியத்திற்கு தேவையான மூலிகைகள் தனது பிரதேசத்தில் இருந்தே பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறுகின்றார். தற்போது இத்துறையில் தனது குடும்ப அங்கத்தவர்களையும் ஈடுபடுத்தியுள்ளதாக கூறுகின்றார். நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை அளிக்க கூடிய வசதிகள் தன்னிடம் இல்லை எனவும் இவ்வாறான வசதிகள் இருந்தால் சிறப்பாக இருக்கும் எனவும் கூறுகின்றார். தான் வைத்தியம், விவசாயம் போன்ற தொழில்களையே பிரதானமாக மேற்கொள்வதாக குறிப்பிடுகின்றார்.

---



**முழுப்பெயர்** : சின்னத்தம்பி பொன்னையா

**கௌரவிக்கப்படும் துறை** : நாட்டுக்கூத்து

**விலாசம்** : அழகாபுரி, ஊரியன்கட்டு

**பிறந்ததிகதி** : 1936.07.19


**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :**

வேலன் சின்னத்தம்பி, செட்டி கண்ணகை ஆகியோருக்கு நான்காவது பிள்ளையாக பிறந்த இவர் தனது கல்வியினை வாகரை மகா வித்தியாலயத்தில் தரம் 04 வரை கற்றதாக கூறுகின்றார். 1940ம் ஆண்டுகளில் இருந்து கூத்து கலையில் ஆர்வம் செலுத்தி 1950களில் கூத்துகலையில் பங்கு பற்றியதாக கூறுகின்றார். இவர் இவ்வாறு கூத்து கலையில் பங்கு கொள்வதற்கு இவரது அக்காவின் கணவரான சின்னான் கணபதி

அண்ணாவியார் மூல காரணமாக இருந்தார். இவருடன் இணைந்து சுமார் 07 கூத்துக்களில் பங்குபற்றியதாக கூறுகின்றார் அவற்றில் அல்ல அருச்சுனா, சராசந்தன் போர், 13ம் போர் போன்றவற்றில் பங்கு பற்றியதாக கூறுகின்றார். இதன் பின்பு தான் கூத்துக்களை பழக்கியதாக கூறுகின்றார். 1950ம் ஆண்டுகளில் இருந்து 1975ம் ஆண்டு வரை கூத்துக்களை பழக்கியதாக கூறுகின்றார். அழகாபுரியில் 1954ம் ஆண்டுகளில் கூத்துக்களை பழக்கியதாக கூறும் இவர். அல்லி அருச்சுனா, சராசந்தன் போர், பப்பிரபாகரன் நாடகம் போன்றவற்றை பழக்கியதாக கூறுகின்றார்.

1964ம் ஆண்டுகளில் தட்டுமுனையில் கோயிலடி வளவில் கூத்துக்களை அரங்கேற்றம் செய்துள்ளார். பிரகலாதன் நாடகம், அல்ல அருச்சுனா நாடகம், பப்பிரபாகன் நாடகம் போன்றனவாகும். தற்போது இக்கூத்து கலையில் தனது குடும்ப உறுப்பினர்களை ஈடுபடுத்தியுள்ளதாக கூறுகின்றார். தற்போது குருசேத்திரன் போர் என்னும் நாட்டுக்கூத்தினை பழக்கி அதனை அரங்கேற்றம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

---



**முழுப்பெயர்** : இராசையா சரவணமூர்த்தி
**கௌரவிக்கப்படும் துறை** : நாதஸ்வர இசைத்துறை
**விலாசம்** : பால்சேனை, கதிரவெளி
**பிறந்ததிகதி** : 1960.05.31

**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி:**

இராசையா, நாச்சிப்பிள்ளை என்பவருக்கு கடைசிப்பிள்ளையாக பிறந்த இவர் தனது கல்வியினை பால்சேனை வித்தியாலயத்தில் தரம் 5 வரை கற்றுள்ளார். தனக்கு ஆரம்பகாலத்தில் இருந்தே கலைகளில் ஆர்வம் இருந்ததாகவும் 14 வயதில் இருந்தே நாதஸ்வரம் கற்றதாகவும் கூறுகின்றார். 1978 இற்கு பிற்பகுதியில் பதுளையில் இருந்து பெரிய சுவாமி ஆலயத்திற்கு நாதஸ்வரம் வாசிப்பதற்காக குழுக்கள் வரும். அப்போது அவர்கள் மூலமாக கேள்வி ஞானத்திலேயே நாதஸ்வரத்தினை கற்றுள்ளார். பதுளையில் இருந்து வந்த சம்பந்தன் என்பவரிடமே தான் நாதஸ்வரம் கற்றதாக கூறுகின்றார். சிறுவயதில் ஓவியக்கலை, சிலைவடித்தல் போன்றவற்றில் ஆர்வம் இருந்ததாகவும் கூறுகின்றார். இவரது தகப்பனாரான கந்தப்பு இராசையா சிற்பங்களை வடிவமைப்பதில் சிறப்பு பெற்றவராக உள்ளார். பாலசேனை, நாகபுரம் பிள்ளையார் கோயிலில் உள்ள பிள்ளையார் சிலை மற்றும் முருகன் சிலை இவரினால் வடிவமைக்கப்பட்டதாகவும் இவரது தகப்பனார் மூலமாக சிற்பகலையினை கற்றதாக கூறுகின்றார். அத்துடன் தனக்கு நாதஸ்வரம் வாசிப்பதில் தானாகவே ஆர்வம் ஏற்பட்டதாக கூறுகின்றார். சந்திவெளி, முறக்கொட்டான்சேனை, வாழைச்சேனை போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் நாதஸ்வரம் வாசித்ததாக கூறுகின்றார். தற்போது தொடர்ச்சியாக பால்சேனை பெரிய சுவாமி ஆலயத்தில் நாதஸ்வரம் இவரினாலேயே இசைக்கப்படுகின்றது. இத்துறையில் தனது குடும்ப அங்கத்தவர்களையும் இவர் ஈடுபடுத்தியுள்ளார். முறைப்படி நாதஸ்வரத்தினை கற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் அனைத்தினையும் கேள்வி ஞானத்தின் மூலமே கற்றுள்ளார். தான் தொடர்ந்தும் இத்துறையில் ஈடுபட்டு வருவதாக கூறுகின்றார். தற்போது தான் கற்றவற்றை மற்றவர்களுக்கு பழக்கிவருவதாகவும் கூறுகின்றார்.



முழுப்பெயர் : பொன்னையா தயாநிதி.

கௌரவிக்கப்படும் துறை : நாட்டுக்கூத்து.

**விலாசம் :** கோமத்தலாமடு, கதிரவெளி

**பிறந்ததிகதி :** 1956.12.01

**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :**

பொன்னையா, செல்வரெத்தினம் என்பவர்களுக்கு 2வது பிள்ளையாக வம்மிவட்டுவானில் பிறந்தார். இவரது ஆரம்ப கல்வியை வம்மிவட்டவான் வித்தியாலயத்தில் தரம் 5 வரை கற்றார். இவரது அண்ணன் அண்ணாவியாராக இருந்துள்ளார். இவரை பொன்னையா இராமலிங்க அண்ணாவியார் என அழைப்பர். இவரின் ஊடாகவே இக்கலையினை கற்றதாக கூறுகின்றார். இவர் சுமார் 9 கூத்துக்களை அரங்கேற்றியுள்ளார். இதில் 4 கூத்துக்களில் நாடககாரனாக ஆடியுள்ளார். இதன்மூலமாக கூத்துக்களை கலையினை கற்றதாக கூறுகின்றார். இவர் கூத்துக்களில் இடம்பெறும் வாத்திய வகைகளை சிறப்பாக செய்யமுடியும். தாளவகைகள் முழுவதும் தனக்கு நன்றாக தெரியும் என கூறுகின்றார். சிறந்த அண்ணாவியாராக உள்ள இவர் சுமர்ர் 3 கூத்துக்களை அரங்கேற்றம் செய்துள்ளார். அவை குருஷேத்திரன் போர் வம்மிவட்டவானிலும் அடுத்து சயிந்தவன் சண்டை மற்றயது பப்பரவாகன் போர் போன்றவற்றினை வம்மிவட்டவானில் அரங்கேற்றம் செய்துள்ளார்.

இவர் தான் கற்ற கூத்துக்கலையினை ஏனையவர்களுக்கும் கற்றுக்கொடுப்பதாக கூறுகின்றார். ஒரு கூத்தினை ஒரு நாளைக்கு மாத்திரமே செய்ய முடியும் எனவும் இதனை இரண்டு நாட்களுக்கு வைக்கமுடியாது என்று கூறுகின்றார். ஏனெனில் கதையின் வரலாறு கூத்து 07 மணிக்கு தொடங்கினால் 12மணி வரையும் இடம்பெற வேண்டும் என்றும் 12 மணியில் இருந்து 6 மணிவரை யுத்தம் இடம் பெறும் எனவும் கூறுகின்றார். இவ்வாறு அமைந்தால் தான் கூத்து சுவாரஸ்யமாக அமையுமென கூறுகின்றார். மேலும் ஒரு மணித்தியால கூத்துக்களில் எதனையும் காட்ட முடியாது என கூறுகின்றார். கூத்து கலையினை அழியாது வளர்த்தெடுப்பதில் மிகவும் ஆர்வமுள்ள அண்ணாவியராக உள்ளார்.


---

வெற்றி நமக்கு உலகின் ஒரு புறத்தையே காட்டுகின்றது.
துன்பம் அதன் மறுபுறத்தையும் உணர வைக்கின்றது.

-கோல்டன்-

வாழ்க்கை என்பது ஒருவன் தனக்காக வாழ்வதன்று,
நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதற்காக வாழ்வது

# நான் விரும்பும் சிறந்ததொரு சரிதம்.



"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"

என மாபெரும் அர்த்தம் பொதிந்த போதனைகளை கிருஷ்ணராக அவதாரம் எடுத்து அர்ச்சுனனுக்கு யுத்தக்களத்தில் போதித்த அந்த மாயவன் இராமராக அவதாரம் பெற்று இந்தப் புவி மாந்தருக்கு தர்மம், நீதி, நேர்மை, அன்பு, பாசம், கருணை, காதல், போன்ற நல்ல பண்புகளை தன் வாழ்க்கையில் உயிரிலும் மேலாக மதித்து வாழ்ந்து காட்டி இருக்கினற அவரின் சரிதம் அல்லது அவரின் வாழ்க்கை சரித்திரத்தை என நெஞ்சை நெகிழ வைத்த முதல் நாடகம் ஆகும்.

எனவே அந்த இராமனின் சரித்திரத்தை இங்கு நோக்கும் போது அவர் பல வேதனைகளையும், சோதனைகளையும் தாண்டி அவர் சூடுகின்ற வெற்றி வாகையே என்னைக் கவர்ந்த அல்லது என் நெஞ்சை விட்டகலாத இராமராக என் முன்னும் என் இதயத்திலும் இனிதே ஒளிர்கின்றார்.

ஆம் ஒரு தினம் தமக்கு (இராமருக்கு) வில்வித்தை போதித்த குரு இராமரின் தந்தையான தசரத மகாராசரிடம் சென்று தாம் மாபெரும் யாகம் நடாத்தப் போவதாகவும் அதற்கு இராமரையும் அவரது தம்பி மார்களையும் வந்து யாகத்திற்கு இடையூறு ஏற்படா வண்ணம் பாதுகாத்துத் தரும் படி உறவினர் உமது புத்திரர்களை அனுப்பி வை என குரு கேட்டு தசரத மகாராஜாவும் ஒப்புக்கொண்டு உடனே சென்று இப்பணியினை குருவுக்கு செய்து கொடு "ராமா" என தந்தை பணிக்கு தனையனும் ஏற்றுச்சென்று தன் தம்பிமாரோடு நின்று யாகத்திற்கு பாதுகாப்புக் கொடுக்கும் போது அந்த யாகத்தை சீர் குலைக்க பல கெட்ட சத்துருக்கன் அங்கே செல்கின்றன. அதை அந்த வீரவான் இராமரும் அவர் தம்பியாரும் சேர்ந்து சுக்கு நூறாக அழித்து அந்த யாகத்தை செவ்வனே நிறைவு செய்ய குருவுக்கு துணை நிற்பதா பார்க்கின்ற போது அவர்கள் குரு மீது கொண்டுள்ள கன்னியம் நன்கு புரிக்கின்றது.

அது மாத்திரமின்றி இந்த இடத்திலே நாம் பல நற்பண்புகள் இராமரிடமும், அவர் தந்தை தசரத மகாராசரிடமும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது விபீஸ்ணர் வந்து தசரத சக்கரவர்த்தி உமது புத்திகளை எனது யாகத்திற்காக அனுப்பி வை என்றவுடன் எந்தவொரு மறுப்பும்

கூறாமல் குருவுக்கு மதிப்புக்கொடுத்து தனது புத்தி அனுப்பி வைப்பதன் மூலமாக அந்த இராமயண காலத்தில் குருவுக்கான பக்தி எந்தளவிற்கு இருந்துள்ளது என்பது இந்த ஒரு நிகழ்வே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. தொடர்ந்து இதை நன்கு உற்று நோக்கிப்பார்த்தால் இன்னும் பல நற்பண்புகள் இருப்பதை அவதானத்தில் கொள்ளலாம். அதாவது ஒரு யாகத்திற்கு பாதுகாப்புக் கொடுப்பது என்பது உயிரை துறக்க வேண்டிய நிலை கூட ஏற்படலாம். இருப்பினும் தந்தை வாக்கை வேத வாக்காகக் கொண்டு உடனே யாகத்திற்கு பாதுகாப்பு வழங்க புறப்படுவதை கொண்டு தன் தந்தைக்கு அவர் அளிக்கும் மதிப்பின் பெருமையை என்னவென்று புகழாரம் பாடுவது.

இவ்வாறு இந்த ராமர் கதை நீண்டு சென்று இன்னும் பல அறிவுரைகளையும் வாழ்க்கையின் யதார்த்தத்தையும் போதிப்பதாகவே அமைகின்றது. அந்த வகையில் இந்த ராம சரித்திரத்தில் இன்னும் ஒரு முக்கிய நிகழ்வொன்றாக இராமபிரானின் வாழ்வில் மறக்கமுடியாத இடமாக அவரின் சுயம் வர நிகழ்வு அமைந்து காணப்படுகின்றது ஆம். அக்கால வழக்கப்படி பெண்ணைப்பெற்ற ராசர்கள் தங்களின் மகளை சிறந்த வீரனுக்கே மணம் முடித்து வைப்பது மரபாக காணப்படுகின்றது. இந்த வழக்கின் படியே சீதாபிராட்டியின் தந்தையும் ஒரு வீர விளையாட்டை வைக்கின்றார். அதாவது தன்னிடம் இருந்த யாருமே உடைக்க முடியாத ஒரு பெரிய வில்லினை அவையில் வைத்து இந்த வில்லை வளைத்து யார் உடைக்கின்றார்களோ அந்த மாவீரன் தான் என் மகள் சீதைக்கு மாலை சூட தகுதி உடையவர் என பல நாடெங்கும் பறைசாற்ற இதைக்கேள்வியுற்ற ராமரின் குரு ராமரை அழைத்து வந்து பன்னாட்டு வேந்தர்களும் அசைக்கமுடியாத அந்த வில்லினை மிக எளிதாக வளைத்து உடைத்து மாலை சூடி சீதாதேவியை தன் துணைவியாக்க அழைத்துச் செல்லுகின்றார். தன் நாட்டிற்கு இந்தக்கட்டிடத்தில் அவரின் வீரம் என்னவென்று நன்கு புலப்படுவதோடு அவர் சீதா தேவியிடம் கொண்ட காதலும் நன்கு புலப்படுகின்றதல்லவா?

மேலும் ராமர் சரிதத்தை புரட்டிப் பார்த்தோமானால்,

"பார்க்கப் பார்க்க சிறப்பும்
பார்க்கப் பார்க்க திகைப்பும்
பார்க்கப் பார்க்க தித்திப்பும்"

பார்க்கப் பார்க்க பொருள் பொதிந்தது அல்லவா? இராமசரிதம் இவ்வாறு இல்லறவாழ்வை இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் என பட்டறிந்த மகான்கள் கூறிய கருத்து பொய்யாவண்ணம் இன்பமயமாக சென்று கொண்டு இருந்த இராமர் வாழ்வில் கூனி என்னும் சதி காரியால் இராமர் வாழ்வில் இன்னல் நேர ஆரம்பமாகியது இராமர் பின்னாளில் உணர்ந்து கொண்ட உண்மையாகும்.

ஆமாம். தசரதசக்கரவத்திக்கு வயதான காரணத்தால் தனது இராசா பணிகளை தனது மூத்த மகனான இராமரிடம் ஒப்படைத்து விட்டு தான் இளைப்பாறும் எண்ணத்தைக் கொண்டிருந்தார். இதை அறிந்து கொண்ட "மந்தரை" (தனி) இதுதான் இராமனைப் பழிவாங்க. உகந்த வேளை எனக்கருதி பரதனின் தாயாகிய கைகேயிடம் சென்று இராமனுக்கு முடிசூட்டுவதை தடுக்கும் நோக்கில் தனது வசீகரப்பேச்சினால் கைகேயியை மசிய வைக்கப்பார்க்கின்றாள். மந்தரை இருப்பினும் முதலில் ஏற்றுக்கொள்ளாத கைகேயின் பின்பு தனது மகன் பரதன் நாடாள்வது தமக்கு ஒரு கௌரவம். என்பதை மந்தரையின் வசீர பேச்சின் மூலமாக கைகேயியை வசியப்படுத்தி விட்டாள் இதற்கு இணங்கிய கைகேயி தசரதரிடம் சென்று தனது விருப்பத்தைக் கூற தான் தசரதர் முன்பு கொடுத்த வாக்குறுதியை மீற முடியாமல் மௌனமாகி விட்டார். பின்பு இராமரை அழைத்து கைகேயி "ராமா" நீர் பதினான்கு வருடம் காடாள வேண்டும் எனவும் உன் தந்தை பணித்துள்ளார் எனக் கைகேயி கூற இதற்கு இராமர் தாயே தந்தை கூறினால் தான். நான் இப்பணியை செய்வேன். தாங்கள்

கூறினாலும் செய்து முடிப்பேன் தாயே என அப்போது செந்தாமரை மலரைப்போல் உளம் மகிழ்ந்து உடனே கானகம் ஏக ஆயத்தமமானார் இராமர். இதைக்கேள்வியுற்ற சீதையும் இலக்குமனருடனும் செல்ல ஆயத்தமானார்கள். இருப்பினும் சீதையுடன் செல்வது இராமருக்கு துளியும் விருப்பமில்லாத போதும் சீதையின் நியாயமான வேண்டுதல்களை ஏற்றுத் தன்னுடன் அழைத்துச் செல்கின்றார். இருப்பினும் அந்த கானக வாழ்வு இராமருக்கு துன்பம் மிகுந்த ஒரு பெருவாழ்வாக தொடர்ந்து சென்றதை நாம் காணக்கூடியதாக அவரின் வன சரிதம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் கானகம் சென்ற இராமர் அங்கு அவர் எதிர்கொண்ட பெரும் சோதனை அவர் துணையை இராவணன் கவர்ந்து சென்றது. இதனால் மனம் உடைந்த ராமர் சீதை அழுது புலம்பி அந்த கானகம் எங்கும் தேடும் பணியில் ஈடுபட்டார். இந்த காலகட்டத்தில் சுக்கிரிவரின் சந்திப்பு ஏற்பட்டது. சுக்கிரிவன் தன் தமையனான வாலி தனக்கிழைத்த துரோகித்தனையும் அதனை நிவர்த்தி செய்து தரும்படியும் அதற்கு பிரதிபலனாக தாமும் தனது வாரைப்படைகளையும் இணைந்து சீதாதேவியை கண்டு பிடிக்கின்ற பாணியில் ஈடுபடப்போவதாகவும் இராமர் வாலியை வதம் செய்து சுக்கிரவனுக்கு முடிசூட்டிய பின்பு சீதையை தேடும் பணியும் இராம இலட்சுமணருடன் இணைந்து பெரும் வாரைப்படைகளும் ஈடுபட்டு இறுதியில் இலங்கை வேந்தனான இராவணன் சீதா தேவியை கவர்ந்து சென்ற உண்மையினை அறிந்ததன் பிற்பாடு இலங்கையையும் இந்தியாவையும் பிரித்து நிற்கின்ற பாக்கு நீரிணை ஊடாக பாலம் அமைத்து இலங்கைக்கு வாரைப்படைகளும் அனுமான், சுக்கிருவன், இராமர், இலக்குமணர், மற்றும் பரிவாரங்களுடன் இலங்கையினை சென்றடைந்து இராவணனையும் அவனது தம்பிமார்களையும் புதல்வர்களையும் ஏனைய பரிபாரர்களும் சென்று யுத்தம் புரிந்தனர்.

மற்றும் அவ் யுத்தத்தில் இராமன் பல வேதனைகளின் மத்தியில் தானும் தமது படைவீரர்களையும் பலரையும் இழந்து தான் தனது முன்னேற்றத்தினாலும் மிகவும் நுண்ணியமாகவும், நல்ல ஆலோசனை மூலமும் தனது யுத்தத்தில் வெற்றி கண்டனர் பின்பு இராவணனை முறையடித்து இராமன் சீதையினை தனதாக்கிக் கொண்டான். எனவே இவ் வனவாசம் மிகவும் பரிதாப நிலையினை ஊட்டியது இராமனுக்கு அவனுக்கு உறுதுணையாக அனுமார் மிகவும் உதவி பலனாக அமைந்தது. இராமர் தன் நம்பிக்கையுடன் தான் முயன்றமையினால் தான் தனது அடித்தளமான சீதாப்பிராட்டியை மீட்டெடுத்தமையாகும். இறைவனாக அவதரித்த அந்த இராமர் இப்போதும் இல்லை அவர் எப்போது எம்மனதில் நீங்காத ஒரு பேரருளாக எம் கண்முன் இருந்து கொண்டே வருவார் என்பதை உறுதி மொழியாக இதிகாசத் தத்துவங்கள் கூறுகின்றன.

எனவே இவரின் இந்த சரிதத்தை எடுத்து நோக்குமிடத்து ஒருமனிதன் தன் வாழ்நாளில் எவ்வாறு நடந்தது என்று கொள்ள வேண்டும் என்பதையே இராமர் தன் தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடப்பதும், மற்றும் குருவுக்கு பணிந்து நடப்பதும், கொடுத்தவாக்குறுதியை தவறாமல் நிறைவேற்றுவதும் நெறிமுறை தவறாத யுத்தம் புரிந்ததும் யாவும் தர்மத்தின் படியே அடிதவறாமல் நடந்து நல்லதோர் தர்ம புருஷராக அந்த இராமர் திகழ்வதும், அவர் சரிதம் நம் முன்னோர்களின் கருத்தின் பால் திகழ்வதும் நமக்குக் கிடைத்ததும் நாம் செய்த பெரும் மகா பயனே என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

**வடிவேல் ஜமுனா**
**பால்சேனை** GTMS.


# வாகை சூடிய எழில்

வாகை என்றொரு அழகு நங்கை
அவள் சூடி நிற்கும் வண்ணங்களோ கோடி எழில்
வாகரைக்கு நீயும் வந்து பாரு - நான்
கவிதையில் சொல்வது கோடியில் நூறு

மேகத்தோடு உரசும் தென்னை மரங்களும்
தேனீக்களோடு பேசும் மலர் வனங்களும்
தேன்வதைகளை அள்ளி அள்ளிக் கொடுத்து
தேவர்களையே மகிழ வைக்கின்றாள் வாகை நங்கை

பாலைகளும் வீரைகளும் கனி சொரியும் காலம் - எங்கள்
வாகை மங்கை சிவப்பிலும் மஞ்சளிலும் துகிலிடுத்திக்கோலம்
காணுகின்ற விழிகளில் கற்பனை ஆயிரம் தோனும்
ஆனாலும் கனிகளைப் பறித்து திண்பதிலேயே நாட்டம் போகும்

இன்னும் எத்தனை வண்ணங்களென்று நானும் மொழிந்திட நீயும் கேளு
பானைக்குடுவையில் சம்பா அரிசி கஞ்சி காய்ச்சி
கருத்தம்மா கொடுப்பா.... கந்தசாமிக்கு
கொடுத்ததை எடுத்து ஓடிச்செல்வார் களனி வாடிக்கு



ஓடிச்சென்றவர் களனியில் இறங்கி களையது பிடுங்க
வாகையின் களனி நங்கை உளமது கசிந்து
வியர்வை மணியை நெல்மணியாக விளையச்செய்து
வாரி வாரிக் கொடுத்து வாழவைப்பவளே வாகை நங்கை

தென்றல் பாவில் திரையது ஆடும்
திங்கள் ஒளியை அரிதாரம் பூசும்
அழகான ஆழியின் அலைகடல் ஒலியை
கொலுசாக கொண்டவள் வாகைப் பூங்கோதை

அவள் பெற்ற கடலினில் ஓடமது ஏறி
ஏலேலோ ஐலேசா என்றொரு பாடலது பாடி
வலையது விரிப்பார் மீனவர் கூடி
மீனும் றாலும் வாரிக்கொடுத்து வாழவைப்பாள் வாகை வாவி

இது மட்டுமா இவளிடம் உண்டு
கூத்தும் பாட்டும் எங்களின் மூச்சு
நாலுபேர் கூடி ஆடுகின்ற போது
பார்ப்பவர் மனங்களெல்லாம் இன்பத்தின் ஊற்று

இது மட்டுமா எங்களின் ஆட்டு
கோயில்களிலும் கோலாட்டம் போட்டு
மேடைகளிலும் கும்மியாட்டம் இட்டு
மகிழ்வுற வைப்பதே எங்களின் நோக்கு

வந்தாரை வாழவைப்பது வாகை நங்கை
விருந்தினரை விருப்பத்தோடு ஏற்று விருந்து படைப்பது வாதைத் தேசமென்று
வந்தவர்கள் போனவர்கள் புகழ்ந்துரைத்திடக்கேட்டு
பூரித்து நிற்கின்றாள் வாகைப் பூங்கொத்து.

செல்லத்தம்பி திருமுகம்
பால்சேனை, கதிரவெளி.

# மக்களைப் பலமூட்டுதல்

சமாதானமானதும், சுபீட்சம் நிறைந்ததுமான ஒரு சமுகத்தைக் கட்டியெழுப்புதலே ஒரு நாட்டின் நல்லாட்சியின் குறிக்கோளாகும். அதற்காக அரசின் செயற்பாடுகளுக்கு மக்கள் எப்போதும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இதனை எவ்வாறு சாத்தியப்படுத்தலாம் என்பதே இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய நான்கு மதப்பிரிவுகளும் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. எனவே முதலில் இன, மத, மொழி வேறுபாடுகள் களையப்பட்டு யாவரும் இலங்கைத் திருநாட்டின் ஒரே மக்கள் என்ற சமரச நிலை மக்கள் மனதில் தோற்றுவிக்கப்படல் வேண்டும். பூசல்கள் ஏதாவது ஏற்படுமிடத்து உடனடியாக அவ்விடத்திலேயே அதற்குத் தீர்வு காணப்படாவிட்டால் அதுவே பெரும் பூதாகரமாக உருவெடுத்து பேரழிவை உண்டாக்கும். இது முழுநாட்டையும் மக்களையும் பாதிக்கும்.

ஆரம்பத்தில் இச்சாதக நிலை கிராம மட்டத்திலிருந்தே வளர்க்கப்பட வேண்டும். கிராமம், பின் பிரதேசம், பின் மாவட்டம், பின் மாகாணம் என வளர்ந்து அது தேசிய இலங்கையை உருவாக்கவேண்டும். கிராமமட்டத்தில் அது உறுதியாக வளர்க்கப்படாவிட்டால் பின்னர் முழு இலங்கையுமே அதனால் பாதிப்பு ஏற்படும்.

முதலில் கிராம மட்டத்தில் இந்நிலையை எவ்வாறு வளர்க்கலாம் என்பதைப் பார்ப்போம். இதுவே மிகவும் முக்கியமான செயற்பாடாகும். அதாவது மாணவர்களின் ஆரம்பக்கல்வி போன்றதே இது. அதனைக் கீழ்க்கண்டவாறு செயற்படுத்தலாம்.

1.) விழிப்புக்குழுக்களை அமைத்தல்.
2.) கருத்தரங்குகளை நடாத்தல்.
3.) மது ஒழிப்பு நடவடிக்கைகள்.
4.) புகைத்தல் ஒழிப்பு நடவடிக்கைகள்.
5.) தெரு நாடகங்கள்.
6.) ஆலயங்களில் பிரசங்கம் செய்தல்.
7.) இளைஞர் கட்டாயக்கல்வி ஊட்டல்.
8.) முதியோர் கல்வி.
9.) சுகாதாரமும், போஷணையும் திட்டமிடல் - ஆகியன

விழிப்புக்குழுக்களை அமைக்கும்போது கிராம மட்டத்தலைவர்களோடு அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களை ஒன்றிணைத்து அமைக்கலாம். இக்குழுவானது குறிப்பிட்ட கால அட்டவணையில் கூட்டங்களைக் கூட்டி மக்களுக்குச் சமாதானம், புரிந்துணர்வு, தொழில் முயற்சி, நாட்டு நடப்புக்கள் போன்றவற்றை விளக்கலாம். ஏற்றுக்கொள்ளாத நூறு பேரைக் கூட்டுவதைவிட ஏற்றுக்கொள்ளக்கூடிய இருபத்தைந்து பேரைக் கிழித்து விடாமல் அவர்களையும் காலக்கிரமத்தில் உள் வாங்குதல் சிறப்பாகும்.



முக்கியமாக இன்று நமது சமூகத்தை மிகவும் பாதிப்புக்கு இட்டுச்செல்வது மது பாவனையாகும். மதுவுக்கு அடிமையானவனைச் சமூகத்திலிருந்து கழித்து விடுதல் என்பது மிகுந்த பாவச்செயலாகும். அவனை எப்படியாவது மதுவின் கோரப்பிடியிலிருந்து மீட்டு ஒரு சமூக வாதியாக மாற்றுவது அனைவரதும் பெரும் பொறுப்பாகும். அதன் மூலம் அவனது வீடு முதலில் நன்மையடைந்து, பின்னர் நாடு நன்மையடைய வழியுண்டாகும். இவ்வாறு ஒரு மாதத்தில் ஒரு மதுபாவனையாளரை மாற்றுதல் மூலம் ஒரு வருடத்தில் பன்னிரெண்டு பேரை மாற்றமுடியுமாயின் இதுவே பெரும் காரியமாகும்.

இதைப்போன்றதே புகைப்பிரியர்களின் நிலையுமாகும். பொதுவாக மதுவும், புகைத்தலும், தற்காலிக ஊக்கத்தை அளிப்பதாயினும் பின்னர் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அறியாமையே அவர்கள் இவ்வாறு அதனைக் கைக்கொள்வதற்கான காரணங்களாகும். எனவே இவ்வறியாமையைப்போக்கி அவர்களுக்குப் போதிய உளவள ஆற்றுப்படுத்தலும், அறிவுரைகளை வழங்குவதன் மூலமும் அவர்களை நிச்சயம் மீட்டு சமூதாயத்தின் வேண்டாதபிரஜை என்ற இழிநிலையைப்போக்கி அவர்களும் ஒரு நற்பிரஜையே என்ற நிலைக்கு உருவாக்கி அவர்களைப் பலமூட்டுதல் இக்கருத்திட்டத்தின் முக்கிய இலக்காதல் வேண்டும்.

இவைகளை விட கல்வி அறிவு குறைந்த சமூகப்பிரிவினரிடையே தெரு நாடகங்கள் மூலம் தெளிவு படுத்தல் மிகவும் சுலபமாகும். இந்நாடகங்கள் சிரிப்பதோடு மாத்திரம் நின்று விடாமல் சிந்திக்கவும் வைத்தல் வேண்டும். வெறும் பேச்சு மட்டும் எடுபடுவதை விட அதற்கேற்ற இசையும், பாட்டும், அசைவும் எளிதாக மக்களைச் சென்றடையும்.

கடந்தகால இடர்பாடுகளினால் மக்கட் சமுதாயம் வெறுமனே நிவாரணம் பெறல் என்ற ஒரு இழி நிலைக்குத் தள்ளப்பட்டு அரசிடம் கையேந்தி நிற்கும் ஒரு நோயாளியாய் மாறியுள்ளனர். இம் மனநிலையை மக்களிடையே மாற்றி அவர்கள் தம் சொந்தக்காலில் நின்று உழைத்து ஊதியம் பெற்று வாழக்கூடிய வகையில் சுயதொழில் முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கு என்ன தடைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து அதனைத் தீர்ப்பதன் மூலம் இவ்விலக்கை எய்தலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக கிராமப்புறங்களில் இளம் பிள்ளைகளின் கல்வியில் மிகவும் பின் தங்கிய நிலை காணப்படுகின்றது. இதற்கு முக்கிய பொறுப்பாளிகள் பெற்றோரேயாவார். அவர்கள் தம் பிள்ளைகளைத் தமது தொழிலில் ஈடுபடுத்துவதினால் இளமையில் பெறக்கூடிய கல்வி அவர்களுக்கு கிடையாமற் போகின்றது. இந்நிலை நீடிக்குமானால் எதிர்கால சந்ததி ஒரு கல்வியறிவற்ற, மூட நம்பிக்கைகள் கொண்ட ஒரு அநாகரீக சமுதாயமாக மாறிவிடும். இப்பலிக்கு அப்பெற்றோர் மட்டுமன்றி அக்கிராமத்திலுள்ள புத்திஜீவிகள், நலன் விரும்பிகள் அனைவரும் ஆளாக நேரிடும். எனவே , 'இளமையில் கல்' என்ற முது மொழிக்கொப்ப எவ்வித பேதமுமின்றி அனைவரும் இலவசக்கல்வியைப் பெற்று ஒரு புத்திஜீவிகள் நிறைந்த எதிர்கால சமுதாயத்தைப் படைப்பதற்கு இக்கருத்திட்டம் அமைதல் வேண்டும்.

அதேவேளை சிறுவர் துஷ்பிரயோகம் என்பதும் மிகப்பாரதூரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கற்க வேண்டிய வயதில் இளைஞர்களை வீட்டு வேலைக்காகப் பயன்படுத்துவதில் பெற்றோரும், பயன்படுத்துவோரும் என இவ்விரு பிரிவினரும் சட்டத்தின் பிடியில் சிக்கித்தண்டனை பெற்றாலன்றி ஏனையோரைத் திருத்தமுடியாது. சில சந்தர்ப்பங்களில் ஆண்

பிள்ளைகள் மட்டுமன்றி, பெண் பிள்ளைகளும் வீட்டு வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனவே இவ்வாறான பிரச்சினைகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படவேண்டியது முக்கியமாகும்.

மேலும், பாலிய விவாகங்களும் கூட நமது சமூகத்தில் ஒழுக்கக்கேடுகளை விளைவிக்கின்றன. உதாரணமாக யுத்த காலப்பகுதி, இடைத்தங்கல் முகாம் வாழ்க்கை போன்ற வேளைகளிலேயே அதிகமாக இளம் பராயத்தவர்கள் அதாவது 14 - 15 வயது பெண் பிள்ளைகளும், 16 - 17 வயது ஆண் பிள்ளைகளும் திருமணம் செய்து வைக்கப்பட்டு குழந்தைகளைப் பெற்றுள்ளனர். அதற்குத் தமது பெற்றோரின் விருப்பமும் பெறப்பட்டுள்ளதென்பது நகைப்புக்குரிய விடயமாகும். இதன் காரணமாக இவ்விருபாலாரும் இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றபின் இளமையில் முதுமைக்கோலமும், பலவித நோய்களுக்கு உள்ளாதலும் தமது பிள்ளைகளைத்தக்கபடி போஷிக்க இயலாதவர்களாயும் காணப்படுகின்றனர். இதனைத் தடுக்கவும் இவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

அத்தோடு போஷாக்குக்குறைவு காரணமாகப்பிள்ளைகளிடையே மந்தபுத்தி, மாலைக்கண், போலியோ, மூட்டு வியாதிகள், தோல் வியாதிகள், பலவித தொற்றுநோய்கள் என்பன ஏற்படக்காலாகின்றன. எமது சமுதாயத்தினர் முக்கியமாக மீன் உணவை மட்டுமே தினமும் உண்கின்றனர். நமது கிராமப்புறக் காடுகளில் இயற்கையாக வளர்ந்துள்ள இலை, குழை, செடி போன்ற கீரை வகைகள் எவ்வளவோ உண்ணத்தகுந்தனவும், போஷாக்கு நிறைந்தவையும் வீணாய்க் கிடக்கின்றன. அவைகளைக் கவனியாது வீணாய் விலை கொடுத்து மீன், மற்றும் மேல் நாட்டு மரக்கறி வகைகளை உண்டு போஷாக்கு குறைவு நோய்களினால் பீடிக்கப்படுகின்றனர். இதுவும் அறிவுக்குறைவு காரணமான செயற்பாடாகும்.

அத்தோடு சுகாதாரப் பழக்கவழக்கங்களும் கிராமப்புறங்களில் மிகவும் கீழ்நிலையில் காணப்படுகின்றன. தினமும் நீராடுதல், மயிர் களைதல், நகம் கத்தரித்தல், உடைகள் சலவை செய்தல், நோய் ஏற்பட்டால் உடன் வைத்திய வேவையைப் பெறல் போன்றவை சரியான நேரத்திலும், சரியான நேரத்திலும், சரியான முறையிலும் மேற்கொள்ளப்படுவதில்லை. முக்கியமாக நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த வருமுன் காத்தல் நடவடிக்கை மூலம் நுளம்புகள் பெருகும் அல்லது உண்டாகும் இடத்தைத் துப்பரவு செய்தல் மூலம் டெங்கு, மலேரியா, பன்றிக்காய்ச்சல், ஆகியவற்றை வராமலே தடுக்கலாம். இதற்கும் மக்களின் அறிவு தெளிவின்மை காரணமெனினும் அறிவுள்ளோரால் இவை தெளிவுபடுத்தப்படுவதுமில்லை.

பொதுவாக நோக்குமிடத்து மக்களைப் பலமூட்டி திறமையானதொரு சமூகத்தைப் படைப்பதாயின் ஒருவர் மட்டும் தனித்து நின்று செயல்பட முடியாது. புத்திஜீவிகள், முதியோர், அனுபவசாலிகள், ஆகியோரின் ஒத்துழைப்போடு அரசின் கருத்திட்டம், செயல்பாடு போன்ற திட்டங்களும் உரிய முறையில் தயார் செய்யப்பட்டு பரவலாக மக்கள் சமுதாய முன்னோடிகளிடம் கையளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அரச பிரதிநிதி என்ற முறையில் நாம் அச்செயற்பாடுகளைக் கண்காணித்து தவறுகளைச் சுட்டிக்காட்டி உரியநேரத்தில் திருத்தியும், வேண்டிய உதவி ஒத்தாசைகளை புரிந்தும் உரிய முறையில் வழிநடத்துவதன் மூலம் மக்களைப் பலமூட்டி ஒரு ஆரோக்கியமான சமூகத்தைப்படைத்து மக்கட் சமூகத்தின் மலர்ச்சியில் இன்பம் காண்போமாக.

**குழ. சிங்காரவேல்**
**ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்,**
**பால்பண்ணை வீதி, கதிரவெளி.**

# நட்பும் பிரிவும்



நாகபுரம் என்னும் ஓர் அழகிய கிராமத்தில் V.J.R என்னும் நண்பர்கள் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் மூவரும் இக்கிராமத்தின் மக்களின் அன்பிலும் பாசத்திலும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் வயதில் பெரியவன் "V"யாகும். இவனின் வீடு பாடசாலையின் தெற்கு திசையில் அமைந்துள்ளது. "V" என்னும் நண்பன் தன்னை சுற்றியிருக்கும் அனைவர்களிடமும் கலகலப்பாக பழகுவான் இவன் பேசும் வார்த்தைகள் அனைத்தும் பொன்மொழிகள் போன்று இனிமையான வார்த்தைகளை பேசி வாழ்ந்தார்கள்.

இவர்களில் "J" என்னும் நண்பன் இக்கிராமத்தின் கிழக்குத் திசையில் "J" யின் வீடு அமைந்துள்ளது. இவன் ஒரு நகைச்சுவை நடிகராவான். இவனின் கொள்கை தன்னுடன் இருப்பவரை எந்நேரமும் சிரிப்புடனும் மகிழ்ச்சியாகவும் வைத்து இருப்பது தான். இவனின் கொள்கையாக வைத்து வாழ்ந்து வந்தான்.

இவர்களில் வயதில் இளையவனான "R" யாகும். இவனின் வீடு "J" யின் வீட்டிற்கு ஒரு வீடு தள்ளி இவனின் வீடு அமைந்துள்ளது. இவன் அமைதியானவன் V.J இவர்களின் வார்த்தைகள் அனைத்தையும் கேப்பவன் இவன் அமைதியாக இருந்தாலும் V.J இவர்களுக்கு யாரும் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டு இருக்கமாட்டான். இவனுக்கு நண்பர்கள் மீது அதிக பாசமாக வாழ்ந்து வந்தார்கள்.

இப்படி வாழ்ந்து வந்த நேரத்தில் J என்னும் நண்பனுக்கு ஒரு பிரச்சினை வந்தது. இந்த பிரச்சினையை V.R என்னும் நண்பர்களிடம் சொல்லாமல் தன் மனசுக்குள் வைத்து வாழ்ந்து வந்தான் J. இப்படி வாழ்ந்து வருகையில் V.R என்பவர் J யின் முகம் வாடியிருப்பதை பார்த்தார்கள் ஏன் இவனின் முகம் வாடி இருக்கின்றது என்று V.R இவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். R கூறினான் இவன் முகம் வாடி இருப்பதற்கான பிரச்சினை என்ன என்று அறிய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் "J" சொன்னான் வாங்க வீட்ட போவம் என்று சொன்னான். அதற்கு V.R இருவரும் வா போவம் என்று சொல்லி போனார்கள். J யின் வீட்டிற்கு "J" சொன்னான் இருவரும் இருங்க நான் தேனீர் ஊற்றி விட்டு வருகிறேன் என்று சொன்னான். அதற்கு V.R இருவரும் சரி என்று சொன்னார்கள். J போனவுடன் J யின் படுக்கைக்கு அருகே இருந்த கொப்பி ஒன்றை எடுத்தான் V என்பவன். இவன் கொப்பியை பார்த்து கொண்டு கொப்பியின் பின் பக்கத்தில் J எழுதி இருந்தான் தன்னுடைய பிரச்சினையை எழுதி இருந்தான். இதை பார்த்த V. R என்பவனிடம் கொப்பியை கொடுத்தான். R என்பவன் கொப்பியை பார்த்தான். J விற்கு நடக்க இருக்கும் பிரச்சினையை எழுதி இருந்தான். J தனக்கு ஒரு விபத்து ஒன்று இருக்குது என்று சொன்னதாம் ஒரு சாத்திரி இந்த விபத்தில் தன் உயிர் போகும் நிலை இருக்குது என்று எழுதி இருந்தான் இதை பார்த்த V.R என்பவர்கள் கண்கள் கலங்கி இருந்தார்கள். தேனீர் ஊற்றி வந்த "J" என்ன இருவரின் கண்களும்

கலங்கி இருக்குது என்று கேட்டான். அதற்கு V ஏன் நண்பா எங்களிடம் சொல்லவில்லை என்றான். அதற்கு J சொன்னான் என்ன சொல்லவில்லை என்றான். இதைக்கேட்ட R சொன்னான் இந்த கொப்பியில் இருப்பதை ஏன் சொல்லவில்லை என்று கேட்டம். J சொன்னான் நான் சொன்னா நீங்க வேதனைப்படுவியல் என்று நான் சொல்லவில்லை என்றான். அதற்கு V சொன்னான் கவலையான விஷயமானாலும் ஒரு நண்பனுக்கு என்ன என்றாலும் அந்த விஷயத்தில் கலந்து கொள்வது தான் நட்பு என்றான். இதன் பிறகு அன்றைய நாள் கழிந்தது இப்படி வாழ்ந்து வருகையில் ஒரு நாள் நண்பர்கள் மூவரும் விளையாடுவதற்கு சென்றார்கள். சென்ற இடத்தில் V.J.R இவர்கள் பிரிந்து விளையாட வேண்டிவந்தது. இதைவைத்து எங்களை பிரிக்க இருந்த சிலர் விளையாடிக்கொண்டு இருக்கையில் திடிரென இரு அணிகளும் குழம்பிவிட்டன இதை வைத்து J.R இவர்கள் கூட இருந்த நண்பனை பிரித்துவிட்டார்கள். இந்த பிரிவில் V தனது வீட்டிற்கு சென்றார். இதை பார்த்த J.R இருவரும் வேதனையுடன் தங்கள் வீட்டிற்கு சென்றார்கள் இப்படி வாழ்ந்து வருகையில்,

ஒரு நாள் J.R இருவரும் மட்டக்களப்பு செல்வதற்கு தயாரானார்கள். மட்டக்களப்பு செல்ல தயாரான அன்று தான் J என்பவரின் விபத்து நடக்க போகும் நாள். இது தெரியாமல் J.R இருவரும் S.K இவர்கள் மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்புக்கு சென்றார்கள். அதே நாள் சரியான மழை பெய்ந்த வண்ணம்இருந்தது. இதை பார்க்காமல் போனார்கள் மட்டக்களப்புக்கு போகும் போது J வந்த மோட்டார் பைக் திடிரென சறுகி வீழ்ந்தது. இதை பாரத்த R.J என்பவரை நீக்க சொன்னார். உடனே மோட்டார் பைக்கை நித்தாட்டினார் R உடனே J வை போய் தூக்கினார். தூக்கிய உடனே கை, கால்களை பார்த்தான் காயம் இருந்தது. இக்காயத்தில் குருதி கடுமையாக வந்தது. R சொன்னான் J காயத்தை பார்க்க வேண்டாம் என்று சொன்னான். அதன் பிறகு து மயங்கி வீழ்ந்தான் R இன் தோலில் உடனே S K இவர்கள் சொன்னார்கள் உடனே படுக்க வைத்த பிறகு R என்பவருக்கு ஞாபகம் வந்தது. இன்றைய நாளில் தான் தனது நண்பன் விபத்து என்ற உடனே R விநாயகபெருமானை நினைத்து தனக்குள் விநாயகபெருமானிடம் சொன்னார். நண்பன் J வை காப்பாத்து என்று சொன்னார். இதன்பிறகு J எழும்பி கேட்டான் எனக்கு என்ன நடந்தது என்று கேட்டான். R சொன்னான் உனக்கு சின்ன மயக்கம் என்று சொல்லி வா வீட்ட போவம் என்றான். அதற்கு J இல்ல நம்ம மட்டக்களப்புக்கு போவோம் என்றான். உடனே மருந்தை கட்டிவிட்டு மட்டக்களப்புக்கு சென்று வீடு திரும்பினோம். இதன் பிறகு J யின் அப்பா R யிடம் கேட்டார் என்ன நடந்த J விற்கு காயம் வந்தது என்று கேட்டார் R சொன்னான் மாடிப்படியில் இருந்து இறங்கி வரும் போது சருக்கி விழுந்துவிட்டான் என்று சொன்னான். இதன் பிறகு J யிடம் மன்னிக்க சொன்னான் அதற்கு J சொன்னான் நான் ஏன் உன்னை மன்னிக்கவேண்டும் நீ என்ன தவறு செய்தாய் போயும் ஒரு பொய் தானே சொன்னாய் என்னைக் காப்பாத்த இதை எல்லாம் விடு நண்பா என்று R இடம் சொன்னான். இப்படி எல்லாம் வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் எங்கள் மூவரையும் பிரிக்க நினைத்தவர்கள் R என்பவனை J யிடம் இருந்து பிரிக்க நினைத்தார்கள். இவர்கள் நினைத்ததை போல் J யிடம் R என்பவன் J என்பவனை தப்பா சொன்னதாக சொல்லி J யிடம் இருந்து R என்பவனை பிரித்துவிட்டார்கள் இப்போது V என்பவன் தனியாகவும் J என்பவனும் தனியாகவும் R என்பவன் தனியாகவும் பிரிந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் மூவரும் வெகுவிரைவில் சேர்ந்து வாழவேண்டும் என்று இக்கிராமத்து மக்கள் விநாயக பெருமானை பிரார்த்திக்கின்றார்கள்.

**சோமசுந்தரம் ரசிகரன்**
**பிரதான வீதி, நாகபுரம், பால்சேனை**

# 1978ம் ஆண்டுக்குப் பின்னரான யாப்பு சீர்திருத்தங்களும் 18வது சீர்திருத்த விமர்சனமும்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசாக 1978ம் ஆண்டு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் பூரண தன்னாதிக்கமுள்ள ஜனாதிபதி முறையுடன் கூடிய அரசாங்க முறைமை உருவாக்கம் பெற்று செயற்பட ஆரம்பமாகியது. அந்த வகையில் அவரது உருவாக்கம் பெற்ற யாப்பானது காலத்தின் தேவைகளுக்கும் மாறிவருகின்ற அரசாங்கத்தின் தன்மைக்கு ஏற்பவும் பல தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மக்களினதும், நாட்டினதும் நலன் கருதியென கூறிக்கொண்டு தங்களது அரசியல் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ள எடுத்த முயற்சிகளே சீர்திருத்தங்களாக உருவெடுத்தது. அந்தவகையில் தோற்றம் பெற்ற சீர் திருத்தங்களாக உருவெடுத்தது. அந்தவகையில் தோற்றம் பெற்ற சீர்திருத்த வரிசையினை அடுத்து நோக்குவோம்.

(1) 1978/11/20 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 1வது திருத்தம் (140 ம் சரத்து சேர்த்தல்)
(2) 1979/02/26 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 2வது திருத்தம் (161 ம் சரத்து சேர்த்தல்)
(3) 1982/08/27 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 3வது திருத்தம் (31ம் சரத்தில் 3ம் சரத்து)
(4) 1982/12/ 03 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 4வது திருத்தம்
(5) 1983/02/25 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 5வது திருத்தம்
(6) 1983/08/08 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 6வது திருத்தம்
(7) 1983/10/04 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 7வது திருத்தம்
(8) 1984/03/06 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 8வது திருத்தம்
(9) 1984/08/24 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 9வது திருத்தம்
(10) 1986/08/06 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 10வது திருத்தம்
(11) 1987/05/06ம் திகதி நிறைவேற்றப்பட்ட 11வது திருத்தம்
(12) 1987/11/14ம் திகதி நிறைவேற்றப்பட்ட 12வது திருத்தம்
(13) 1988/05/24ம் திகதி நிறைவேற்றப்பட்ட 13வது திருத்தம்
(14) 1988/05/24ம் திகதி நிறைவேற்றப்பட்ட 14வது திருத்தம்
(15) 1988/12/17ம் திகதி நிறைவேற்றப்பட்ட 15வது திருத்தம்
(16) 1988/12/17ம் திகதி நிறைவேற்றப்பட்ட 16வது திருத்தம்
(17) 2001/09/24ம் திகதி நிறைவேற்றப்பட்ட 17வது திருத்தம்

எனும் அடிப்படையில் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலே சொல்லப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் ஆட்சியை கைப்பற்றும் அரசாங்கத்தினது நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் 18வது சீர்திருத்தத்தையும் கணக்கிட வேண்டியதாகவுள்ளது.

18வது சீர்திருத்தமானது 08/09/2010 பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்ட ஓர் சீர்திருத்தமென்பது நாம் அறிந்த உண்மை, அந்தவகையில் 161- வாக்குகள் ஆதரவாகவும், தமிழர் தேசிய கூட்டமைப்பு மாத்திரம் அதுவும் குறிப்பாக 17 வாக்குகள் எதிராகவும், ஐ.தே.க. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் நிறைவேற்றப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும். அந்தவகையில் இத்திருத்தம் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. என்பது எம் அனைவரது கேள்வியாகவும் அமையலாம். அது (06) பாரிய மாற்றம் or திருத்தங்களேயாகும்.

(i) ஒருவர் இந்த நாட்டில் எத்தனை தடவையேனும் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம்.

(ii) ஜனாதிபதி 3 மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்திற்கு சமூகமளித்தல்.

(iii) அரசியலமைப்பு சபைக்கு பதிலாக பாராளுமன்ற சபையை உருவாக்குதல். இதனால் பாராளுமன்றத்தின் வேலைகளை இலகுபடுத்தல்.

(iv) அமைச்சரவை மற்றும் அரசசேவைகள் ஆணைக்குழு என்பவற்றின் அதிகாரங்கள், செயற் பாடுகள், பொறுப்புக்கள் மீளமைக்கப்பட்டு அதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் களையப்படுதல்.

(v) பொலிஸ் ஆணைக்குழு என்பதிற்குப்பதிலாக பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிசார், அரச சேவைகள் என்ற கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படல்.

(vi) தேர்தல் ஆணைக்குழு அதிகாரங்கள், அவற்றின் செயற்பாடுகள் மீளமைக்கப்படுதல்.

என்பவையே அவையாகும். இவை இலங்கையின் ஜனநாயகத்தன்மையில் எந்தளவுக்கு பாதுகாக்கின்றது என்பதையடுத்து விமர்சன ரீதியாக ஆரோய்வோமாக யாப்பின் அவை பின்வருமாறு அமையலாம் என்பது எனது கண் கூடு.

1.) தமிழர், முஸ்லீம் பிரதிநிதித்துவம் செல்லாக்காசாக்கப்படும். இதற்கு அடிப்படை காரணம் தங்களது அரசியல் சுயலாபத்துக்கும், சுகபோகமான வாழ்க்கைக்கும் தங்களது இனங்களை படுகுழியில் தள்ளிவிடும் நிலையினை உருவாக்குதல்.

2.) ஜனாதிபதி 1978ம் யாப்புக்கு அமைவாக 2 தடவைக்கு மேலாக பதவி வகிக்க முடியாது என்பதை மீறி எத்தனை தடவை வேண்டுமெனும் ஜனாதிபதியாகலாம். என்பது எதிர்காலத்தில் சர்வதிகார போக்கிற்கு வழியையேற்படுத்தும் அதேவேளை ஜனநாயக ஆட்சியென்பது புதைகுழிக்கு செல்லும் நிலையேற்படும்.

3.) 13வது சீரிதிருத்தத்தில் முன்வைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறை இல்லாமல் போகும் நிலையேற்படும்.

4.) 17வது சீர்திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு பேரவை இல்லாமல் போகும் நிலை உருவாகும்.


5.) சகல அரச நியமனங்களும் ஜனாதிபதியின் நேரடிப்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டதனால் அனைத்து நிறுவனங்களும் செயலற்றதாகும் நிலை.

6.) 17வது சீர்திருத்தம் முற்றுமுழுதாக வலிதற்றதாகிவிடுகின்ற நிலை.

போன்றன 18வது சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் போது இலங்கையின் சகல நடவடிக்கைகளும் தனியொருவரது சொல், செயலுக்கு உட்பட்டதாக காணப்படுவதால் எதிர்கால இலங்கையின் மாற்றம் என்பது சொல்லளவில் மட்டுமே இருக்கும். அத்துடன் ஆட்சிமாற்றம் என்பது எட்டாக்கனியாக மாறிவிடும் ஒரு மனிதன் ஆட்சியின் கீழ் ஜனநாயகம் என்பது இறுதியாகும்.

**கு.சதீஸ்குமார் (ஆசிரியர்)**
**மட்/ கதிரவெளி விக், மகா. வித்தியாலயம்.**

(சொற்பொழிவு)



# நாட்டின் உயிர்நாடி கலாசாரம்

கலாசாரம் நம் நாட்டின் உயிர் நாடியாக திகழ்வதற்கான காரணங்கள் சமுதாயத்திலும், நாட்டிலும் அதற்கும் உள்ள முக்கியத்துவங்கள், பல்வேறு மதத்தினால் அதற்கு உண்டான செல்வாக்கு அதனால் ஏற்படும் தீமைகளும் அத்றகான காரணங்களும், இதனை பேணுவதால் நடைமுறையாகும் அனுகூலம், இதனால் விளையும் பிரச்சினைக்கான தீர்வுகள் மற்றும் நாட்டில் இதனை எப்படி பேணி பாதுகாத்து எப்படி நன்மதிப்பு அளிக்கிறார்கள் என்பதை அறிதல்.

நாட்டில் மனிதநடவடிக்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பாரியபங்கு கலாச்சாரத்திற்கு உண்டு. இதனால் மக்கள் கலாச்சாரத்தை பேணுகின்றனர். இதனை பேணுவதால் ஒழுக்கம், மனப்பாங்கு, அன்பு போன்றன வழிமுறையை இது வழிவகுக்கிறது. இதை பலமாக கொண்டு ஒவ்வொரு மதத்திற்கும் தனிமையான கலாசாரத்தை கொண்டு வந்துள்ளது. மக்கள் இதிலும் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி கலாசாரம் இருவருக்கும் ஒன்றாகவும், பொதுவானதாகவும், பிரிநிலையானதாகவும் வைத்துள்ளனர். இத்தகைய செயல்களும் நன்மையாலும் நாடு ஒரு முன்னேற்றம் அடைந்த நாடாக திகழ்ந்து கொண்டு வருகிறது. அத்தோடு நாட்டின், விழுமியம், ஒழுக்கம் பேணப்பட்டு நாடு முன்னேற்றமடைகிறது. மக்களிடையே! ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. இதனால் மதங்கள் பலவும் நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு கொள்கிறது. இதனால் மதங்கள் பலவும் நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு கொள்கிறது. இதனால் மக்களின் அறிவு, தொழில்நுட்பம், பல்வேறு வேலைகள் சுலபம் ஆகிகொண்டு வருகிறது. அத்தோடு மக்களால் கலாச்சாரம் பிரபல்யமாக மேம்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி கலாச்சாரம் தற்போது அபிவிருத்தியில் காலடி எடுத்து வைக்கின்றது. நமது கலாசாரத்தை பார்த்து இலங்கை நாட்டின் கலாச்சாரம் புகழ்பெற்றது. என்று அன்னியர் கதைக்கும்படி உள்ளது. ஏனெனில் நம்நாட்டில் நான்கு மதங்களும் உள்ளன. அவை கலாசாரத்தில் செலவாக்கு செலுத்துவதால் நாடு வளர்ச்சி அடைகிறது. மக்களும் நாடும் கலாசாரத்தை முறையாக பேணி தமது உயிர் நாடி போல கலாசாரத்தை திகழ வைத்து வாழ்கின்றனர் நாட்டு மக்கள்.

பொதுவாக சமுதாயத்தில் கலாசாரத்திற்கு உள்ள முக்கியத்துவமாக இருப்பது சமுதாயத்தின் ஒழுக்கவிழுமியங்களை பேணி பாதுகாப்பதால் இதற்கு சமுதாயம் முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆனால் சமுதாயத்திற்கு புறக்கணிப்பான செயல்களை கலாச்சாரம் செய்யுமானால் அந்த சமுதாயம் அதனை வெறுக்கும். உதாரணமாக வழிபாட்டு தலங்களுக்கு செல்லும் போது

ஆண், பெண்கள் தங்களுக்கு பொருத்தமான ஆடைகளை அணிந்து செல்லல் வேண்டும். இல்லை என்றால் அதாவது முறைபடி ஆடை அணியவில்லை என்றால் கலாச்சாரம் சமுதாயத்திற்கு புறம்பான செயல்களை செய்கின்றது என்று கருதப்படும். அதற்காக நாம் சமுதாயத்தில் கலாசாரத்திற்கு மதிப்பு இல்லை என்று கருத கூடாது. உண்மையில் நம் நாட்டில் கலாச்சாரத்திற்கு மதிப்பும் எதிர்ப்பும் உள்ளது. மக்கள் அதனை அறிவார்கள் ஆனாலும் மக்கள் தம் உயிரை விட மேலாக கலாசாரத்தை போற்றுகிறார்கள்.

இப்போது மதங்களின் அடிப்படையில் பார்ப்போமானால் மதத்தில் கலாச்சாரம் முக்கிய இடம் வகிக்கிறது. இந்து மதத்தை எடுத்தால் அங்கு உடை, நடை, மொழி, அணிகலன் என்பன வேறுபட்டு கொண்டிருக்கும். ஆனால் மதங்களில் கலாச்சாரத்திற்கு தனி மதியுண்டு. எங்கு சென்றாலும் பல மதத்திற்கேற்ப வணக்கம் சொல்வார்கள். அங்கு கலாச்சாரம் பேணப்படுகிறது. அவனை நல்ல மனிதன் என மக்கள் மதிக்கின்றனர் காரணம் அவன் கலாச்சாரத்தை மதித்து நடந்தமை. அதனால் அவனுக்கு சமுதாயத்தில் ஒரு மதிப்பு உண்டானது. இப்படி பல விஷயங்கள் உள்ளன. வேறு மதக்காரர் ஒருவர் தம் மதத்தின் கலாச்சாரத்தை சொன்னால் நீங்கள் கோபிப்பீர்களா? இல்லை. ஏன் எனின் அவன் சொல்வதை கேட்டு அவன் கலாசாரத்தை அறிய முற்படுவீர்கள். ஆகையால் நீங்கள் அமைதியாக இருந்து அதை கேட்பீர்கள்இ அப்பொழுது அங்கு கலாச்சாரத்திற்கு மதத்தினால் செல்வாக்கு உண்டாகிறது. ஏன் எனில் அவன் கலாசாரத்தை சொல்லும் வரை நீங்கள் பொறுத்து இருப்பீர்கள். ஏன் அது மட்டுமா கலாச்சாரம் இல்லாத நாட்டின் வரலாறை அறியமுடியாது. சில நாடுகள் ஒரே மதத்தை கொண்ட நாடாக இருக்கலாம். உதாரணம் அமெரிக்கா அங்கு போய் தமது கலாசாரத்தை பற்றி சொல்ல உரிமை இல்லையா ஏன் இல்லை இருக்கு தமது மத கலாசாரத்தை சொல்ல உரிமை உண்டு. ஆதலால் கலாசாரத்திற்கு மதங்களால் செல்வாக்கு உண்டு.

கலாசாரத்தை பேணாமல் விட்டால் அங்கு ஒரு தீமை கண்டிப்பாக ஏற்படும். எப்படி என்றால் கலாசாரத்தை வைத்து கொண்டு மதகலவரம், ஆர்ப்பாட்டங்கள் போன்ற விடயங்கள் மற்றும் புதிய மத தோற்றங்கள் போன்ற விடயங்கள் உள்ளன. உதாரணமாக கென்லாந்து நோபிலுக்கும், துருக்கிக்கும் இடையிலான போர்கள் இதை வலியுறுத்துகின்றது. முன்னைய கால கட்டத்தில் பிராமணகுலம் குலம் உயர்ந்தது என்று கருதினர். இதனால் மக்கள் மனநோயை அடைகின்றனர். மன உடைந்து போகின்றனர் இப்படி பல்வேறுபட்ட செயற்பாடு நடைபெறுகிறது. இதற்கு காரணம் மதகுலத்துக்குக்கிடையே உள்ள கலாசார வேறுபாடுதான் காரணம் இப்போது நாம் அதற்கான தீர்வினை பற்றி கூறுவோம். இதற்கான காரணங்கள் என்ன தெரியுமா? சிறுவயதில் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் சிறுவயது திருமணம், உடை நடைபாவனையில் மாற்றத்தை ஏற்படுத்துவது, சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல், பரம்பரை தொழிலை மகனுக்கு பழக்குதல் போன்றவற்றை தடுப்பதன் மூலம் இந்த கலாச்சாரத்தை பேணி பாதுகாத்து நாட்டை கட்டி எழுப்பலாம்.

நாட்டில் கலாசாரத்தை பேணுவதால் நன்கு நன்மைகள் பெறலாம். நாட்டின் பாரம்பரிய கலைகள் பாதுகாத்து வைக்கலாம். அத்தோடு மக்களிடையே இருக்கும் ஆர்வத்தை கலாச்சாரம் மூலம் அறியலாம். எப்படி என்றால் புத்தாண்டுகளுக்கு நிகழ்வின் போது கலாசாரம் சம்மந்தமான நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்வின் மூலம் இலை மறை காய்களாக உள்ள மக்களின் திறமையை அறியலாம். அதனால் ஒருவரை முன்னோக்கி தட்டி எழுப்பி நிமிர்த்தி விடுவதும்

கலாச்சாரம் ஆகும். இதுமட்டுமன்றி கலாசாரத்தில் கலைக்கு பங்கு உண்டு. நமது முன்னோர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த கூத்து, நாடகம், வசந்தன், கும்மி, காவடி ஆட்டம் போன்ற கலை நிகழ்வுகள் பல உண்டு. இவை கலாச்சாரத்தில் பாரிய பங்கில் முன்னனி வகித்து திகழ்கிறது. ஆனால் ஒரு நாட்டிற்கும் ஒவ்வொரு கலாச்சாரம் கண்டிப்பாக இருக்கும் ஏன் எனில் அந்நாட்டின் கலாச்சாரம் இருந்தால் தான் அந்த நாடு செழிப்பான நாடு வீழ்ச்சியான நாடு என கண்டறியலாம். எனவே கலாசாரத்தை பேணுவதால் முழுக்க நமக்கு நன்மையாகும்.

கலாச்சாரம் என்பது ஒரு நாட்டின் மகத்துவமான விடயம் ஆகும். இது ஒரு சமுதாயத்தில் முக்கியபங்கை வகித்து வருகிறது. இதனால் மக்கள் மத்தியில் இழப்பு ஏற்பட்டு கரலாசாரத்தை பாரிய முறையில் இல்லாட்டியும் சிறிது அளவிலாவது மக்களிடையே இருந்து வருகிறது. இதனால் மக்கள் அனைவரும் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர் ஆனால் கலாச்சாரம் உதாரணமாக இலங்கை நாட்டில் பெரிதும் துணை புரிகின்றது. இலங்கை வாழ்மக்கள் ஆதிகால சடங்கு சம்பிரதாய வாழ்க்கை முறைப்படி இப்போதும் இருந்து வருகின்றனர். இதனால் மக்கள் அனைவரும் கலாசாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். உண்மையில் கலாச்சாரம் இல்லாவிடின்

ஒரு நாட்டின் மதிப்பு, எண்ணம், செயல் போன்ற ஒன்றும் இருக்காது ஆனால் சில நாடுகள் ஒரே கலாச்சாரம் கொண்ட நாடாக இருக்கும். சில நாடுகள் பல்லினமதம் கொண்டு இருக்கும். உதாரணம் இலங்கை. அப்படி என்றால் அங்கு பல்லின கலாச்சாரம் பேணப்படும் இது முக்கியமாக குறிப்பிடத்தக்கவையாகும். கலாச்சாரம் இல்லாவிடின் ஒரு நாட்டின் செயற்திட்டம் முன்னேற்றம் போன்ற விடயங்கள் அறிவது கஷ்டம். எனவே ஒரு நாட்டின் அல்லது ஒரு மனிதனின் அத்தியாவசியமானது எனவே ஒருவனை வழிப்படுத்துவதும் கலாச்சாரமாகும். ஒருவன் தீயவழியில் சென்றால் அவன் நல்வழி எது?, தீயவழி எது? என்று அறிய கலாச்சாரம் போதும் ஆகவே,

"ஒழுக்கம் விழுப்பம் தரலால்
அது உயிரிலும் ஓம்பப்படும்"

எனவே ஒழுக்கத்தை போன்று கலாசாரத்தை நம் உயிரையும், உயிர் நாடியையும் போல பேணி பாதுகாத்து நம் அனைவரின் தலையாத கடமையாகும்.

கண்ணாக்கலைக்குழ
கு.யோதீஸ்.
நாகபுரம்.
பால்சேனை.

பிறர் எனக்கு எதைச் செய்யக் கூடாது என்று விரும்புகின்றேனோ
அதை அவர்களுக்கு நானும் செய்யக் கூடாது என்று விரும்புவேன்
-கன்பூஷியஸ்-



# நிர்வாகமும் முகாமையும்

**முகாமை என்றால் என்ன?**

நவீன உலகில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த துறையாக முகாமை காணப்படுகின்றது. இது ஒரு குறுகிய கால வரலாற்றையும் விருத்தியடைந்து வருகின்ற தன்மையினையும் கொண்டு காணப்படுவதனால் இதற்கு இன்னமும் ஒரு சரியான, சிறந்த முறையில் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது உண்மையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வரைவிலக்கணம் இன்னும் காணப்படவில்லை. இதற்கு இதுவரை வேறு பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, செய்யப்படுகின்ற வேலைகள் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடுகின்றன. உற்பத்திகள் வேறுபடுகின்றன. நிறுவனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் வேறுபட்ட பின்னணிகளிலிருந்து வருகின்றனர். வேறுபட்ட வினைத்திறன்களைக் கொண்டிருக்கின்றனர் . நிறுவனங்களும் வேலைப் பொறுப்புக்களை வித்தியாசமாக வரையறுக்கப்படுகின்றன.

அடுத்து பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்படாத வரைவிலக்கணத்தை முகாமை கொண்டிருப்பதற்கான காரணம், முகாமை அறிஞர்கள் வேறுபட்ட வழிகளில் நோக்க முற்படுவது சிலர் தொழிலாளர்களை முகாமை செய்தல் என்ற கருத்தில் கவனத்தினைச் செலுத்துகின்ற வேளையில் சிலர் வேலையினை முகாமை செய்வதில் அக்கறை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

எப்படியாயினும் முகாமையானது முகாமையாளருடனும் நிறுவனத்துடனும் சம்மந்தப்படுகிறது. முகாமையாளர் நிறுவனத்தை பொறுத்தவரை சக்தி வாய்ந்தவராகவும், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உயிரோட்டத்தினை வழங்குகின்ற மூலமாகவும் காணப்படுகின்றார். இவரது தலைமைத்துவம் இன்றி உற்பத்திகளான மூலவளங்கள் மூலவளங்களாகவே இருக்கும். ஒரு போதும் முடிவுப்பொருளாக மாற்றமடையாது. இதற்கும் மேலாக ஒரு போட்டிப பொருளாதாரத்தில் முகாமையாளரின் செயற்திறனும் தரமும் நிறுவனத்தின் வெற்றியை நிர்ணயிக்கின்ற காரணிகளாக விளங்குகின்றன.

நாம் நிறுவனத்தின் அடுத்த அம்சத்தினை பரிசீலனைக்கு எடுத்தால் நிறுவனமானது பொது நோக்கத்தினை அடைவதற்கு பாடுபடுகின்றது என்பதாகும். ஒரு நபர் தானாகவே அடைய முடியாதவற்றை கூட்டு முறையில் அடைவதற்கு முயற்சிக்கிறான். ஒரு நிறுவனம் சில குறிக்கோள்களை கொண்டிருப்பது போல குறிக்கோள்களும் பல தனிப்பட்டவர்களில் இணைந்த முயற்சிகளினூடாக மட்டுமே அடையப்படமுடியும் என்பது வெளிப்படை. நவீன சமூகம் இவ்வாறான பல நிறுவனங்களால் நிறைந்திருக்கின்றது. எனவே நிறுவனங்கள் முக்கியமானவையாகவும் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகவும் காணப்படுகின்றது. உதாரணம் - குடும்பம், பாடசாலை, தொழிற்சாலைகள் போன்றவற்றை கூறலாம்.

ஒரு நிறுவனத்தின் முக்கிய அம்சம் யாதெனில் குறிப்பிட்ட குறிக்கோள் ஒன்றினை அடைவதற்கு மனிதனை உருவாக்குதல். பொதுவாக தேவையான பொருள்களை உற்பத்தி செய்து வழங்குவதாக இது காணப்படுகிறது. ஹென்றிபயோல், ஈ. எல். எப். பிறெச், கூன்ஸ், ஒடென்ஸ்

போன்ற முகாமை அறிஞர்கள் முகாமை என்பது பற்றி கூறுவது என்னவெனில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல். மூலவளங்களை கட்டுப்படுத்தல் ஊழியர்களது திறன்களை பெறல் உள்ளடங்களாக நிறுவனங்கள் தங்களது நோக்கங்களை அடைவதற்கான செய்முறையாக காணப்படுகின்றது.

பொதுவாக முகாமை, தொழிலாளர்கள் மூலம் குறிப்பிட்ட இலக்கை அடைகின்ற ஒரு நுட்பம் என அழைக்கப்படமுடியும். அதாவது வெற்றிகரமாக ஒரு வேலையினைப் பூரணப்படுத்துவதற்கு தனியே செயற்படுவது உகந்ததாக இருக்காது என்பதாகும்.

மற்றும் என்னென்ன செயற்பாடுகள் ஒரு நிறுவனத்திற்கு அவசியமானதோ அவற்றினை செய்வதற்கு ஏனையோரை ஒழுங்குபடுத்துவதன் மூலம் முகாமையாளர்கள் நிறுவன குறிக்கோளை அடைய முடியும் என்கின்ற கருத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது.

மேலும் முகாமையானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல் வழிப்படுத்தல் செய்முறைகளையும் நிறுவனத்தில் சொல்லப்பட்ட குறிக்கோளினை அடைவதற்கு நிறுவன அங்கத்தவர்களின் சேவையைக்கட்டுப்படுத்துவதாகவும் வரையறுக்கப்படமுடியும்.

இறுதியாக முகாமையானது நிறுவனத்தின் திட்டமிட்ட குறிக்கோளினை அடைவதுடன் சம்மந்தப்படுகிறது என்பதனை வலியுறுத்துகிறது. அதாவது எந்தவொரு நிறுவனத்தின் முகாமையாளரும் பிரதேச செயலகமாக இருக்கலாம். அல்லது வேறு ஏதாவது வங்கியாக இருக்கலாம். இது எப்படி இருப்பினும் குறிப்பிட்ட முடிவிடத்தினை அடைவதற்கு நிறுவனம் முயற்சிப்பதனை இது கருதுகிறது.

இவ்வாறான இலக்குகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்துவமானதாகக் காணப்படும். பிரதேச செயலகத்தின் குறிக்கோளானது பிரதேச மக்களுக்கு பொருத்தமான சேவையினை வழங்குவதாக இருக்கலாம். அதே போன்று ஒரு வங்கியின் நோக்கம் ஒரு சமூகத்தில் உள்ள மக்களின் சேமிப்பு பழக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்கலாம்.

அகராதி வரைவிலக்கணமானது "நிர்வாகம்" தான் முகாமை என்கின்ற கருத்தை கொடுக்கின்றது. ஒரு சொல் மற்றைய சொல்லுக்கு பிரதியீடு செய்யக்கூடியதாக காணப்படுகின்றது. முகாமை, நிர்வாகம் என்னும் இரு பதங்களும் தங்களது தேவைகளுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்ப முகாமையாளர்களால் வரையறை செய்யப்படுகின்றன. நிர்வாகம் என்பது பெரும்பாலும் பிரதான நோக்கங்களையும் தீர்மானிக்கின்ற உள்மட்ட முகாமையாளர் குழுக்களின் நடவடிக்கைகளை விளக்குவதற்கு உபயோகிக்கப்படுவதாகக் காணப்படுகின்றது. இப்பதமானது அரசாங்கத் திணைக்களங்களில் பரந்தளவில் உபயோகிக்கப்படுவதனைக் காணமுடியும். உதாரணமாக இலங்கை நிருவாக சேவையைக் குறிப்பிடலாம்.

மற்றும் நிர்வாகம் என்பது நிறுவனத்துடனும், மேற்கொள்கின்ற செயற்பாட்டுடனும் சம்மந்தப்படுகின்ற முகாமையாளரின் பகுதியான செய்முறை, இதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்படவும், பரிமாற்றம் செய்யப்படவும் முடிகிறது. அத்துடன் நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் மதிப்பிடவும் இலக்குகளுக்கும் திட்டங்களுக்கும் ஒப்பீடு செய்யப்படவும் இது வழிவகுக்கிறது. மேலும் வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படவும் நோக்கங்களும் கொள்கைகளும் பூரணப்படுத்தப்படவும் நிர்வாகம் அவசியமானது என்பதனைக் குறிப்பிடலாம்.

**நல்லரெட்ணம் விஜிதன்** B.B.A.
**சமுர்த்தி முகாமையாளர்**
**சமுர்த்திவங்கி**
**வாகரை.**

நாடகம்

# உன்னால் முடியும் தம்பி



## காட்சி - 1

**தாஸ்** - என்ன எல்லோரும் இங்காலன் போறாங்க நாமளும் போய் பார்ப்பமே.

**குமார்** - என்ன தாஸ் அவசரமாக போறான் என்ன.... அதுல சனக் கூட்டமாக நிற்குது.

**சதீஸ்** - என்ன குமார் அதுல சனக்கூட்டம். என்னவாம்.

**குமார்** - நானும் அதத்தான் பார்க்கபோறன்.

(தாஸ் திரும்பி வந்து சதீஸையும், குமாரையும் பார்த்து கேட்டல்)

**தாஸ்** - என்ன ரெண்டுபேரும் போறயள்,

**குமார்** - என்ன தாஸ் அதுல...

**தாஸ்** - ஆ... அதா அது நம்மட கந்தன் அண்ணன் செத்துத்தாராம்.

**சதிஸ்** - ஆ.. என்னண்டு.

**தாஸ்** - அவரு கடுமையாக குடிக்கிறதானே, அதாலன் ஈரலில், ஓட்டையாம், கொஸ்பீற்றலுக்கு போயும், சரிவரல்லையாம். நேற்று வீட்ட அனுப்புனதாம், இண்டைக்கு சரி.

**குமார்** - என்ன நம்மட... நம்மட சிவாட அப்பா தானே.

**தாஸ்** - வேற ஆரு... இனி சிவா என்ன செய்யப்போறான் அவண்ட தம்பி. பிரபு என்ன செய்யப்போறன்

**சதீஸ்** - இனி சிவாட, பிரபுட படிப்பு எல்லாம் போச்சு.

சிவாவும், ஏலாதவன் பிரபுவும் அப்படி - சரிவாங்க நாமளும் போய்பார்பம்,

## காட்சி - 2 (நகைச்சுவை)

(படிப்பை இடையில் விட்டு வீதியில் ரவுடிபோல் அலையும் குழு ஒன்று)

**சிட்டு** - என்ன மச்சான் அதுல கிடக்குற நோட்டீஸ் படமோ.....

**பதக்கம்** - (நோடீஸ் பார்த்தல்) அடேய் அது படம் தாண்டா.... எந்திரன் ஆ....நம்ம ஆளு....

**சிட்டு** - அது என்ன நோட்டீஸ்.

**பதக்கம்** - அது ஏதோ பொதுக்கூட்டமாம்,

**சிட்டு** - ஆகா.... அத. கிளி

**பெரியவர்** - என்ன தம்பி. படம் எண்டா நல்லம் பொது நோட்டீஸ் எண்டா கூடாதா.

**பதக்கம்** - ஏய் என்ன.... என்ன.... (ஒரு விரலை காட்டி) அடங்கு

**பெரியவர்** - (போதல்) இந்த காலத்துப் பிள்ளைகள், இறைவா....

(படம் பார்க்கும் காட்சி நகைசுவை)

## காட்சி - 03

**பிரபு** - பாடசாலை போகுதல் (நடக்க ஏலாமல் கஸ்ரப்பட்டு)

**கரன்** - டேய் பாஸ் முடக்கூட்டம் வருகுது. இதுகள் எல்லாம் சாகாம என்னத்துக்குத்தான் கிடக்குதோ.... ஐயோ...

**பாஸ்** - ஆமாடா இதுகள் எல்லாம் படிச்சி என்ன தான் கிளிக்கப் பொகுதுகளோ....

**கரன்** - டேய் பிரபு நீ ஏண்டா படிக்க படிக்க எண்டு அலையுறாய் (பிரபு நடக்குறமாதிரி நடந்து காட்டுதல்) இப்படி நடக்கக்குள்ள)

**பிரபு** - (அமைதியாக) டேய் எங்கள இறைவன் இப்படி படைத்துத்தாரு ஆனா உங்கள நல்லா படைத்துத்தாரு எல்லாம் என்விதி- நீங்க நல்லா இருங்க (கண்ணால கண்ணீர் பெருகுதல் துடைத்துச் செல்லுதல்)

**தனு** - (பெண்) - டேய் எல்லாம் கேட்டுத்தான் நிண்ட நான்

**பாஸ்** - (முறைத்து) என்ன கேட்ட நீ.... (ஒரு விரலை காட்டி) தள்ளு

**தனு** - இஞ்ச பாருங்க நீங்க எல்லாரும் ஒரே வயசானவங்க முன்பு ஒண்ணா படிச்ச நாம ஒருத்தரையும் குறை சொல்லக்கூடா இதெல்லாம் ஒருவன் பார்த்த்தான் இருக்கான்.

**பதக்கம்** - எவ அவ... (ஆ...சிரிப்பு) போய்கடா போங்க...(போகுதல்)

## காட்சி - 04

(பிரபு யோசித்து இருத்தல் ) பிரபுவின் அண்ணன் வேலைக்குப் போய் வருதல்)

**சிவா** - (தனக்கு தானே) என்ன பிரபு ஒரு மாதிரி இருக்கான். என்ன பிரபு....

**பிரபு** - (கத்துதல்) என்ன அண்ணா. நாம முடக்கூட்டமா.... ஏன் அண்ணா நாம வாழனும் நான் ஏன் படிக்கனும்.

**சிவா** - ஏன் பிரபு இப்படி சொல்லுறாய் அம்மா அப்பா இல்லாட்டிலும் நான் இருக்கன். உனக்கும் உன் படிப்புக்கும்.

**பிரபு** - (சொல்லுதல்) அண்ணா நான் இண்டைக்கு ஸ்கூள் போகக்குள்ள நான் படிக்கமாட்டனாம். முடக்கூட்டமாம் என்று நம்மட பதக்கம் குறுப் சொன்னானுகள். அண்ணா, என்னைய கொல்லு இல்லாட்டி நான் நஞ்சி குடிப்பன் நான் இருக்கமாட்டன். (கத்துதல்) நான் செத்து போவன் அண்ணா.

**சிவா** - டேய் நீ ஏண்டா சாகனும் நானும் கொஞ்சம் முடம் தானே நீ மட்டுமா இல்ல. இஞ்ச பாரு நீ படிக்கனும் படிச்சி இந்த ஊருக்கு பெரிய ஆள் ஆகனும். அத நான் பார்க்கனும், எல்லோரும்

பெருமைப்படனும். ஆம் இது நிச்சயம் நடக்கும். சொல்லுறன் இந்த பிள்ளையார் சாட்சியாய் நீ எனக்கு சத்தியம் பண்ணிக்கொடு ஒரு தப்பான முடிவுக்கு போகமாட்டாய் எண்டு...

**பிரபு** - அண்ணா.... (கை கொடுத்தல்)

**சிவா** - (போகுதல்) தம்பி பிரபு உன்னால் முடியும்டா.. (போதல்)

## காட்சி - 05

**சிவா** - டேய் நில்லுங்க... என்ன சொன்னயள் எண்ட தம்பியப்பார்த்து

**பதக்கம்** - முடக்கூட்டம் எண்டு சொன்னம்.

**சிட்டு** - நீ எல்லாம் படிச்சி என்ன செய்யப்போறாய் எண்டு சொன்னம்.

**கரன்** - இதமாதிரி என்னமோ எல்லாம் சொன்னதாம்... இப்ப என்ன செய்யப்போறாய்,

**சிவா** - நான் ஒன்றும் செய்ய இல்ல அவன் அம்மா அப்பா இல்லாதவன். அவன இப்படி சொன்னா..

**கரன்** - சொன்னா.. சொன்னா.... (தள்ளுதல் அடித்தல்)

## காட்சி - 06

பிரபு பிடித்தல் (உன்னால் முடியும் தம்பி உலகம் இருக்கு உன்னை நம்பி - பிரபு படித்து பட்டம் பெற்று அவ் ஊருக்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியராக வருதல் பட்டம் அளிப்பு விழா கொண்டாடுதல் பொதுமக்கள் பிரபுவின் வாழ்க்கையில் விளையாடிய நண்பர்கள் எல்லாம் திருமணமாகி பிள்ளைகளுடன் வருதல்)

**கண்ணன்** - அனைவருக்கும் வணக்கம். இன்று நம் பதவி ஏற்பு விழா ஒன்றினை நடாத்தவுள்ளோம். இதில் நீங்கள் எதிர் பாராத விதமாக ஒருவரை பதவி ஏற்ற அழைக்கவுள்ளோம். அவர் யாராக இருப்பார். என நீங்கள் எதிர்பார்த்து இருப்பீர்கள் இவர் இப்பாடசாலையிலேயே கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று இங்கு ஒரு சிறந்த ஒரு மாணவனாக இன்று எம் பாடசாலைக்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியராக கடமையாற்ற வந்துள்ளார். அவரை இப்போ மேடைக்கு அழைக்கின்றோம்.

**பிரபு** - (ஏலாமல் நடந்து வருதல்) பேசுதல் - அனைவருக்கும் வணக்கம் இன்று எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கு நான் இவ்மேடையில் நின்று பேசுவேன் என்று எதிர்பார்க்கவில்லை என்னை பேச வைத்தவர் ஒருவர் இருக்கின்றார். அவர் தான் என் உயிர் நாடி, அவர் தான் என் அண்ணா, அம்மா, அப்பாவ இழந்த நான் என் அண்ணாவின் அரவணைப்பிலும், அண்ணாவின், வழிகாட்டலும், தண்டபடிப்ப விட்டு என் படிப்புக்குஉயிர் கொடுத்தவர். அண்ணாவை ஒரு முறை மேடையில் எடுக்க ஆசைப்படுகிறேன். அண்ணா..... சிவா..... அண்ணா.....

**சிவா** - (வருதல்) - உரையாற்றுதல், வணக்கமுங்க எண்டதம்பி இன்னைக்கு இப்படி இருக்கான் எண்டா இது இறைவன் செயலுங்க .. அவன் சின்ன வயசில சில தப்பான முடிவு எடுத்தானுங்க, என்னங்க கால், கை ஏலாட்டி பட்டம் பெற ஏலாதா. ஊருக்குள மதிக்கமாட்டிங்களா? எங்கள போலவங்க மனிசன் இல்லையா? உழைக்கமாட்டினமா? ஏனுங்க இந்த சனம், வேறொரு நாய்க்கு

சோறு வைச்சா, சாகும் வரைக்கும் நம்மள கண்டா வாலாட்டுமுங்க. ஆனா ஆறறிவு மனிதன் அப்படி இல்லிங்க. (அழுதல்) (வணக்கமுங்க)

**வானு -** நானும் பிரபுவ போல ஒரு வலம் ஏலாதவதான் என்னையும் சிலர் அருவருப்பாவும் பார்த்தனர். சனம்தான் அப்படி எண்டாலும், என்னோடு கூடி படிச்ச சில மாணவர்களும் என்னைய குறையாகத்தான் பார்த்தனர். இதெல்லாம் பார்த்துதான் நான் என் படிப்ப என் அம்மா இடையில் விடச்சொன்னாவு, ஆனா பிரவின்ட அண்ணா போல் எனக்கும் அண்ணன் இருந்து இருந்தால் என்னையும் படிப்பிச்சி இருப்பாரு...

**கண்ணன் -** ஆமா. தன் அண்ணனும் ஒரு ஏலாதவர் ஆனா அவர் கஸ்ரப்பட்டு தன் தம்பியை படிப்பித்து முன்னுக்கு கொண்டு வந்து உள்ளார். ஆனா அம்மா அப்பா எல்லாம் இருந்தும், தங்கட பிள்ளைகளை படிப்பிக்காம சும்மா ரோட்டுல சுத்தி திரிய விடுறாங்க இது எல்லாம் கூடாது சரி இனி எண்டாலும் இப்படி இல்லாமல், ஒருவரை ஒருவர் குறைகூறாது எமது சமூதாய வளரவேண்டும் எண்டு கேட்டு இப்பரிசினை பிரபுவின் அண்ணன் சிவாவிற்கே வழுங்குகின்றோம். (வழங்குதல்)

**கண்ணாக்கலைக்குழு**
**தலைவர். வேலு ஆனந்தராசா**
**நாகபுரம், பால்சேனை.**

**உலக வாழ்வின் நோக்கம் பிறருக்கு உதவி புரிவதே ஆகும்.**
-புத்தர்-

**ஒருவரின் கடமை மற்றவரை நிறைவு செய்வதாக இருந்தால் அதுவே அதற்குக் கிடைத்த பரிசாகும்.**
-ஜார்ஜ் எலியட்-

# சுந்தரி கலியாணம்

## துரியோதனன் கண்ணன் சகுனி கொலுவரவு

### விருத்தம்

**துரியன், விருத்தம்** - உலகெல்லாம் துதி புரியும் சர்பகொடியோன் உயரந்த நவமணியால் இளைத்த கெருடம் பூண்டு வலுவுடைய தம்பிமார்கள் இரு புறமும் சூழ மற்றுமுள்ள சகுனி கண்ணன் சேனை சூழ நலமுடனே இரு படையும் நெருங்கி சூழ நபபேரிகை முரசி அதிர சிலை வாழ் ஏந்தி கல கலவன வீர காண்டாமணிகள் சூழ கனக சபை துரியன் மன்னன் வருகின்றானே

**துரியன் பாட்டு:** 01. ராச ராசன் மகன் ராசன் துரியோதனன் ராசன் கொலுவில் வந்தாரே.

02. நேசமுடனே பல ராசர்கள் நெருங்கிட நித்திய மன்னர்கள் வந்தடி பணிந்திட

**கண்ணன்பாட்டு:** கொடையில் மிகுந்த கண்ணன் குலமும் சூரியன் மைந்தன், முடி சிரசில் மின்ன கண்ணராசனும் வந்தேன்.

**ஆட்டதரு துரியன்:** 01. அரவக்கொடி பறக்க பரவிக்குடை விரிக்க ஆவலாய் துரியராசன் அன்புடனே கொலுவில் வந்தான்.

02. கரமதில் ஒளியுள்ள வச்சிர கெதையும் ஏந்தி பரவியே கரிபரி படைகளும் சூழ்ந்திடவே.

**துரியன்விருத்தம்:** என்னுடன் கொலுவிருக்கும் இயல்பான அமைச்சர்மார்களே கேளாய். மதியுள்ள சகுனி கண்ணா மாபெரியோரே கேளாய் வண்ணமாய் மைந்தனுக்கு மணமது செய்ய எண்ணம் கொண்டேன். கன்னியாள் இருக்கும் இடம் கண்டுமே உரை செய்வீரே.

**துரியன் வசனம்:** கேளும் அண்ணா கண்ண மகராசனே எனது மகன் இலக்கண குமாரனுக்கு மணம் செய்ய எண்ணம் கொண்டேன். அவனுக்கு ஏற்ற பெண் எங்கேய் இருக்கிறாள் என்று சொல்லும் அண்ண கண்ண மகராசனே

**கண்ணன் வசனம்:** கேளும் தம்பி துரியோதனா பொன் உண்டானால் அதை முடிந்து வைக்க புடவையோ கிடையாதே உலகத்தில் அரசர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள் அறிந்து கொள்ளும் மன்னா

**சகுனி வசனம்:** கோளும் மருமகனே உமது குமாரனுக்கு ஏற்ற பெண் மாயன் மகள் சுந்தரி இருக்கின்றாள். அவரிடம் கேட்டு உமது குமாரனுக்கு திருமணம் செய்து வைப்போம் ஆக.

**துரியன் பாட்டு :** நல்ல யோசனை இதுவே சகுனி மாமா
நல்ல யோசனை இதுவே.
நல்ல யோசனை இது சொல்லும் உறுதியாக
*பண்ணிய யோசனை இப்பவே சொல்லுவீர்.*

**சகுனி பாட்டு:** அரசரே உலகில் வல்லான் மயவர் தானும்
தவறு இல்லா செல்வம் உள்ளார்.
கவனமுடன் ஏதி கண்ணரை வெட்கலாம்
காசினியோர் கண்டால் போற்றுவார்.

**துரியன் வசனம் :** கேளும் அண்ணா கண்ண மகாராசனே பாண்டவர்கள் இங்கு இருந்தால் சொந்தம் பாடாட்டுவார்கள் ஆகையால் பொன் விளக்கென்றாலும் தூண்டு கோல் வேண்டும். இந்த விவாதத்தை யாரால் முடிக்கலாம் என்று சொல்லும் கன்ன மக ராசனே.

**கண்ணன் பாட்டு:** 01. சீர் துளப மாலைஅணி மார்பன் இடத்தில் செல்ல போக நான் புத்தி சொல்லுவேன் எந்தனிட தம்பியாரே

02. ஏர் பொருது ராசதுரை வீராதி வீரரையும் பல பத்திர ராசர் தன்னை இங்கே வரவழையும்.

**கண்ணன் வசனம்:** கேளும் தம்பி துரியோதனா அருட்சுணன் தன் மகனுக்கு மணம் பேசி வைத்து விட்டு வனம் போய் விட்டான் ஆகையால் பல ராமரை அழைத்து இந்த விவாதத்தை முடித்து வைக்காம அறிந்து கொள்ளும் தம்பி.

**பலராமன் விருத்தம்:** எத்திசையோர்கள் போற்ற ராசாதிராசர் போற்ற நித்திய காலைக்கடன் கழித்து நீலவண்ணதுயில் உடுத்து நிகர் இல்லா வித்தகை கலப்பை ஏந்தி விளங்கிய சபையின் மீது பக்தியில் அன்பரான பல ராமர் வருகின்றாரே.

**பலராமன்பாட்டு :** 01. வந்தார் பலராம சபையை நாடி வாரார் பலராமர்
02. காவலர் வாழ்ந்திட நாவலர் போற்றிட, நாவலர் நாடும் துவாரகையை விட்டு
03.அரபக்கொடியோன் என்னை அழைத்திடும் செய்தியை அறிந்திட
வேணுமென்று ஆசிரியர் பலராமர்.

**பலராமன் வசனம்:** கேளும் துரியோதன மகாராசனே நீர் என்னை அழைத்த காரியம் நான் அறியும் படி சொல்லும் ராசனே.

**துரியன் பாட்டு :** 01. கலைத்தொழில் பழகிய நாளா என்கை காத்திட நினைத்திடு தேவா சத்திரங்கள் பார்த்து வந்ததால் ஒரு தயவு செய்திட வேண்டும் தேவா.

02. துயவனே இது பாடுமே எந்தன் சொல்லையும்
மனதினில் ஏற்று
உந்தன் கிருபையாலே எந்தன் செய்யனுக்கோ
மணம் செய்ய வேணும் ஐயா.

**துரியன் வசனம் :** கேளும் பலபத்திர ராசரே என் மகனுக்கு உனது தயவால் உன் தம் மகளுக்கும் விவாகம் முடித்து தாரும் ராசனே.

**பலராமன் வசனம் :** கேளும் துரியோதன மகராசனே உன் மகனையும் என்னுடன் அழைத்து வந்தால் தம்பியின் மகளுக்கு விவாகம் முடித்து வைப்பேன் அறிவிர் ராசனே.

**இலக்கணன் வரவு விருத்தம்:** சந்திர வட்ட குடையது பிடிக்க தங்கமுடி தானிலங்க சங்கீத மேள வாத்தியங்கள் முழங்க சதுர் விளையாட செய்க.
அந்தர தேவரும் அதிசயம் கொள்ளவே.
ஆடை அணிகள் பூண்டு அண்டரும் தொண்டரும் சூழ்ந்திடவே.
தந்தையும் அழைத்த கட்டளை கேட்குமே சடுதியில் தான் எழுந்து இந்திரன் போல் தான் எழுந்து இன்பமுடன் கொலுவுக்கு இலக்கணன் வருகின்றானே.

**இலக்கணன் பாட்டு:** 01. இலக்கணன் வந்தான் சபையை நாடி இலக்கணன் வந்தான்.
02. இலக்கணன் வந்தானே இங்கிர்த பணி பூண்டு கல கலவென்றுமே கனபேரிகை முழங்கவே

**இலக்கணன் வசனம்:** சரணம் சரணம் பிதாவே என்னை அழைத்த காரியம்
இலக்கணன் வசனம் - நான் அறியும் படி சொல்லும் பிதாவே

**துரியன் பாட்டு:** வந்தடி பணிந்திடும் மகிந்தனே நான் சொல்லை கேளும்
எந்தன் ஆசைதீர மணம் செய்ய வேணும்டா மகனே

**இலக்கணன் பாட்டு:** அருந்தவம் செய்து என்னை பெருமையாய் பெற்றிரே ஐயா
திரும்பவும் சொல்லுவீர் வசனத்தை செப்பிய வசனத்தை ஐயா.

**துரியன் பாட்டு:** திரும்பவும் கேட்டதால் தெரிவிக்கிறேன் வாடா மகனே
திருமணம் செய்திட அருமையாய் எண்ணம் கொண்டேன் மகனே.

**இலக்கணன் பாட்டு:** நீங்கள் இருக்கவே எனக்கொரு குறையில்லை தந்தையாரே, கன்னியார் யார் என்று உரைத்திடுவீர் எந்தன் தந்தையாரே

**சூரியன் வசனம்:** கேளும் இலக்கண குமாரனே உனக்கு ஒரு குறையும் வராமல் திருமணம் செய்து வைப்பேன் என்னுடன் வருவீர் ஆக.

**இலக்கணன் வசனம்:** சரணம் சரணம் ஐயா சுவாமி என்னை காப்பாற்ற வேணுமையா சுவாமி

**பலராமர் வசனம்:** கேளும் இலக்கண குமாரனே உனக்கு ஒரு குறையும் வராமல் திருமணம் செய்து வைப்பேன் என்னுடன் வருவீர் ஆக.

**பெருந்திருவாள் வரவு விருத்தம் :** மூண்டாம் பிறைபோல் உதித்திடும் முக ஒளி காந்தியும்
பள பள வெண்ண முத்து வைர் ஊரியம்வைத்திடும் பூசனம் மேனியில்
தக தக வெண்ண நட்புறு நாயகன் அழைத்திட்ட செய்தி கேட்டு
பன்புறு சபைகளில் இன்பமுடன் பெரும் திருவாளும் வருகின்றாளே

**பெரும் திருவாள் பாட்டு :** 01. வந்தாழ் பெரும் திருவாளும் ஒய்யாரமாக ஒய்யாரமாக வாராழ் பெரும் திருவாளும்

02. ஆடை ஆவரணமும் அங்கம் எல்லாம் அணிந்து அன்பரைக் காணவென்று அதிக துரிதமாக

**பெரும் திருவாள் வசனம்:** சரணம் சரணம் பிராண நாதா என்னை அழைத்த காரியம் நான் அறியும் படி சொல்லும் பிராண நாதா

**துரியன் வசனம்:** கேளும் பெண்ணே நமது மகன் இலக்கண குமாரனுக்கு மாயன் மகள் சுந்தரியை மணம் செய்ய எண்ணம் கொண்டேன் உனது எண்ணத்தை சொல்லும் பெண்ணே.

**பெரும் திருவாள் வசனம்:** கேளும் நாதா மகனுக்கு கல்யாணம் செய்ய சம்மதம் கொண்டேன் நாதா.

**பலராமர் துரியன் கண்ணனை சகுனி துவாரகைக்கு பொண் கேட்க போகுதல்.**

**துரியன் விருத்தம்:** வெற்றி குடைபிடிக்க வீணை பேரிகை முழங்க பற்றியே படை மன்னர் சூழ பாலனாம் இலக்கணர்க்கு நற்திசைகள் கொண்ட நாராயணன் மனைக்கு ஏக அத்திநகர் தன்னைவிட்டு அரபக்கொடியோனும் அன்புடன் வருகின்றானே.

**துரியன் பாட்டு:** 01. அண்ட பேரிகை முழங்க வானில் குடி முழங்க ஹரிகிருஸ்னர் பதியை நாடி அரசர்கள் தோன்றினாரே

02. காடு மலை கடந்து கங்கை ஆறு தான் கடந்து நாடியே துவாரகைக்கு ராசர்களும் தோற்றினாரே.

**துரியன் வசனம்:** கேளும் அண்ணா கண்ண மகராசனே துவாரகை வந்து விட்டோம் கிருஸ்ணர் வீடு போக வருவீர் ஆக

**பலராமன் வசனம்:** கேளும் தம்பி கிருஸ்ணா நாங்கள் சகல பேரும் வந்திருக்கின்றோம்இ அறிந்து கொள்ளும் தம்பி

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் அண்ணா நாங்கள் யாவரும் வந்த காரியத்தை நான் அறியும் படி சொல்லும் அண்ணா

**பலராமன் வசனம்:** கேளும் தம்பி இதோ இருக்கும் துரியோதனன் மகனுக்கும் உமது மகள் சுந்தரிக்கும் விவாகம் முடிக்கலாம் என்று எண்ணி வந்தேன் உனது விருப்பத்தை சொல்லும் தம்பி

**கிருஸணர் பாட்டு:** 01. என்னுடனே பிறந்த என்னுடைய தமையனே சார்ரைக்கேளாய் உன்னுடனே வந்த மன்ன மன்னர்க்கெல்லாம் உகந்து வந்தனம் அழித்தேன்.

02. சங்கம் மிகுந்த அண்ணா சில பல சங்கதி சொல்லுவேன் கேள் தேர் விசயன் வந்து சில பல காயங்கள் பண்ணிடுவான்.

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் அண்ணா இப்படி இருக்கிற படியால் அருட்சுணன் மகனை தவித்து துரியன் மகனுக்கு மணம் செய்யக் கூடாது அறிந்து கொள்ளும் அண்ணா.

**கண்ணன் வசனம்:** கேளும் பலராமரே உன்னுடைய சமாத்தியம் எல்லாம் எனது வில்லால் அடக்கி வைப்பேன் எங்களை கூட்டி வந்து ஏமாற்றம் பண்ணுவது சரியல்ல அறிவீர் ஆக

**பலராமர் வசனம்:** கேளும் கண்ண மகராசனே நீர் கோபம் கொள்வது சரியல்ல நம்மிடம் போதிய பணம் இருக்கும் வரையிலும் எவர் பொண்ணையாவது கல்யாணம் செய்யலாம். ஆத்திரப்படாமல் இருப்பீர் ஆக.

**பலராமர் வசனம்:** கேளும் கிருஸ்ணா உன்னிடம் நான் வந்து கேட்டதும் மதியாமல் இல்லையென்று சொல்லிவிட்டாய் அருட்சுணன் மகனுக்கு மணம் செய்ய சித்தமாய் இருக்கிறாய் இதுதான் எனக்கு சொல்லும் பதில்

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் மைத்துனா எனது மகளை உமது மகனுக்கு மணம் செய்ய விரும்பினால் என்ன பரிகம் தருவாய் மைத்துனா

**துரியன் வசனம்:** கேளும் மைத்துனா ஏழு லட்சம் ஒட்டகத்தில் பொன் கொண்டு வந்திருக்கின்றேன் பெற்றுக்கொண்டு உமது பெண்ணை தருவாயாக.

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் மைத்துனா இதோ இருக்கும் கோபால பெட் டி நிறைய பொன் தந்தாய் பெண்ணை தருவேன் மைத்துனா

**கிருஸ்ணர் பாட்டு:** பொன் மிகுந்த மன்னவரே புகளும் எந்தன் வார்த்தை கேளும் என்மனது இச்சப்பட இல்லையே மைத்துனரே

**துரியன் பாட்டு:** இச்சயாக கொண்டு வந்தேன் உந்தன் பெண்ணை கொண்டு போக அச்சுதா சொல்லுமையா இன்னும் பொன் நான் தருவேன்.

**கிருஸ்ணர் பாட்டு:** பொன் தருவேன் என்று சொல்லி எந்தன் பெண்ணை கேட்கல்லுற்றாய் என் பெண்ணில் பதரும் இல்லை. உன் பொண்ணில் பதருமுண்டோ

**துரியன் பாட்டு:** பொன் பதரும் உண்டும் என்று பேசுகிறாய் மைத்துனரே என் பொன்னில் பதரும் இல்லை. உன் பொன்னில் பதருமுண்டோ

**துரியன் வசனம்:** கேளும் மைத்துனா இந்த பசும் பொன்னையெல்லாம் தூற்றி பார்ப்பாயாக.

**கிருஸ்ணர் விருத்தம் :** பார்த்திரே துரியன் மன்னா பசும் பொன்னின் பதரையெல்லாம் காற்றிலே ஓடிப்போக அரைபபெட்டி பொன்தான் கண்டாய் மற்றும் அரைப்பெட்டி பொன்னுக்கு வழியிருந்தால் உரைப்பீர் சேற்றுமே பொன்னை தந்தாய் சேயிலை உனக்கு தானோ

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் மைத்துனா எல்லாம் சேர்ந்து அரைப்பெட்டிக்கு வழியிருந்தால் சொல்லும் மைத்துனா.

**துரியன் வசனம்:** கேளும் அண்ணா கண்ண மக ராசனே நீர் சொன்ன நமது பொக்கிசத்தில் உண்டான பொன்களையெல்லாம் எடுத்து கொண்டு வருவீர் ஆக

**கன்னன் வசனம்:** கேளும் தம்பி துரியோதனா இதோ கொண்டு வந்து இருக்கிறேன். அளந்து கொடுப்பாயாக.

**துரியன் வசனம்:** கேளும் மைத்துனா இதோ இருக்கிறது அளந்து எடுப்பாயாக.

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் மைத்துனா எல்லாம் சேர்ந்து முக்காய் பெட்டி பொன்தான் இருக்கிறது. காப்பெட்டி பொன் இருக்கிறதா சொல்லும் மைத்துனா

**துரியன் வசனம்:** கேளும் மைத்துனா காப்பெட்டி பொன்னை கல்யாண பந்தலில் தருகின்றேன். விவாக முகூரத்தத்தை சொல்லும் மைத்துனா.

**கிருஸ்ணர் வசனம்:** கேளும் மைத்துனா வருகிற வெள்ளிக்கிழமை விவாகம் முடித்து வைப்போம். நீங்கள் சகல பேரும் மாப்பிள்ளையுடன் அரண்மனைக்கு வருவீர் ஆக.

சுந்தரி கல்யாணம் தொடரும்..........


**விநாயகர் கலைக்குழு**
**இல – 4, ஊரியன்கட்டு,**
**தட்டுமுனை, வாகரை.**
**பாடியவர் கா. இராசரெத்தினம்**
**எழுதியவர் க. கேதீஸ்வரன்**


**சவால்கள் வரும் போது தான் நீங்கள் நினைத்திராத திறமைகள் உங்களிடம் ஒளிந்திருப்பதை உணர்வீரகள்.**

-டோரே ஆர்பர்ட்--

**அடுத்தவர்களிடம் அன்போடு நடந்து கொள்ளும் சமயங்களில் நீங்கள் சொர்க்கத்தை நேரில் காண்பீரகள்.**

-நோவாலிஸ்-



# தொலைக்காட்சிப் பயன்பாடுகளும், துஸ்பிரயோகங்களும்

விஞ்ஞான உலகம் பெற்றுத் தந்த வியத்தகு சாதனங்களுள் தொலைக்காட்சியும் ஒன்றாகும். அறிவு வளர்ச்சிக்கும். ஓய்வு நேரப் பயன்பாடுகளுக்கும் உதவும் ஒரு அரிய பொக்கிஷம் என்று தான் கூற வேண்டும். இதனூடாக மனிதனின் பண்டைய மரபுகளில் பேணிப் பாதுகாக்கும் வகையில் ஆரம்ப கால கட்டத்தில் கலை, கலாசாரம் தொடர்பாகவும் அதனைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும் பல சிறந்த நிகழ்ச்சிகளையும் அத்தோடு விஞ்ஞான வித்தைகள் அதாவது விஞ்ஞானிகளால் புதுபுதுப் விடயங்களையும், ஆய்வுகளையும் ஓய்வான நேரங்களில் வீட்டில் இருந்தபடியே கண்டு கழிக்கலாம். ஆரம்பத்தில் பின் நிறங்களில் தட்டுருவமாக பார்க்க கூடியதாக ஒளிப்பரப்பியது.

இலங்கை வாழ் மக்களின் பண்பாட்டுக் கலாசாரங்களை தம்தம் மொழி, இன, மத, குல, சாதி என்பவற்றுக்கிணங்க தங்களுடைய கலை, கலாச்சாரத்தை பேணி பாதுகாத்து வந்தனர். கலை, கலாச்சாரம் என்கின்ற போது உடையணியும் முறை மற்றும் திருமண முறை, விளையாட்டு ஓவியம், நடனம், உணவு வகைகள் போன்ற இன்னும் பலவற்றைக் கூறலாம். இருப்பினும் தொலைக்காட்சியினூடாக பிறநாடுகளின் மொழி, கலை, கலாச்சாரப் பண்புகளை குறுநாடகமும், திரைப்படமும் ஆகிய கலைநிகழ்ச்சி ஊடாக எமக்குத் தருவதால் கலை, கலாச்சாரம் தொடர்கான அறிவை பெற முடிகின்றது. எமது நாட்டுக் கலாச்சாரத்துடன் ஒப்பிட்டு நயக்கக் கூடியதாகவும் உள்ளது. சிறியோர் முதல் பெரியோர் வரை கலை, கலாச்சாரம் தொடர்பான பழக்க வழக்கங்களை பேணிப் பாதுகாக்கின்ற வகையில் தொலைக்காட்சியின் பயன்பாடு ஓரளவு நன்மை பயக்கின்றது.

மேலும் தொலைக்காட்சிகளை கற்புலனுக்கு காட்டப்படும் கலை கலாச்சாரமானது சாதாரணமானவையல்ல. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் தூய உணர்வின்பால் என் அன்னை" என்னும் பழ மொழிக்கிணங்க கலையானது இறைவனோடு ஒப்பிடத்தக்கது. அதாவது கல்விக்குரிய கலைவாணியை கலைக் கூடத்திற்கும் முதல் தெய்வமாக விளங்குகின்றது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது கலை, கலாச்சாரம் என்பது எமது உயிருக்கு மேலானவை என போற்ற வேண்டும்.

மேலும் ஐவகைக் கலைகளில் இன்றைய அன்றைய நிலைகளை அந்தந்த இடங்களின் கலை பொக்கிஷங்களையே ஒளிப்பதிவு செய்து காட்டுவோரும் உலகில் நடைபெற்று வருகின்ற பல அதிசயங்களையும் கண் முன் கொண்டு வருவதும் அத்தோடு இயற்கை அனர்த்தங்களையும் அந்தந்த நிகழ்வு நடக்கும் இடங்களிலையே பதிவு செய்து ஒளிபரப்புவது மற்றும் விண்வெளி பிரயாணங்கள் விண்வெளியில் நடக்கும் அணர்தம் வெற்றிகள் யாவுமே ஒளிபரப்புவது மக்களுக்கோர் வரப்பிரசாதமே! உதாரணமாக 2008ம் ஆண்டிளவில் சீன விண்வெளி வீரர் விண்வெளியில் நடந்ததை கூற வீட்டில் இருந்த படியே உலக மக்கள் பார்வையிட்டனர். அத்தோடு மிக அண்மையில் நடந்த உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியையும் மற்றும் இன்னும் பல விளையாட்டுப் போட்டியையும் சமய சார்ந்த நிகழ்வுகளும் ஒலிம்பிக் போட்டி, உலக அழகித் தெரிவு, மலையேறல், ஆழ்கடல் ஆராச்சிகள் என்னும் பலவகை நிகழ்வுகளையும் அத்தோடு விஞ்ஞான உலக நிகழ்ச்சிகள் மூலம் மரங்கள், பறவைகள், மீன்கள், மிருகங்கள் என பலவற்றை தொலைகாட்சி மூலம் வீட்டில் இருந்தபடியே காட்டப்படுகிறது.

சிறுவர்களை பொறுத்த அளவில் அவர்களை ஈர்க்கும் சிறுவர்களுக்கான நாடகங்கள், கதைகள், விளையாட்டுக்கள், பாட்டுக்கள் என்பனவும் அவ் நிகழ்வுகளில் அவர்களை பங்கு கொள்ளக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் என்பவற்றை ஒளிபரப்புகின்றனர். மற்றும் நாட்டில் பயன்பெறக் கூடிய கலை, கலாச்சாரம் தொடர்பாக மற்றும் அரசியல் ரீதியாகவும் பல விளம்பரமும், செய்திகளையும் உடனுக்குடன் எமது கண் புலனுக்காக கொண்டு வருவது தொலைக்காட்சியாகும். இவ்வாறு நன்மை பயக்கக் கூடிய விடயங்களை கற்புலனுக்காக கொண்டு வரும் காட்சிகள் சில விளம்பரங்கள் கவர்ச்சிகரமாக செய்துள்ளது. அதே வேளை விளம்பரங்கள் மூலம் எமது கலை, கலாச்சாரத்தினையும் பெண்களையும் துஸ்பிரயோகம் செய்கின்றது. பெண்களை பாலினப்படுத்துவதாக காட்சிகளை ஒளிபரப்புவது கவலைக்குரிய விடயமே. சில நடனக் காட்சிகளில் இளம் பெண்களின் ஆடைக்குறைப்பு, ஆண்களுடன் பழகும் விதம் என்பன அருவருக்கத்தக்கதாகவும், எதிர்கால சிறுவர் மனநிலையில் தப்பான எண்ணங்களை உரவாக்கக் கூடியதாக உள்ளது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்னும் திருவள்ளுவரின் குறளுக்கிணங்க அதாவது ஒழுக்கமானது மனிதனின் வாழ்க்கைக்கு முக்கியமானதொரு அம்சமாக உள்ளது. அதாவது மனிதன் உலகில் சிறந்து விளங்க வேண்டுமானால் ஒழுக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒழுக்கம் என்ற வகையில் மனிதனின் பண்டைய மரபுகளை பேணிப் பாதுகாப்பதாகும். அதாவது கலை, கலாச்சாரம் என்பனவோடு ஒழுக்கமாகும். ஒழுக்கம் என்பது ஒரு மனிதனின் கண்களைப் போன்றதாக பேணிப் பாதுகாப்பது மனிதனின் கடமை இருப்பினும் தொலைக்காட்சியினூடாக ஒழுக்கங்களும் துஸ்பிரயோகப்படுத்தப்படுகின்றது. கவலைக்குரிய விடயமாகும். மற்றும் தொலைக்காட்சியில் ஒலி பரப்பப்படுகின்ற நாடகங்களும் தரம் குறைந்தவையாகவே உள்ளது. ஒரு நல்ல கருத்தை தர வல்லதாகவோ சிந்தனைக்கு ஏற்றதாகவோ சமூதாயத்தை மேம்படுத்தக்கூடிய கருத்துக்களை கொண்டதாகவோ அமைவதில்லை.

மேலும் கொலை,கொள்ளைச் சம்பவங்களை உண்மையில் நடந்தவற்றை அவ்வாறு காட்டுவதும் கற்பனையாகவோ உள்ளது. கொலை, கொள்ளை முயற்சிகளை காட்டும் போது சிறியவரோ, பெரியவரோ அவ்வாறு செயற்படுவதற்கு தூண்டி விட வாய்ப்புக்கள் உண்டு. மேலும்

இனத்து வசமான சொற்பிரயோகங்கள் சமய ரீதியாக இழிவான செயல்களை காட்டுதல் கடவுளைப் போன்று கடவுள் உருவங்களை ஏளனம் செய்தல் என்பனவும் துஸ்பிரயோகங்களே இவ்வாறான விடயங்களைத் தவிர்த்து நல்ல எண்ணங்களையும், பண்டைய மரபுகளை பெணிப் பாதுகாப்பதற்கான வழிகளையும், பண்டைய மரபுகளை பேணிப் பாதுகாப்பதற்கான வழிகளையும் மக்களிடையே நல்ல எண்ணக் கருத்துக்கள் உருவாக்கக் கூடிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பச் செய்து எல்லோராலும் வரவேற்க தக்க விடயமாகும்.

மேற் கூறிய விடயங்களைப் பார்க்கின்றபோது தொலைக் காட்சியினால் பழைய மரபுகளைப் பேணிப் பாதுகாக்க கூடிய வகையிலும் நன்மை பயக்க கூடியதாவும் பல விடயங்களை துஸ்பிரயோகம் செய்யக்கூடிய ஊடகத் துறையாகவும் தொலைக்காட்சி செயற்படுகின்றது. என்பது உண்மை.

**வே.வேல்முருகு**
**கண்ணாக் கலைக்குழு**
**நாகபுரம்**
**பால்சேனை**

**ஊக்கமுள்ள மனிதன் அங்கும் இங்கும் நிற்காமல்**
**தன் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பான்.**
-எமர்சன்-

**ஒருவருடைய நடத்தையை வைத்து அவரை**
**எடைபோட வேண்டுமே தவிர அவர் செய்யும் தொழிலை வைத்தல்ல.**
-ஆனன்-

**நண்பர்களிடம் கடன் வாங்குபவர்கள்**
**நட்பை விற்று விடுகின்றார்கள்.**
-ஷேக்ஸ்பியர்-



# ஊனம் ஊனம் தான்

வளைந்தோடும் நதியும் குயில் பாடும் இதமும் சதிராடும் மயிலும் துள்ளியோடும் மானும் கிள்ளியாடும் தெருவும் நிறைந்த வனப்பூரான பூஞ்சோலை என்னும் கிராமத்தில் வாழ்ந்த கண்ணனுக்கும் கமலாவுக்கும் உதித்தவன் தான் தீபன், தீபன் பிறந்ததிலிருந்து அவனது உடல் வளர்ச்சி நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போனது இந்த அபூர் வளர்ச்சியை பார்த்த தீபனின் மாமிமார் கூட "என்னடி மீனா நமக்குப் பிறந்த ஒரு பிள்ளை கூட இப்படி உடம்பெடுக்கல்ல கமலாக்குப் பிறந்த பையன் பிஞ்சிப் பூசணிக்காய் மாதிரி ஒவ்வொரு நாளும் பெருக்கிறானே." எனக் கூறி பொறாமைப்படவும் செய்தனர். இதே போன்றே தீபனின் தாத்தாவும் அவருடைய பாலிய சினேகிதர்களிடம் "டேய் என் மகள் கமலாவுக்கு பிறந்திருக்கின்ற பையன் ஒரு உதய சூரியன்டா, அப்படி அழகும் அப்படி உடம்பாகவும் இருக்காண்டா என்ர பேரன் நீங்க பாருங்கடா ஒரு காலம் இந்த நாட்டையே ஆழுவான்" என ஊரெல்லாம் பெருமையாக புகழ்ந்திடவும் செய்தார்.

இவ்வாறு நாட்கள் கரைந்தோடி ஐந்து திங்களை எட்டியது. ஒரு நாள் பூஞ்சோலைக்கிராமாத்தில் இடைவிடாத அடை மழை பெய்து கொண்டிருந்ததால் பூஞ்சோலையின் வயல் வெளிகளெல்லாம் நீர் வெளிகளாக காட்சியளித்தன. கமலா அந்த மழையில் தீபனைத் தூக்கிக்கொண்டு அவளது அன்னையின் வீட்டுக்கு சென்றபோது இலேசான நனைந்து விட்டான் தீபன். இதன் காரணமாக அன்றிரவு தீபனுக்கு காய்ச்சல் போட்டது. இதனால் பொழுது புலர்ந்தவுடன் தீபனைத் தூக்கிக் கொண்டு தன் தாயிடம் சென்ற கமலா "அம்மா தீபனுக்கு இரவு காய்ச்சல் போட்ட மாதிரி இருந்திச்சி பாருங்கம்மா" எனக் கூறிய கமலா தீபனை தன் தாயிடம் கொடுத்தாள். தீபனை வாங்கியெடுத்த அவனது பாட்டி அவன் பஞ்சுப் பாதங்கள், பிஞ்சுக்கரங்கள் சென்னி, கழுத்து போன்றவற்றைத் தொட்டுப்பார்த்து விட்டு "போய் கீழ்காய் நெல்லி பிடுங்கி வா" என கமலாவை ஏவினாள். தீபனின் பாட்டி கமலாவும் அவசர அவசரமாக பிடுங்கிக் கொண்டு கொடுக்க அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்ற தீபனின் பாட்டி அந்த கீழ்காய் நெல்லியை அம்மியில் வைத்து அரைத்த அதன் சாற்றை பிளிந்தெடுத்து அதை பசுப்பாலுடன் கலந்து இரண்டு தேக்கரண்டி தீபனுக்கு பருக்கி விட்டு மீதியை கமலாவிடம் கொடுத்து "இதில் ரெண்டு தேக்கரண்டி மதியமும், ரெண்டு தேக்கரண்டி சாயங்காலமும் கொடு. காய்ச்சல் குணமாகும்" எனக்கூறி அனுப்பினாள் தீபனின் பாட்டி கமலாவும் தாய் கூறியபடியே தீபனுக்கு காய்ச்சல் மேலும் கடுமையானது. அன்றிரவு தூங்கவே இல்லை.



தீபனுக்கு காய்ச்சல் மேலும் கடுமையானது. அன்றிரவு முழுவதும் தீபன் அழுது கொண்டே இருந்தான். இதைப்பார்த்த கமலா "என்னங்க தீபனுக்கு காய்ச்சல் தணியிது இல்ல ஏதாச்சும் செய்ங்களேன்." என்றாள். அதற்குக் கண்ணன் "என்ன கமலா இந்த இருட்டுல செய்றது. இங்கே இருந்து பத்தொன்பது கிலோமீற்றர் போகணும். ஆஸ்பத்திரிக்கு அப்படி போறத்தக்கும் ஒரு சைக்கிள் கூட இங்கே எடுக்கமுடியுமா?" என தன் ஊர் வறுமையினையும் எடுத்தியம்பினான் கண்ணன். கமலாவும் ஊர் உண்மையிணை உணர்ந்து விடியும் வரையும் பொறுத்திருந்தாள். விடிந்ததும் பேருந்தில் கண்ணனும், கமலாவும் விரைந்து சென்று வைத்தியசாலையை அடைந்து வைத்தியரிடம் நடந்தவற்றை எடுத்துக் கூற அவரும் பரிசோதித்து விட்டு மூன்று விதமான மாத்திரைகளும் பாணி போன்ற மருந்தினையும் கொடுத்து "இதை மூன்று வேளையும் கொடு காய்ச்சல் சரியாகும்." எனக் கூறி அனுப்பினார். கமலாவும் அதன்படியே மூன்று வேளையும் தவறாது மருந்தைக் கொடுத்து வர காய்ச்சல் இரண்டாம் நாள் குணமாகும். ஆனால் மூன்றாம்' நாள் தீபனின் பெற்றோர் உட்பட உறவுகள் அனைவருக்கும் பேரதிர்ச்சி காத்திருந்தது. அன்று காலை தீபனை தூக்கி நிற்பாட்டினால் கமலா. தீபன் "தொப்" என கீழே விழுந்தான். மீண்டும் தூக்கி நிற்பாட்ட கால்கள் இயக்கமற்று வளக்கமில்லாமல் இருப்பதைக் கண்ட கமலா "என்னங்க நம்மட பிள்ளட கால் வளக்கமில்லாமல் இருக்கு; நடந்த பிள்ள நிற்கிறானே இல்ல இங்கே பாருங்களேன்" என தன் கணவனிடம் பிள்ளை நிற்பாட்டிக்காட்டி நெஞ்சிலடித்து பதறினாள். இந்தத் தாயின் பதறல் ஒலி கேட்ட உற்ற சுற்றமெல்லாம் ஓடி வந்து" என்ன நடந்தது" எனக் கேட்க கமலா தன் பிள்ளையின் நிலையினை அனைவருக்கும் கூறினாள். அவர்களும் பிள்ளையைத் தூக்கி பல தடவைகள் நிற்பாட்ட முயன்றும் பலனளிக்காததால் அனைவருமே கூடி நின்றழுதனர். ஆனால் மனிதர்களுள்ள ஈரமனசு கூட இறைவனுக்கில்லை போலும் அந்த கண்ணீர் மழை அவன் நெஞ்சை நனைக்கவில்லை. அதனால் தீபனின் நிலை அப்படியே காணப்பட்டது. இதை உணர்ந்த தீபனின் தாத்தா "மகள் கமலா நீங்க உடனே பிள்ளைய ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போங்க" கூற கமலாவும் கண்ணானும் தீபனை எடுத்தச் சென்று கதிரவெளி வைத்தியசாலை வைத்தியரிடம் காட்டினர். அவர் தீபனை நன்றாக பரிசோதித்து விட்டு "உங்கட பிள்ளைக்கு இங்கே வைத்து வைத்தியம் பார்க்கேலா நான் உங்கள மட்டக்களப்பிற்கு அனுப்புறன்." என்று கூறி அம்பூலன்ஸ் வண்டியில் தீபனையும், கமலாவையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார். அங்கு சென்று தீபன் சேர்க்கப்பட்டதும். அங்குள்ள வைத்தியர்களால் ஒரு தடவைக்கு பல தடவை தீபன் நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்பு அவனுக்கு ஏற்பட்டிருப்பது போலியோ நோய் என்பது வைத்தியர்களால் கண்டறியப்பட்டது. அதன் பின்பு தீபனின் தாயிடம் வந்த தலைமை வைத்தியர் " அம்மா உங்கட மகனுக்க ஏற்பட்டிருப்பது போலியோ நோய் இந்த நோய்க்கு தடுப்பூசி போடப்படுது பொலியோ சொட்டு மருந்தெல்லாம் இப்போ கொடுக்கப்படுது இதெல்லாம் உங்கட பிள்ளைக்கு கொடுத்தனீங்களா?" அதற்குக் கமலா "ஐயா நீங்க சொல்றதொன்றும் கொடுக்கல்ல" அதற்கு

வைத்தியர் "ஏன்! கொடுக்கல்ல" கமலா "ஐயா இப்ப நீங்க சொல்லித்தான் தெரியும் இப்படியான நோய்க்கு தடுப்பூசி சொட்டு மருந்து கொடுக்கணும் என்று, எனக்கு இதுக்கு முதல் தெரியாதையா" என கமலா கூற "அப்படியென்றால் இந்த சொட்டு மருந்து கொடுக்கிறவங்கள் உங்கட ஊருக்கு வாறதில்லையா? என்றார். வைத்தியர். அதற்குக் கமலா "எப்பயையா? வருவாங்க ஒழுங்கான ரோட்டில்லாம அப்படி ரோட் டிருந்தாலும் வாறவழியில சரியான யானைப் புழக்கம்" என்றாள் கமலா. "அப்படியென்றால் கதிரவெளி வைத்தியசாலையில் வந்து கொடுத்திருக்கலாமே" என வைத்தியர் கூற "யாரையா எங்களுக்கு இதெல்லாம் வந்து சொல்லுவாங்க. இப்படி ஒன்றுமே தெரியாம அந்தக் காட்டுல ஒதுக்கப்பட்டு கிடக்கிறமையா, நீங்க தாண் எண்ட பிள்ளைய காப்பாத்தித் தரணும்" என்றாள் கமலா "பாத்திங்களா? உங்களப் போல தாய்மார் விடுர பிழையால எத்தன குழந்தைகள் ஊனமாப் போய் அவங்கட எதிர்கால வாழ்வே சீரழிந்து போகுது தெரியுமா? சரி எதற்கும் நீங்க பயப்படாதீங்க நான் உங்கட குழந்தை சுகப்படுத்தித் தாரன்" எனக் கூறிச்சென்றார். இதன் பின்பு ஒன்றரை மாதம் வைத்தியம் பார்க்கப்பட்டபோதிலும் தீபனின் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் காணப்படாததால் கண்ணன் கமலாவிடம் "கமலா இங்க வந்து ஒன்றரை மாதமாகுது நம்ம மகனுக்கு சுகம் வாற மாதிரி காணல்ல. இப்படியான வருத்தங்கள ஒரு நாட்டு வைத்தியர் சுகப்படுத்துறாராம் நாம அவரிட்ட போவோமா?" எனக் கண்ணன் கேட்க கமலாவும் "சரி என" தலையசைக்க உடனே இருவரும் தீபனை எடுத்துக்கொண்டு தங்கள் பூஞ்சோலை கிராமத்தை அடைந்தனர். கண்ணனும், கமலாவும் தீபனை எடுத்து வந்திருப்பதைக் கேள்விப்பட்ட சொந்தங்களெல்லாம் தீபனைப் பார்த்ததும் திகைத்துப்போய் "என்ன பிள்ளை கமலா! வெள்ளரிப்பழம் போல் இருந்த பிள்ள இப்படிச் சருகாகி கிடக்கிறானே" என மனவேதனைப்பட்டுச் சென்றார்கள். இன்னும் சிலர் "ஐயோ ராசா முழு பௌர்ணமியாய் இருந்த நீ இப்ப தேய்பிறையாய் தேய்ந்து விட்டாயேடா" தாங்கொண்ணா துயரத்துடன் புலம்பிச் சென்றனர். மற்றும் சிலர் வந்து "பிள்ள கமலா எப்படிரி மனம் தாங்கி இருக்காய். தங்கம் போல் இருந்த பிள்ள இப்படி தகரமாக கிடக்கிறதப்பாத்து" என அனுதாபப்பட்டு அழுதும் சென்றனர். இந்த அன்பு வார்த்தைகளெல்லாம் கமலாவின் உள்ளத்திலே எரியிற வீட்டில் பெற்றோலை ஊற்றியது போல் மேலும் துயரப்படவைத்தது. கடலாவுக்கு வாய்விட்டு அழனும் போலிருந்தது. ஆனால் பொறுத்துக்கொண்டாள்.

மறுநாள் நிந்தவூர் நாட்டு வைத்தியர் முஸ்த்தப்பாவிடம் கண்ணனும், கமலாவும் தீபனைக் கொண்டு காட்டினார்கள் அவர் தீபனை நாடிபிடித்து பார்த்து விட்டு "நீங்க கொஞ்சம் முந்தியே வந்திருக்கலாம். இருந்தும் பரவாயில்ல நா குணப்படுத்தித்தாரன். என்ன கொஞ்ச பணம் தான் செலவாகும்" என்றார். "ஐயா எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்ல எங்கட பிள்ளைய சுகமாக்கித்தாங்க" என்றான் கண்ணன். பதிலுக்கு கமலாவும் "ஓமையா" என்றாள். வைத்தியம் பார்க்கப்படத் தொடங்கி மூன்று மாதமாகியது. ஆனால் தீபனின் உடலில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. "என்னங்க மூன்று மாதத்துக்கு மேலாகுது தீபனின் வருத்தம் அப்படித்தானிருக்குது" என்றாள் கமலா "நானும் அதப்பற்றித்தான் யோசிக்கிறன். எதுக்கும் நீ கடவுள நல்லா வணங்கு அவன் நம்மட மனக காப்பாத்துவான். "என்றான் கண்ணன். இதன் பின்பு மாதங்கள் கடகடவென கடலலை போல் கடந்து சென்று ஆறுமாதமாகியது. தீபன் நடக்க ஆரம்பித்து விட்டான். ஆனால் முன்பு போல் நன்றாக நடக்க முடியவில்லை. ஒரு பக்கம் கெழிந்து தான் நடந்தான். இதைப்பார்த்து கவலையுடன் இருந்த தீபனின் பெற்றோரிடம் வந்த முஸ்த்தப்பா "நீங்க எதுக்குமே கவலப்படாதீங்க இப்பொ உங்கட மகன் இப்படித்தான் நடப்பான். ஆனால் போகப் போக அதையும்

சரிப்படுத்தர்றது என்ற பொறுப்பு. ஆனா பணம் தான் அதிகமாக தேவைப்படும்." என்றார் முஸ்தப்பா. கண்ணன். "எவ்வளவு தேவைப்படும்" எனக் கேட்க "நாலுலட் சத்தக்கு மேல தேவைப் படலாம்" என்றார் முஸ்த் தப்பா இதைக் கேட்டதும் கண்ணனும் கமலாவும் ஒரு வரையொருவர் பார்த்து மௌனமாகிப் போனார்கள். பின்பு முஸ்த்தப்பா அவ் விடத்தை விட்டு நகர கமலா " என்னங்க ஏற்கனவே ஊர்ல பட்ட கடன் ஐந்துக்கு மேல வரும் நமக்கு உதவி செய்ய வேண்டியவங்களெல்லாம் தாராளமாக உதவி செய்திட்டாங்க. இனி யாரிட்ட நாம கடன்படுரது. அப்படிப்பாட்டாலும் நம்மிடம் என்ன சொத்துப்பத்திருக்கு வித்துட்டு கடனக்கட்ட. அதால கடவுள்ட்ட பாரத்த போட்டுத்து தீபன எடுத்து வீட்ட போகலாம்ங்க" எனக் கமலா கூறியதைக் கேட்ட கண்ணன் சிந்தித்தான். "கமலா கூறுவது சரிதான் இருந்த காசி, நகை நட்டெல்லாம் தீபனுக்காக வித்துச் சுட்டுப் பாத்து முடிஞ்சி போச்சி இனி என்ன இருக்கு நம்மிடம் என்ர நிலையைப் பற்றியும் கமலா நன்குணர்த்திருக்கிறாள். இறைவா ஒவ்வொரு ஜென்மத்துக்கும் என் கமலாவே எனக்கு துணைவியாய்த்தரவேண்டும். என்று இறைவனையும் பிரார்த்திவனாய் "சரி கமலா! நீ சொன்ன மாதிரி தீபன எடுத்துத்து வீட்டுக்குப் போகலாம்," என்றான் அரை மனதோடு இவ்வாறு தீபன் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டு ஆண்டுகள் பல பறந்து செல்ல தீபனுக்கு ஐந்து வயதாகியது. பக்கத்து வீட்டுப்பிள்ளைகள் பாடசாலை சென்று வருவதைப்பார்த்த தீபனுக்கு தானும் பாடசாலை செல்ல வேண்டும். படிக்கவேண்டுமென்ற ஆசையும் மலர கமலாவிடம் வந்து "அம்மா நான் பள்ளிக்குப் போகணும்" என்றான். "என்ர ராசாவுக்கு இப்பதானே அஞ்சி வயசாகுது அடுத்த வருசம் போகலாம்." என்றாள் கமலா" இல்ல நான் நாளைக்கே போகணும். இல்லென்றா சாப்பிட மாட்டன்" எனக் கூறிக் கொண்டு தன் அறைக் கதவை சாத்திவிட்டு உள்ளே இருந்து விட்டான். கமலாவுக்குத் தெரியும் அவன் பிடித்தானென்றால் உடும்புப்பிடிதான். அவன் சொன்னதை செய்தேயாக வேண்டும். ஆதனால் கண்ணன் வயலிலிருந்து வந்ததும் நடந்ததைக் கூறினாள். கண்ணன் கேட்டு விட்டு பாடசாலை அதிபரிடம் சென்று தன் மகனின் பிடிவாதக் குணத்தைப் பற்றியும் அவன் படிப்பு மேல் கொண்டுள்ள ஆர்வம்பற்றியும் எடுத்துக் கூற அதிபரும் பாடசாலைக்டகு அனுப்பிவைக்கும்படி அனுமதி கொடுத்தார். தீபனிடம் வந்து இந்த செய்தியை கண்ணன் கூற அன்று நள்ளிரவு வரையும் பாடசாலை செல்லும் உற்சாகத்தில் தூங்காமல் விழித்தக்கொண்டே இருந்தான். பின்பு தூங்கியவன் பொழுது புலர்ந்ததும் பாடசாலை செல்லத்தயாராகி விட்டான். அப்பொழுது பக்கத்து வீட்டு சுதாவும் பாடசாலை செல்ல வந்து கொண்டிருந்தான். அவனோடு தீபனை பாடசாலைக்கு அனுப்பி வைத்தாள் கமலா. அன்றிலிருந்து தீபனின் வாழ்க்கை பாடசாலை வாழ்வொடு பின்னிப்பிணைந்து சென்று கொண்டிருந்தது. பாடசாலையில் நிகழ்கின்ற மாணவர் மன்ற நிகழ்வுகளில் தீபன் நாடகம் நடிப்பான். பக்திப்பாடல்கள், சினிமாப் பாடல்கள் பாடுவான். இப்படி தீபன்ட எல்லா நிகழ்வுகளிலும் முன்னோடியாக காணப்பட்டதால் அப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளிடம் செல்லப்பிள்ளையாக மதிக்கப்பட்டான். இதன் காரணமாக படிப்பில் படு மக்காக இருந்து வந்தான். இவ்வாறு ஐந்தாம் தரத்தையும் அடைந்து விட்டான். ஆனால் எழுத வாசிக்கத் தெரியாக நிலையே காணப்பட்டது. இதைக் கவனத்திற் கொண்ட கண்ணன் பாடசாலை அதிபரிடம் சென்று "ஐயா என்டர மகன் ஐந்தாம் தரம் இந்த முறைபடிக்கிறான். ஆனா அவனுக்கு இன்னும் எழுத வாசிக்கத் தெரியாது அவன் மேல கொண்ட பாசத்தால நீங்க எல்லோரும் கண்டிக்காம படிப்பிக்கிறிங்க என்று எனக்குத் தெரியும். ஆனா நாம எல்லோரும் காட்டுர பாசத்தால அவன்ர படிப்புப் பாழாகிப் போயிடுமோ என்று எனக்குப் பயமா இருக்கையா" எனக் கூறிவிட்டுச் சென்றான். கண்ணன். கண்ணன் சென்றதும்

கண்ணன் கூறியதை சிந்தித்த அதிபர் கண்ணன் கூறியது சரியெனப்பட்டது. அன்றிலிருந்து தீபன் கண்டித்து கற்பிக்கப்பட்டான். அதன் பின்பு தீபனும் மிக விரைவாக எழுதப்படிக்க பழகிக் கொண்டான். எந்தப் பாடத்து ஆசிரியர் பாடத்திற்கு வந்தாலும் தீபனை வாசிக்கும் படி எழுப்பி விடுவார்கள். அந்த ளவிற்கு அவனிடம் வாசிக்கும் திறன் காணப்பட்டது.

இவ்வாறான கால கட்டத்தில் அந்தப் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ந்தது. தீபனுடன் கற்கின்ற மாணவ மாணவிகள் ஓட்ட நிகழ்வுகளிலும், உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போன்ற நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்று வந்து காட்டிய போது, "ஏன்! ஏன்!! என்னால ஓட முடியல்ல பாய முடியல்ல, என்னோட உடலும் அவர்களின் உடலைப்போலிருந்தால் நானும் ஓடியிருப்பேனே பாய்ந்திருப்பேனே" என அவனது உடல் ஊனம் உள்ளத்தையும் ஊனப்படுத்த அவ்விடத்தில் நிற்க மனம் அத்துப் போனவன் தன் வீட்டுக்குச் சென்றான். தீபன் வருவதைக் கண்ட கமலா "என்னப்பா தீபன் விளையாட்டு முடிய முதல் வந்தனீங்க" எனக் கேட்க "தலையிடிக்கிறதம்மா அதான் வந்த நான்" எனத் தாயிடம் பொய்யுரைத்து விட்டு தன்னறைக்குச் சென்று படுத்துறங்கி விட்டான். இதன்பின்பு அடுத்த ஆண்டு அவனூர் பாடசாலையில் ஐந்தாம் தரம் வரைக்கும் இருந்த காரணத்தினால் மேற்கொண்டு படிப்பதற்காக பக்கத்தூரிலிருந்த கதிரவெளி விக்கினேஷ்வரா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வந்தான். அங்கு அவன் கற்று வருகின்ற வேளை வெளியூரவர் ஒருவர் அவனைப்பார்த்து கேலி செய்ததை கேள்வியுற்ற அவனது வகுப்பு மாணவ மாணவிகள் கோபங்கொண்டு அந்த மனிதரைப் போட்டு அடிஅடியென அடித்துப் போட்டனர். இதைப் பார்த்த தீபன் "இதற்கெல்லாம் காரணம் யார் நான் தானே என் மீது கொண்ட பாசத்தால் தானே நம் நண்பர்கள் யாரோடெல்லாம் சண்ட பொட வேண்டியிருக்கிறது" எனத் தனக்குள்ளே வேதனைப்பட்டவனாய் அமர்ந்திருந்தான்.

இது போன்றே இன்னுமொரு சம்பவம் நிகழ்ந்தது. தீபன் எட்டாம் தரம் படிக்கின்றபோது அவனது ஊரிலுள்ள மாரியம்மன் ஆலயத்தில் வருடாவரும் உற்சவம் நிகழ்ந்தது. அங்கு சென்ற தீபன் தன்னூர் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது அந்தத் திருவிழாவிற்காக வந்திரந்த பக்கத்தூர் பையன் தீபனைப் பார்த்து கேலி செய்து சிரிப்பதைக் கண்ட அவனூர் சினேகிதன் அந்தப் பையனுக்கு நல்லா சாத்து சாத்தென சாத்த இதைப்பார்த்த அந்தபக்கத்தூர் பையனின் தந்தை வந்து "ஏண்டா என்ர மகனுக்கு அடிச்ச நீ" எனக் கேட்டார். அதற்கு சிவநாதன் "எங்கடஊர் செல்லப்பிள்ளை தீபன் அவனைப் பாத்து உங்கட மகன் கேலி செய்ய நாங்க பாத்திருக்கனுமா?" என உறுமிய சத்தம் கேட்டு பூஞ்சோலை கிராமத்து பெரியவர்களெல்லாம் "என்ன சிவநாதன் நடந்தது" என தீபனின் நண்பன் சிவநாதனிடம் கேட்க சிவநாதன் நடந்ததை விபரிக்க அவர்களும் அந்தப் பையனுக்கு அடிக்கப்போக அந்தப் பையனின் தந்தை மன்னிப்புக் கேட்டு தன்ர மகனை தப்பவைத்து எடுத்துச் சென்றகதை தீபனுக்கு மூன்று தினம் கழித்தே தெரியவந்தது. அன்றிலிருந்து தீபன் நினைத்தான் "நமக்கு நமது சகோதரர்கள் மட்டும் சகோதரமல்ல நமது பெற்றோர் மட்டும் பெற்றோர் அல்லபெ பூஞ்சோலையிலுள்ள அனைவரும் பெற்றோரே அவர்களது பிள்ளைகள் அனைவரும் நமதுறவுகளே" என முடிவு செய்து கொண்டான்.

ஆனால் தீபனுக்கு இப்படியும் பல சம்பவங்கள் நிகழ்ததுண்டு. தீபனோடு நன்றாகப் பழகி அவன் வீட்டில் உண்டு உறங்கிச் சென்றவர்கள் கூட அவனை வெளியூர் கோயில்களிலோ, அல்லது பெரிய நிகழ்வுகளிலோ அவனைக் கண்டாலும் கதைக்காமல் சென்ற நண்பர்களுமுண்டு. அவனே தானாகச் சென்று கதைத்தாலும் அவனை அலட்சியம் செய்து சென்றவர்களுமுண்டு. இதனால் மனம் நொறுங்கிய அவன் தற்கொலை செய்யு முடிவெடுத்தும் இதனால் துயரப்படப்போவது தன் தாய்,





தந்தையரே என்ற உண்மையை உணர்ந்தவன் அந்த முடிவை தவிர்த்துக் கொண்டதும் யாருமே அறியாத கதை. இப்படி நொந்து போய் இருக்கின்ற அவனுக்கு இப்போ யார் அவனைப் பார்த்து அனுதாபப்பட்டாலும் கோபம் கொள்வான். யார் கேலி செய்தாலும் கோபம் கொள்வான். ஆனால் யார் மட்டும்சாதாரண மனிதனாகப் பார்க்கிறார்களோ அவர்களோடு மட்டும் ஒட்டிக்கொள்வான்.

இவ்வாறு மரத்துப் போன மனசுடன் சாதாரண தரம், உயர்தரம் வரை படித்து சித்திபெற்றாலும் அவனது யுகம் இருண்ட யுகமாகவே இருந்து வந்தது. அப்போது தான் அவன் வானில் முழு பௌர்ணமியாய் ஒரு தேவதை உதயமானாள். அவனது இருண்ட யுகத்திற்கு பேரொளி கொடுத்தாள். எந்த ஆகாயத்திலுள்ள வெற்றிக்கனியையும் சும்மா எட்டிப் பறித்து தன் இரு கரங்களால் ஏந்தக் காரணமே அந்த தேவதையின் பேரன்புதான்.

ஆம் அந்தத் தேவதை தீபனோடு நல்ல அன்போடு, பண்பொடு பழகினாள். அவள் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் தீபனிடம் வந்து கேட்பாள். "நான் இப்படிச் செய்தால் சரியா நான் பாடிய பாடல் உங்களுக்குப் பிடிச்சிருந்திச்சா: இப்படி அந்தத் தேவதை யாவற்றையும் தீபனிடம் கேட்டே திருப்தி கொள்வாள். அது போன்றே தன் வீட்டிலிருக்கின்றவர்களைப் பற்றி "எனக்கு எங்க வீட்டில் அப்பாவுக்கோ, அண்ணாமாருக்கோ பயமில்ல" என்றாள் தீபனிடம் "அப்போ யாருக்குப் பயம்" எனக் கேட்டான் தீபன். "அம்மாவுக்குத்தான்", "ஏன் அவங்க பெரிய கராத்தேக்காரியா?" என விளையாட்டாக தீபன் கேட்க "சும்மா போங்க தீபன்" என செல்லமாக சிணுங்கியவள், மீண்டும் "ஆனா எங்கேயும் கோயிலுக்குப் போறதென்றா ஒன்று உங்களோட போன அனுமதிப்பா .இல்லேன்னா அவவே தான் அழைத்துப் போவா", "ஏன்! நானென்றால் அவ்வளவு பயமா? உங்கட அம்மாவுக்கு" எனக் கிண்டலாக தீபன் கேட்க" எங்கக் கிட்ட எத சீரியசா கதைச்சாலும் கிண்டல் தான் செய்விங்க" என பொய்யாக கோபித்து நகர்ந்தாள். இப்படி இந்த நட்பு மூன்று வருடங்களுக்குமேல் தொடர்ந்து வந்த போது தீபன் ஒருநாள் அவன் நினைத்தே இராத கனவொன்று, அது தீபனுக்கும் அந்தத் தேவதைக்கும் திருமணம் முடிந்தது போல் அன்றிலிருந்து தீபனுக்கு பெரும் யோசனை அந்தத் தேவதையைக் கண்டால் கதைக்கப் பயம், இது காதலுக்கான அறிகுறிதான் என்பதை உணர்ந்தாலும் அவளிடம் எப்படி உணர்த்துவதென்று புரியாமல் உருகியபோது அவளேஅவனிடம் வந்து "என்னடா ரெண்டு வாரமா என்னோட கதைக்கிறா இல்ல, இப்படி கதைக்காம இருந்து என்னக் கொல்லாம என்னென்றாலும் சொல்லித்தொளடா" என்றாள். தீபனும் "அது சரிதான் அணுவணுவாய் துடித்து சாவனா விட கேட்க

வேண்டியது தான்" என்ற முடிவுக்கு வந்தவன் தன் விருப்பத்தை தெரிவித்தான். அதைக் கேட்டதுட். பூவாக நகைத்து விட்டு "உனக்கு எனக்கும் என்ன பொருத்தமிருக்கு, நானெங்க நீ எங்க! என பூநாகமாய் கொத்தினாள் இதைக் கேட்ட தீபனுக்கு கடலுக்குள் மூழ்கி மூச்சுத்திணறுவது போலிருந்தது. காய்ச்சிய கம்பியால் காதுக்குள் குத்துவது போலிருந்தது. மிளகாய் பொடியை கண்ணுக்குள் போட்டு எரிவது போலிருந்தது. "என் தேவதையா இப்படி" என நினைக்கும் போதே மீண்டும் அழுகை வர அழுதான். அழுதவன் தன்னறையிலிருந்த கண்ணாடியில் அன்றே தன் ஊனமான உடலை முதல் முறையாக முழுமையாக பார்த்தவன். "அறிஞர்கள் உடலிலுள்ள குறைகளெல்லாம் ஊனமில்லையென எப்படித்தான் இழுத்தி வாத்திட்டாலும் ஒருவனுக்கு உடல் ஊனப்பட்டால் அதைக் காரணமாக வைத்து உள்ளத்தையும் ஊனமாக்கி, ஊனம் ஊனம் தான் என்பதை இந்த மனித சமூகம் நிருபித்துக் காட்டிப் போடுதே. இனி நமக்கு காதலும் வேண்டாம், கற்பனையும் வேண்டாம்" என்ற முடிவுக்கு வந்த தீபன் உணிரில்லா சிலையாக உலா வருகின்றான் பூஞ்சோலையில்.

**செல்லத்தம்பி சேனாதிபதி**
**பால்சேனை, கதிரவெளி**

ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதை விட
ஓர் அரிய செயலைச் செய்தல் நலம்
-சாய்பாபா-

சுயநலம், பேராசை, கோழைத்தனம் ஆகியவையே நம் சுதந்திரத்தை
இழக்கச் செய்யும் ஜென்ம சத்ருக்கள்.
-ஷேக்ஸ்பியர்-

# கல்வியே அழியாச் செல்வம்



அதாவது இன்றைய நவீன உலகில் எவ்வாறான வாழ்க்கையினை எப்படி வாழலாம் என்பதனையும் இவ்வுலகில் கல்வியே அழியாச் செல்வம் என்ற சொத்தினை எவ்வாறு பெறலாம் என்பதனை முதலில் நாம் சிந்திக்க வேண்டிய முதற்காரியமாகும். கல்வி என்பது கரை காண முடியாத ஒரு சுவிச்சிகரமான எதிர்கால மேம்பாட்டை அடிப்படையாக வளர்த்துக் கொண்டு செல்வதே அழியாச் சொத்தான கல்வியின் மகத்துவமே.

இன்று "மன்னனையும், மாசறக்கற்றோனையும் சீர்தூக்கிடின்" என்ற கூற்றிற்கு அமைய மன்னை விட கற்றோன் சிறப்புடையான் அதாவது மன்னனுக்குத் தன் தேசம் மட்டும் தான் சிறப்பு ஆனால் கற்றோனுக்கு அப்படியல்ல சென்ற இடமெல்லாம் சிறப்பும், புகழும் எனும் வாசகம் கல்வியின் தாற்பரியத்தினை எடுத்துக் கூறுகின்றது. கல்வியானது ஓர் ஏணியின் ஏற்றம் அதனை பெறுவர் இவ்வுலகில் மகான்களாகி விடுகின்றனர். இதே வேளை பழந்தமிழ் இலக்கியங்களில் எல்லாம் கல்வியின் புகழின் தாற்பரியம் வரி வரியாக வடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கல்வியின் தாற்பரியத்தினை அறியாத சில மூடர்கள் இன்று எம் கண் முன்னே அவர்கள் படும் அவலங்களைக் காணக்கூடியவாறு உள்ளது.

ஏனெனின் பிறப்பினிலே மாந்தராகப் பிறப்பெடுத்த நாம் உரிய முறையில் கல்வியினை கற்காவிடின் எமது எதிர்காலத்தின் நிலை என்ன? என்ற கேள்வியினை எழுப்பக் கூடியவாறு உள்ளது. காரணம் எமது கிராமங்களிலே ஏன் அனைவரும் கண் முன் காண்கின்ற விடயமே! அதாவது கல்வியின் மகத்துவத்தினை அறியாமல் சிறுவயதினிலே பள்ளிப்பருவத்தினை மறந்து தங்களுடைய சுய விருப்பத்தின் கீழ் இறங்கி விடுகின்றான். அவர்களுக்கு எவ்வாறு கல்வி எனும் சொத்தினைக் கற்றால் எவ்வாறான நிலைக்கு மாறலாம் என்பது அவர்களுக்கு புரியாத விடயமாக உள்ளது. அவர்களுக்கு ஓர் விளையாட்டுத்தனமாகவே கல்வி காணப்பட்டமையினால் அது அவர்களுக்கு அது கரைகாண முடியாமல் போய்விடுகிறது.

அதாவது இப்படியான கல்வியினை தனக்கே உரிய தனித்துவத்தினைக் கொண்டது. என கல்வியின் இயல்பினைப் பற்றி நாலடியார் கூறுகின்றார். "குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சளின் அழகோ அழகல்ல என நாலடியார் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எம் கண் முன்னே கொண்டு வந்துள்ளார். அதாவது ஒருவனுக்கு கௌரவத்தினையும், மதிப்பினையும் கொடுக்கக் கூடிய கல்வியினை தவிர வேறொன்றும் இணையே இல்லை என அழகாக கூறியுள்ளார். ஒரு சமூகத்தில் ஆடை அணிகலங்கள் அணிந்து செல்வது சிறப்பு என்று சிலர் நினைக்கின்றனர் ஆனால் உண்மையான கல்வியின் சீற்றம் புரிவதில்லை.

இன்று கல்வியின் மூலம் ஒரு விளைவும் இல்லை அதனை விளைவாக்குவது மானிடனாகிய நாம் தான் காரணம் ஒரு விதையினை விதைக்கின்றோம். அது சில வேளை அழகாகவும், செழிப்பாகவும் தளிர் விட்டு முளைக்கின்றது. சில வேளை அது இறந்து போய் விடுகின்றது அதே போலவே ஒரு வாழ்க்கையும் செழிப்பாக வளர்ந்து வரும் சமூகத்தினை வீணாக அழிப்பது மானிடக்காரணி மாத்திரம் தான். ஏன் இன்றைய வாழ்க்கையினை ஒரு சுவிச்சிகரமான வாழ்க்கையாக ஏன் வாழமுடியாது. அனைவராலும் அது முடியக் கூடிய காரியம். அதனை நிமிர்த்துவதும் அதனை வீழ்த்துவதும் இந்த மானிடனாக பிறப்பெடுத்த எம்மால் மாத்திரம் அது முடியும்.

மானிடனாக பிறப்பெடுத்தோம் மானிடனாகவே வெறுமனே இருக்காமல் நாம் அனைவராலும் எதனையும் சாதிக்கும் வல்லமை உள்ளது ஒன்று எம்மால் முடியாதவை ஒன்று இல்லை. அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு கல்வியின் சிறப்பினை எம்முன் கொண்டு வரவேண்டும். அதாவது வெள்ளத்தால் அழியாதது வெந்தணலால் வேகாதது, கொடுக்கக் கொடுக்கக் குறைவில்லாதது, கள்வர்களால் களவாட முடியாதது, பஞ்சபூதங்களினால் அசைக்கமுடியாத கல்வியினை பெறவேண்டி, அவ்வாறு பெற்றோமானால் கல்வியின் சிறப்பினையும், பெருமையினையும் பெற்று ஓர் கல்வி கதாநாயகர்களாக மாறலாம் மாற வேண்டும்.

அதனைத் தொடர்ந்து நாம் அனைவரும் எத்தனை அனர்த்தம், யுத்தம் எனும் அவல நிலையில் நாம் வேறு இடங்களுக்கு நாம் அகதியானோம் கடும் அல்லல் பட்டோம். ஆனால் நாம் செல்லுகையில் பொருள், பண்டம், பணம் என எடுத்தா சென்றோம். ஆனால் எம்மோடு தொடர்ந்து வருவது அழியாச் சொத்தான கல்வி மாத்திரம் தான். எம்மோடு தொடர்ந்து வந்தது. அவ்வாறு அது பலர் மத்தியில் அது சிறப்பான எதிர்காலத்தினை திட்டமிட அமைவனவாக இருந்தது.

உதாரணமாக நாம் பார்த்தோமானால் எமது பிரதேசத்தில் படித்தவர்கள் குறைவாக இருந்தாலும் ஓர் சிலர் கற்றோர் பலர் உள்ளனர். அவர்கள் அவ்வாறான இன்னல் நிலையின் போது அவர்கள் வேறு இடங்களில் சென்று படிப்பிக்கக்கூடியவாறு உள்ளதாக அமைந்தது. ஆனால் கல்விச்சொத்தினை கற்காத சிலர். கிணற்றுத் தவளை போல் இருந்தனர். உண்பதற்கு உணவில்லை, உடுப்பதற்கு உடையில்லை என்ற அவலத்தில் வாழ்ந்தனர். ஆனால் இன்றும் அதனை உணராமல் சில பெற்றோர்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்புவதில்லை. காரணம் தாங்களுக்குள்ளே அவ்வாறான உறுதியும் சிந்தனையும் ஒருவரிடத்தும் காணப்பட்டு வருவதில்லை. மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதும், குற்றங்களை பழி சுமத்துவதும், இளம் வயது திருமணம் என்பது எல்லாப்பிரதேசங்களிலும் காணப்பட்டு வருகின்ற ஒன்றாகவே அமைகின்றது.

இத்துடன் ஒரு நாடு அபிவிருத்தி அடைந்ததா? இல்லையா? என்பதை தீரமானிக்கும் வகையில் எழுத்தறிவு விகிதம் எனும் அலகு முக்கியமானதாக அமைகின்றது. இன்று பல தேசங்கள் கல்விச் செல்வத்தில் ஆர்வம் காட்டி விடுகின்றனர். இன்று அபிவிருத்தி கண்டு மற்றும் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் அமைந்து வருகின்றது. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு நாம் அனைவரும் சுவிச்சிகரமான கல்வியினைப் பெற்றோமானால் நாம் ஐயம் திரிபரக் கற்றதற்கு சமனாகவே உள்ளது எனலாம்.

இத்தகைய தனித்துவமும் சிறப்பும் மிகுந்த கல்வியினை பெற்று சமூகத்திற்கே வழிகாட்டிகளாகவும், வழிகாட்டிச்சென்ற ஆயிரக்கணக்கான மகான்களின் வரலாற்றுக்களை நாம் கற்று வருகின்றோம். ஆனால் அவர்களின் அன்றைய சூழலின் மாற்றம் தான் ஒரு பெருமை மிக்க கல்வி மகான்களாக திகழ்ந்தார்கள் ஏன் அவர்கள் இறந்தாலும் இன்றுவரை இறக்காமல் ஏதோ ஒரு வகையில் அவர்களின் சாதனையின் நிமித்தம் அவர்கள் எம்மோடே வாழ்ந்து வருகின்றனர். காரணமாக பார்த்தோமானால் அழகான கல்வியினை உரிய வகையில் கற்றவர்கள், கற்றதன் படி வாழ்ந்தவர்கள், சாதனைகள் பல செய்தவர்கள், அனைத்திற்கும் முன்னோடியாக அதிக முதலிடமாக அம்சமாக தேவைப்படுவதே கல்விச்செல்வமாகும்.

இதனை உணர்ந்து கல்வி செல்வத்தின் தாற்பரியம் உலகம் முழுவதும் பல அமைப்புக்கள் பிள்ளைகளின் கல்வியில் அதீத அக்கறை காட்டி வருகின்றனர். குறிப்பாக நமது நாட்டினிலே கல்விச்செல்வம் பெற தகுதியானவர்களாக முற்காலத்தில் விதி படைத்தவர்களாகவே இருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற C.W.W. கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்வித் திட்டத்தினை முன் வைத்துள்ளனர். ஏழை, பணக்காரர் என்ற பேதம் இல்லாமல் அனைவரும் இலவசமாக கல்வியினை பெறுகின்றனர். இதனால் இலங்கை நாடு ஒரு புரட்சிகரமான கல்வியின் ஒன்றாக விளங்கி வருகின்றது.

எனவே இவ் கல்விச்சொத்தானது ஆழமானதும் எமக்கு நிரந்தரமான ஒன்றாகும். எனவே மாந்தராக பிறப்பெடுத்த நாம் அழிவுற்றதும், சிறப்புமிக்கதும் போன்ற சிறப்பு மிகு கல்விச்செல்வத்தினை நாம் அனைவரும் பெற்றால் கல்வி மாந்தராக இவ்வுலகில் ஒவ்வொருவரும் திகழ்வார்கள் என்பதில் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

**வடிவேல் ஜமுனா**
**நாகபுரம்பால்சேனை**
**கண்ணா கலைக்குழு.**

**நல்ல வழியில் நன்கு நிர்வகிக்கப் பெற்ற மனம் தான்**
**நமக்கு மாபெரும் உதவி செய்யும்**
-புத்தர்-

**பிரச்சினைகள் தான் மிகப்பெரிய சாதனைகளையும், மிக**
**உறுதியான வெற்றிகளையும் உருவாக்குகின்றன.**
-கென்னடி-

# தமிழ் அன்னையைப் போற்றிடுவோம்

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

சின்னஞ் சிறார்களாம் நாமெல்லோரும்
இனிய தமிழினை என்றென்றும் போற்றிடுவோம்.
பெருமை மிகு எங்கள் தமிழன்னையை
தாழ் பணிந்து வணங்கி தொழுதிடுவோம்.

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

ஏற்ற முற வைக்கும் கலைகள் தனை
வாஞ்சையுடன் நன்கு கற்றிடுவோம்.
பழமையுடன் நல்ல புதுமை சேர
பாரம்பரியத்தை கட்டிக் காப்போம்.

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே.

ஆடலுடன் சிறந்த பாடலுமாம்
ஆனந்தமுடனே இரசித்திடுவோம்.
ஆர்ப்பரிக்கும் சலங்கை யொலியுடனே
அரங்கேறும் கூத்தினை ஆராதிப்போம்.

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

கும்மியுடன் சேரும் கோலாட்டமுமன்
எங்கள் சுருதியுடன் கரம் சேர்த்திடுமே.
மேன்மை மிகுந்த கரகாட்டமுடன்
நாட்டார் இசை கரம் கோர்த்திடுமே

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

இனிய கானமாம் வில்லிசையும்
எம்மை இலையசைத்திட வைத்திடுமே.
ஆலாபனை செய்யும் காவடிச்சிந்தும்
பண்பாட்டின் பெயர் சொல்லிடுமே.

தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

சின்னஞ் சிட்டுகளாய் பறந்திடும் நாம்
பாரினில் எம்மை உயர்த்திடவே
பண்புடன் வாழ வழிகாட்டும் - இந்த
கலைகளை என்றும் மதித்திடுவோம்.
தந்தன தனை தனானே தன தான தந்தன தனானே

குணநேசன் கேஷிகா
பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

# அன்னையே



தரணியில் நான்
தவழ! வழி கொடுத்த
அன்னையே!
தவியாய் தவித்து விடுவாய்
என்னை கொஞ்சம் காணவில்லையெனில்
என்ன தவம் செய்தனோ!

நீ!
என் தாயாக கிடைக்கவென்று ...........
நான் தவத்திற்கு செல்லும் பாதையெல்லாம்
நன்றாக தரை விரிப்பாய்
மழலை மொழி நான் கதைத்தால்,
மல்லிகைப்பூ முகமறைத்து
தனியே! தான் நீ ரசிப்பாய்,

தங்கம் வாங்கித்தர காசி இல்லை என்றா
தளராத அன்பு தந்து உச்சத்தில்
நீ! இருந்தாய்....
நோயுற்று நான் கிடந்தால்
கோயில் எல்லாம் நீ சுமப்பாய்
கொண்ட சுகம் கொஞ்சம் தான்
கோடி இன்பம் கண்டு விடுவாய்,

எட்டி நான் கடக்க
என்னைக் கண்டு உன்னை மறந்தாய்,
உன்னைப் போற்றும் நாளென்று
உலகில் ஒரு நூற்றாண்டு
என்னுயிர் உள்ளவரை
உனக்காக ஆயிரம் நாள்
என் தாயே என் நாளும்
நீ வேண்டும் என்னோடு!

பள்ளி நான் சென்று வர
மீதி வழி வந்து விடுவாய்,
பக்குவமாய் பாடம் சொல்லி
படுத்துறங்கும் வரை பாடல்
பாடி விடுவாய்,
கண் கண்ட தெய்வம் நீயேயம்மா,
கடைசி வரை நீதானே
வேணுமம்மா!

த.பிரசாந்தினி
தரம் – 11A
மட்/ வாகரை மகா வித்தியாலயம்

# தாய்மை



தரம் 10 இல் கல்வி கற்கும் சுனேசினது தாய் சுந்தரி தமது பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும். என்று ஆர்வத்துடன் செயற்பட்டாள். அவளுக்கு இன்னும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். இவள் சுனாமியில் கணவனை இழந்தவள். எந்த வருமானமும் இன்றி கஸ்டப்பட்டாள்.

தன் பிள்ளைகளை கூலி வேலை செய்தாவது படிக்க வைப்பதில் அந்த ஏழைத்தாய் முழுமூச்சாக செயற்பட்டாள். அவளுக்கு ஒரு வேலை கிடைக்காதா? என ஊர் முழுவதும் அழைந்தாள். கடைசியில் அவளுக்கு ஒரு வீட்டில் அவளது துன்பத்தைக் கண்டு ஓர் குடும்பம் உதவி செய்ய முன் வந்தது. உனக்கு எவ்வாறான வேலை தெரியும் என்று கேட்டாள். அந்த வீட்டுக்காரி அதற்கு சுந்தரி எப்படியான வேலை தந்தாலும் செய்கிறேன். என்று சொன்னாள். இதனைக் கேட்ட வீட்டுக்காரி அவளுக்கு சமையல் வேலையை அவளுக்கு கொடுத்தாள்.

சுந்தரியும் வேலையில் சேர்ந்து கொண்டாள். அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அவளது பிள்ளைகளும் சந்தோசப்பட்டார்கள். சுந்தரியின் பிள்ளைகள் சுனேஸ், பிரசாந், துசா ஆகியோரும் நன்றாகப் படித்து வந்தனர். ஆனால் சமையல் வேலையில் அவளுக்கு கிடைத்த பணம் குடும்ப வருமானத்துக்கு போதாததாக இருந்தது.

ஏதோ கிடைத்த வருமானத்தைக் கொண்டு குடும்பத்தைச் சமாளித்துக் கொண்டு வந்தாள். வருமானத்திற்கு ஏற்றவாறு சுந்தரி வாழ்க்கையை நடத்தி வந்தாள். கிடைக்கும் சம்பளத்தில் பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பாள். மிஞ்சியதைதான் உண்டு மகிழ்வாள் . சில வேளை அவளுக்கு உணவு மிஞ்சியது இல்லை. ஒரு நாள் அப்படித்தான் சுந்தரி நாள் முழுவதும் சாப்பிடவில்லை மறுநாள் காலை சுந்தரியால் எழும்பக்கூட முடியவில்லை. சிரமப்பட்டு எழுந்தாள். தாயின் நிலமையைப் பார்த்து சுனேஸ் பாடசாலை செல்ல மறுத்தான்.

"சுனேஸ் நீ பள்ளிக்கூடம் செல்லப்பா, நீ படித்து முடித்தவுடன் உனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கும். அதற்குப் பிறகு நான் வேலைக்குச் செல்ல மாட்டேன். நீ உனக்கு வேலை கிடைத்ததும் என்னை வைத்து காப்பாற்றுவாய் தானே" என்று கேட்டாள். அதற்கு சுனேஸ் "ஆம் அம்மா" என்று கூறி விட்டு ஒருவாறாக மன அமைதியுடன் பாடசாலை சென்றான்.

அவளும் இயலாமல் வேலைக்குச் சென்றாள். ஆனால் அவளால் வேலையைச் சரியாகச் செய்ய முடியவில்லை. வீட்டுக்காரி "என்ன சுந்தரி மிகவும் கஸ்டப்படுகிறாய்" என்று கேட்டாள். அதற்கு சுந்தரி "ஒன்றுமில்லையம்மா" என்று சொன்னாள். சுந்தரி ஏன் பொய் சொல்கிறாய? அம்மா நான் நான் நேற்று முழுவதும் சாப்பிடவில்லை. என்று சொன்னாள். அந்த வீட்டுக்காரி சுந்தரிக்கு உணவு கொடுத்தாள்.

ஆனால் சுந்தரி என் பிள்ளைகள் சாப்பிடவில்லை. நான் எப்படி சாப்பிட முடியும் என்று கேட்டாள். சுந்தரி சாப்பிடாமல் தன் வேலையைக் கவனித்தாள். வீட்டுக்காரி சுந்தரியிடம் வந்து உன் கஸ்டம் எனக்குத் தெரியும் நான் உனக்கு ஒரு நல்ல யோசனை சொல்லுகிறேன். அதன்படி நீ நடந்து கொண்டால் உன் கஸ்டத்துக்கு ஒரு முடிவு வரும் என்று சொன்னாள். சுந்தரியும் சொல்லுங்கள் அம்மா என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

சற்று நேரம் யோசித்த சுந்தரி சரி என்று சொன்னாள். வீட்டுக்காரி இரண்டு பிள்ளைகளையும் கொன்மேன்டில் கொண்டு விட்டார்கள். இரண்டு பிள்ளைகளும் அங்கு நன்றாகப் படித்தார்கள். தாயிடம் சுனேஸ் நன்றாகப் படித்தான். பிள்ளைகள் அனைத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்தார்கள். சுனேஸ் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியானான். மற்றைய இரண்டு பிள்ளைகளும் படித்து முடித்தார்கள் . கொன்மேன்டின் செலவில் இருவரும் படிப்பை முடித்து ஒரு வேலையில் இருந்தார்கள். பிரசாந் கலெக்டராகவும் துசா அதிபராகவும் கொன்மேன்டிலிருந்து வெளியேறி தன தாயிடம் வந்து சேர்ந்தார்கள்.

சுந்தரி சுனேஸை ஒரு வைத்தியனாக்கினாள். பின்பு மூன்று பிள்ளைகளையும் பார்த்து ஊர் மக்கள் இவர்கள் மூவரையும் பாராட்டினார்கள். சுந்தரியின் விருப்பப்படி அவளது பிள்ளைகள் முவரும் பதவியில் இருப்பதைக் கண்டு சுந்தரி முதல் பட்ட துன்பங்களையும் இப்போது உள்ள நிலமையையும் உணர்ந்து ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். சுந்தரியின் மூன்று பிள்ளைகளும் அவளைக் கடைசி வரை கண்கலங்காது வைத்து காப்பாற்றி வந்தனர். பிள்ளைகளும் சுந்தரியும் சந்தோசமாக வாழ்ந்தனர்.

சென்னன் டென்மறோஜினி
மட்/ பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

மனதில் நினைப்பதையே சொல்
இல்லையானால் மௌனமாக இரு
-புத்தர்-

உன்னுடைய அனுமதியின்றி சிந்தனைகள்
உணர்ச்சிகளாகவும், செயல்களாகவும் மாற நீ விடக்கூடாது.
-புதுவை அன்னை-

# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்



உலக சிறுவர்தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது. இத்தினம் உருவானது எப்படி என்பதை நாம் அறிந்திருப்பது அவசியமாகும். வருடாந்தம் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி கொண்டாடப்படும் சிறுவர் தினமும் 2ஆம் உலகயுத்தமும் எம்மால் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு ஆகும்.

1914ஆம் ஆண்டு உருவான உலகயுத்தம் 1918 ஆண்டு முடிந்தது. இந்த யுத்தத்தினால் உலகில் பாரிய அழிவுகளும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டது. இதன் மூலம் மிகவும் கூடுதலான பாதிப்புக்கு உள்ளானவர்கள் சிறுவர்களே. இதன் காரணமாக 1919ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. இதன் பின் 1923ஆம் ஆண்டு "எக்லன்டயின் ஜெப்" என்பவர் சிறுவர்களுக்கு உண்டான அழிவுகள் பற்றி ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இதன் பிரதிபலிப்பாக சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் 5 சட்டங்கள் உருவாகின. இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இந்த சட்டமூலம் முழு உலக நாடுகளுக்கும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இதன் நோக்கம் சிறுவர்களுக்கு பாதுகாப்பும் விஷேட ஆதரவும் பெற்றுக்கொடுப்பதாகும்.

மீண்டும் ஒரு உலக மகாயுத்தம் 1939ஆம் ஆண்டு உருவானது. இது 2ஆம் உலகமகாயுத்தமாகும். இதன்மூலம் மிகக்கூடுதலாகப் பாதிப்புக்கு உள்ளானவர்களும் சின்னஞ்சிறார்களே. இதன் பின்னர் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவானது. 1959ஆம் ஆண்டு இவ்வமைப்பின் மூலம் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் 10 சட்டங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டன. இதனை ஐக்கிய நாடுகள் சபை 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதியே சர்வதேச மட்டத்தில் அமுலுக்கு கொண்டு வந்ததை விஷேடமாக குறிப்பிட வேண்டும். பின் 1991 ஜூலை 21ஆம் திகதி இலங்கையும் இந்தச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கி கைச்சாத்திட்டது. இதுதான் உலக சிறுவர் தினம் உருவானது.

இவ்வாறு சிறுவர் தினம் வருடாவருடம் கொண்டாடப்பட்டாலும் எமது நாட்டில் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் நிலை முற்றாக மாறவில்லை. காரணம் சமூக அமைப்பு, வறுமை என்பனவாகும். எனவே நாம் சிறுவர் தினத்தினை கொண்டாடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாது இவ்வாறான சிறுவர்களின் பெற்றோர்களுக்கு இது பற்றி அறிவுறுத்தி ஆலோசனை வழங்கி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி அச்சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்.

**மு.நவரெட்ணராசா**
**அதிபர்**
**மட்/ வம்பிவெட்டவான் வித்தியாலயம்**
**கதிரவெளி.**



# அம்மா

அன்புக்கு முதல் வார்த்தை அம்மா!
ஆலயத்தின் முதல் தெய்வம் அம்மா!
இல்லறக் தலைவி அவள் அம்மா!
ஈகைகள் பல செய்வார் அம்மா!

உண்மையின் உறைவிடம் அம்மா!
ஊரார் முன் என்னைப் புகழ்வார் அம்மா!
எட்டுத்திக்கும் கோயில்களில் சென்று!
ஏற்றமுடன் வணங்கிடுவாள் அம்மா!

பண்பாக எமை வளர்ப்பாள் அம்மா!
பாசத்தின் நம்மை ஆள்வாள் அம்மா!
பாதை வழி நீ சறுக்கி நின்றால்!
பார்வையாய் வந்திடுவாள் அம்மா!

பேதையாகப் பலர் சுற்றி நின்றால்!
பேரன்புடன் தோற்றி நிற்பால் அம்மா!
போதைக்கு நீ அடிமை ஆனால்!
பாதை நீ தவறாது காப்பாள்!

வாதைகள் பல சூழ்ந்த போது!
வார்த்தை இல்லை அன்னை அவள் சேவைக்கு!
தாதியாய் பணி புரிவாள் அம்மா!
தந்தையாய் பாதுகாப்பாள் அம்மா!

கோதையாள் என் அமுதம் அம்மா!
கோபமின்றி முகம் பார்ப்பாள் அம்மா!
மாதங்கள் பத்தும் கருவறையில் - எனை
மனமாய் சுமந்தவள் அம்மா!

துன்பம் தனை துடைத்திடுவாள் அம்மா!
தூபமாய் தான் ஒளிர்வாய் அம்மா!
மோதகத்துடன் சுவைக்கதைகள் சொல்வாள்!
மேகை தன் பிள்ளை எனச்சொல்வாள்!


குற்றங்கள் நாம் செய்யும் போது!
கடிந்துரைத்து நமை வளரப்பால் அம்மா!
சீதையின் உபதேசம் சொல்வாள் - என்
காதலி அவள் தானே அம்மா!

கடலில் நான் உறங்கும் போது - தலை
கோதியே சேலையால் அணைப்பாள்
சாதலே நமக்கில்லை நண்பா - அன்புச்
சீனதயையால் அன்னை உண்டு நாளும்

வாழ்க நீ பல காலம் என்று
வாழ்த்துவாள் தாய் ஆசி போதும்
நாதமாய் பல பாடல் சொல்வாள்
நாயகியாம் தாய் அன்பு போதும்

வேதனைகள் பல கண்ட போதும்
வேதமுகம் தாய் அன்பு சுகமே
அன்னையே நீ இங்கு வாழ்க
அகிலமும் உனைப் போற்றும் நாளும்
நாமும் மனாது எம் அகம் குளிருது அம்மா!

**யோ. கல்சனா**
**தரம் :- 11**
**மட்/ வாகரை**
**மகா வித்தியாலயம்.**



# வறுமை

சுனாமியால் தனது கணவனை இழந்த கண்ணம்மா. உண்பதற்கு உணவின்றியும், தனது பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு பெரிதும் கஷ்டப்பட்டாள். எப்படியாவது ஒரு கூலி வேலை தேடி தனது பிள்ளைகளை படிக்க வைக்க முயற்சி செய்தாள். அவளது முயற்சி பயனளித்தது. ஓர் வீட்டில் அவளது பாவத்திற்கு இரங்கி ஒரு பெண்மணி சமையல் வேலை கொடுத்தாள்.

அன்று முதல் கண்ணம்மா தன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வந்தாள் கண்ணம்மாவின் பிள்ளைகளான சுனேஸ், சுஜித், கீதா ஆகிய மூவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள் தங்கள் தந்தை இறந்த பிறகு தங்கள் படிப்பை இடையில் நிறுத்தி விட்டார்கள். தற்போது சுனேஸ் தரம் - 10லும், சுஜித் தரம் - 9லும் கீதா தரம் - 05லும் கல்வி கற்கின்றார்கள். கண்ணம்மா சமையல் வேலையில் சந்தோஷமாகச் செயற்பட்டாள். தன் பிள்ளைகளை படிக்க வைக்க ஒரு வேலை கிடைத்து விட்டது என்று கண்ணம்மாவுக்கு கொஞ்சம் நிம்மதியாகவிருந்தது. கண்ணம்மாவின் நிம்மதி நிரந்தரமில்லாமல் போனது.

சமையல் வேலையில் அவளுக்கு கிடைத்த வருமானம் குடும்ப செலவுக்கு போதுமானதாக இல்லாவிடினும் குடும்பத்தை சமாளித்து வந்தாள். கிடைக்கும் சம்பளத்தில் பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பார். மிஞ்சியதை தான் உண்டு மகிழ்வாள். சில வேளைகளில் கண்ணம்மாவுக்கு உணவு மிஞ்சியதும் இல்லை. பிள்ளைகளின் சந்தோஷமே சந்தோஷம் என்று வாழ்ந்து வந்தாள். இத்தனை கஷ்டத்தையும் கண்டு கண்ணன் தன் படிப்பை நிறுத்தி விட்டு வேலை தேடுவதாக சொன்னான். கண்ணம்மா “இல்லை கண்ணா நீ படிப்பை இடையில் நிறுத்தினால் நல்லா இருக்காது. இப்ப நீ நல்லா படிச்சி பிறகு அம்மாவை வைத்து காப்பாத்துவாய் தானே இப்ப நீ நல்லாப்படியப்பா! என்று சொன்னாள்.

அதற்கு கண்ணன் சரியம்மா என்று சொன்னான். கண்ணம்மா பிள்ளைகளை பாடசாலை அனுப்பி விட்டு வேலைக்குச் செல்வாள். அன்றும் வேலைக்குச் சென்றாள். அன்று கண்ணம்மாவினால் வேலையை சரியாகச்செய்ய முடியவில்லை. இதைக் கவனித்த அந்த பெண்மணி அவளுக்கு சாப்பாடு கொடுத்தாள். வேண்டாம் அம்மா எனது பிள்ளைகள் சாப்பிடவில்லை. எனக்கும் வேண்டாம் கண்ணம்மாவின் நிலமையை உணர்ந்து கொண்ட அந்தப்பெண்மணி உன் நிலமை எனக்குத் தெரியும். நீ சம்மதித்தால் எனக்குத்தெரிந்த கொன்மேன்டின் உனது இரண்டு பிள்ளைகளை விடுவோம். அவர்கள் பிள்ளைகளின் படிப்பு செலவையெல்லாம் பார்த்துக்கொள்வார்கள் என்றாள். இதனைக் கேட்ட கண்ணம்மா சற்றுநேரம் யோசித்துவிட்டு தான் படும் கஷ்டம் என் பிள்ளைகள் படவேண்டாம்.

எனது பிள்ளைகளை கொன்மேன்டில் விடுவோம் அம்மா என்றாள். அதன்படி கீதா, சுஜித் ஆகிய இரண்டு பிள்ளைகளையும் பெண்மணி கொன்மேன்டில் கொண்டு போய் விட்டாள். பிள்ளைகள் நன்றாகப் படித்தார்கள். விடுமுறை நாட்களில் தனது தாயை வந்து பார்த்து சொன்னார்கள். கண்ணன் தன் படிப்பில் கவனம் செலுத்தினான். அதனால் கா.பொ.தரப் பரீட்சையில் சித்தி பெற்றான்.

கண்ணம்மாவின் விருப்பம் படி சுனேஸ் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்பது. சுனேஸ் ழுஃடு சித்தி செய்து யுஃடு பரீட்சை எழுதினான். அதிலும் சித்தியடைந்தான். கொன்மேன்டில் இருந்த இரண்டு பிள்ளைகளும் ஒன்றாகப்படித்து வந்தார்கள். சுனேஸ் எல்லா படிப்பையும் முடித்துவிட்டு தன் தாயின் விருப்பம்படி சில ஆண்டுகள் சென்றன. சுனேஸ் ஒரு ஆசிரியராக வந்தான். கொன்மேன்டில் படிக்கவைத்த சுஜித் ஒரு வைத்தியராக வந்தான்.

கீதா பல்கலைக்கழகம் படிக்கிறாள். கண்ணம்மா பட்ட கஷ்டங்களுக்கு எல்லாம் ஒரு விடிவு வந்துவிட்டது. ஊரவர் கண்ணம்மாவின் மூன்று பிள்ளைகளையும் பார்த்து பாராட்டினார்கள். அவளது பிள்ளைகள் மூவரும் படிப்பில் உயர்ந்ததைக்கண்டும் தான் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு விழா வந்து விட்டது. என்று கண்ணம்மா ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். கண்ணம்மாவை பிள்ளைகள் கடைசி வரை வைத்து பார்த்தார்கள். கண்ணம்மாவும் தன் பிள்ளைகளும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

**பொ.நிலுஜா**
**கனிஸ்ட பிரிவு**
**மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்**

**பணத்தின் அருமை உங்களுக்குத் தெரிய வேண்டுமானால் அதை கடனாகக் கேட்டுப்பாருங்கள்.**

-ஃப்சாங்க்ளின்-

**நன்றி மறவாமை என்பது நற்குணங்களில் சிறந்தது மட்டுமல்ல; ஏனைய குணங்களின் தந்தையுமாகும்.**

-ஷேக்ஸ்பியர்-

# வெற்றி தோல்வியினை ஒரே நேரத்தில் ஏற்போம்.

எனது வாழ்கையில் தோல்விகளெல்லாம் வெற்றியின் சிகரங்கள் ஆகும். ஒரு மனிதன் தோல்வியினையும் வெற்றியினையும் ஒரே விதத்தில் மதித்தல் அவசியமாகும். வாழ்கைக்கு மிக மிக அவசியமாகும். எனது வாழ்கையில தோல்வி எல்லாம் வெற்றியின் முதற்படி ஆகும். எமது வாழ்கையின் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதிக்கும் பழக்கம் அவசியம். உதாரணமாக ஒரு விளையாட்டு வீரனாக இருப்பானாயின் அவன் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் மிக மிக அவசியம். ஒரு மனிதன் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவனுடைய வாழ்கையை மேன்படுத்தும் .

ஒவ்வொரு மனிதனுக்கும் தோல்வி எல்லாம் வெற்றியின் சிகரங்கள் ஆகும். உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தால் எமது வாழ்கையினை மேன்படுத்தும் ஒரு அழகிய பண்பு ஆகும்.ஒவ்வொரு மனிதனும் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தால் எமது எதிர் காலம் நல்லதாக அமையும். சிறு வயது முதலே இந்த நல்ல பண்பினை கடைப்பிடிக்போம் ஆனால் சிறந்த ஆளுமை மிக்கவர்களாக மாறுவோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனவே அனைவரும் சிறு வயதில் பண்பு மிக்கவர்களாக மாற வேண்டும் எனவே வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதிக்கும் பண்பு மிக்கவர்கள்ாக மாற வேண்டும். எனவே வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதிக்கும் பண்பு வருதல் வாழ்கைக்கு நல்ல எதிர்காலம் காணப்படுகின்றது.

இறக்கங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அதனால் வெற்றி தோல்வியை சமமாக மதித்தால் வாழ்வு வளம் பெறும். எனவே அனைவரும் இந்தப் பண்பை கடை பிடித்தல் மிக மிக அவசியம்.வெற்றி தோல்வியினை சமமாக ஏற்கும் போது புரிந்துணர்வு விட்டுக்கொடுப்பு போன்ற உயர்ந்த விழுமியங்கள் எம்மிடம் வந்து சேரும்.ஆகவே எம்மிடம் பல பல விழுமியங்கள் வளரும் அனைவரும் மதிப்பார்கள். எனவே நாம் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் ஏற்றல் எமது வாழ்கைக்கு மிக மிக அவசியம். இவ்வகையான செயலை செய்தால் பாசம், அன்பு, அனைவரும் எம்மை மதிப்பார்கள். எனவே நாம் நல்ல பண்பு மிகக்க வர்களாக வாழ வேண்டும். தினம் தோறும் நாம் இவ்வகையான செயலை செய்வோம் ஆயின் எமக்கு மக்களிடம் நல்ல மதிப்புக்க கிடைக்கும். இவற்றை நாம் எமது பாடசாலையிலும் கடைப்பிடித்தல் அவசியம். இவற்றை பல வகையான

போட்டிகளிலும் ,கலைநிகழ்சிகளிலும் அவற்றை நாம் கடைப்பிடிப்பதால் எம்மிடம் பல விழுமியங்கள் தோன்றுகின்றது. எனவே அனைவரும் இந்த பண்பை வளர்தல் எமக்கு அவசியம்.

எனவே அனைவரும் விழுமியங்கள் கடைப்பிடிப்பவர்களாக உருவாக வேண்டுமானால் எமக்கு வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதிப்பவர்களாக மாறுதல் வேண்டும். எனவே மாணவர்களாகிய நாம் என்றும் அவற்றை கடைப்பிடித்தல் வேண்டும். எனவே அவற்றை கடைப்பிடித்தால் எமக்கு அதிக நண்பர்கள் நண்பர்களாக வருவார்கள் எனவே நாம் பண்பு மிக்க மாணவர்களாக வேண்டும்.அவை எமது வாழ்க்கைக்கு மிக அவசியம். அவற்றை நாங்கள் அதிகமாக பாடசாலையில் வளர்த்தல் அவசியம். எனவே பாடசாலையில் தான் பல பல போட்டிகள் ஏற்படும். எனவே நாங்கள் அனைவரும் வெற்றி வெற்றி தோல்வியை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம்.எனவே இவற்றை கடைப்பிடிக்காமல் விட்டால் பல பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே இவற்றால் பல பல பிரச்சனைகள் ஏற்படும் எனவே வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் நோக்கினால் எந்தவித சலனங்கனும் ஏற்படாது எனவே நாங்கள் வெற்றிதோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம் இதனால் எமக்கு அனைவருக்கும் நல்ல பண்பு ஏற்படும். வெற்றி தோல்வி நிலைத்திருப்பதில்லை கால்த்துக்கு காலம் மாறிமாறி இருக்கும். எனவே வெற்றியடைந்தவர் வெற்றியைத் தக்க வைத்தல் வேண்டும். தோல்வியுற்றவர் முயற்சி செய்தல் அவசியம் எனவே தோல்வியுற்றவர் என்றாவது வெற்றி பெறுவார். அதனை நாங்கள் கருத்தில் கொண்டு முயற்சி செய்தல் வேண்டும். அவற்றுக்கும் மேலாக வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் அவசியம் எனவே நாம் இந்த விழுமியத்தை கடைப்பிடித்தல் அவசியம்.நாங்கள் அனைவரும் வீட்டில் இருந்தே இந்த எண்ணக்கருவை முதல் செயற்பட வேண்டும். எனவே எனவே அங்கு சகோதரத்திற்குள் போட்டிகள் ஏற்படும். ஆகவே அவற்றை தடுப்பதற்கு பல பல முறைகள் உண்டு. எனவே அவ் நேரத்தில் சிறு சிறு போட்டிகள் ஏற்படும். அந்த நேரத்தில் வெற்றி தோல்வியினை ஒரே மதித்தல் வேண்டும்.அப்போது சகோதரங்களிடம் அன்பு, பாசம், மகிழ்ச்சி என்பன உருவாகும். எனவே ஒவ்வொரு மாணவனும் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம்.

இவற்றை விட்டுக்கொடுப்பதால் பல பல பண்புகள் எம்மிடம் உருவாகின்றது. எனவே இவ் வகையான பண்புகள் உருவாகும் ஆயின் எமக்கு நல்லறிவு உருவாகும்.அனைவரும் நல்லவர்களாக இருக்க வேண்டும் ஆயின் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் காத்துக் கொண்டிருக்கிறது ஆயின் எமக்கு நல்லறிவு மற்றும் நல்ல எதிர்காலம் உருவாகும் . நாம் அனைவரும் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். முதன்மையாக உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் அவசியம். ஆகவே இவை அனைத்துக்கும் மேலாக வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் ஏற்றல் அவசியம்.

எனவே இந்தபண்பு சிறு வயதில் இருந்து உருவாகுதல் வேண்டும். எனவே அதற்கு ஒரு பழமொழி இருக்கின்றது "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழியை உதாரணமாகக் கொண்டு அனைவரும் சிறுவயதில் இந்தப் பண்பை பெறுவோமாயின் எம்மை பலர் மதிப்பார்கள். எனவே மாணவர்களாகிய நாங்கள் இந்தப்பண்பை கடைப்பிடித்தல் மிக மிக நல்லது. ஆகவே இந்தப்பண்பு மாணவர்களுக்கு மிக மிக முக்கியம். பாடசாலையில் தான் மனிதனது அறிவு பூரணமடைகிறது. எனவே மாணவர்களாகிய நாங்கள் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில்

மதித்தல் எமக்கு முக்கியம். எமது வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு இந்த பண்பு முக்'கியம். இதனால் பலபல சலனங்களும் ஏற்படுகின்றது. நாங்கள் அனைவரும் சிறு பராயத்தில் இந்தப் பண்பை பார்த்தல் அவசியம்.

வெற்றி தோல்விக்கு சம அந்தஸ்து கொடுக்கும்போது ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லாமல் போய்விடும். எனவே வெற்றி தோல்விக்கு சம அந்தஸ்து கொடுத்தல் அவசியம் ஆகவே வெற்றி தோல்வியை சமமாக மதித்தல் இனைவரும் ஆண் பெண் என்ற பாகுபாடு இன்றி வெற்றி தோல்விக்கு அந்தஸ்து கொடுக்கும் போது ஆண் பெண் என்ற பாகுபாடு இருக்கக்கூடாது. இருக்குமாயின் எமது வாழ்வு சன்றாக இருக்காது. எனவே மாணவர்களாகிய நாங்கள் தான் வெற்றி தோல்வியை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம். எனவே வெற்றி தோல்விக்கு ஜாதி பேதங்கள் இல்லை. பெரியோர்கள் என்றாலும் சரி சிறியவர் என்றாலும் சரி வெற்றி தோல்விக்கு சம அந்தஸ்த்து கொடுத்தல் அவசியம் எனவே ஆண் பெண் என்ற வேறுபாடு ஏற்படக்கூடாது.

இறக்கங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அதனால் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் வாழ்வு வளம் பெறும் எனவே அனைவரும் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் அவசியம். அனைவரும் இந்தப் பண்பை கடைப்பித்தல் எமது வாழ்க்கை வளம் பெறும். இதனதல் நல்ல எதிர்காலம் கிடைக்கும் எம்மை மதிப்பார்கள் அனைவரும் நல்லவர்களாக மாறவது அவசியம். இறக்கங்கள் இல்லாமல் வாழ்க்கை வா;ழ்க்கையில்லை அதனால் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் வாழ்வு வளம் பெறும். ஆகவே அனைவரும் இந்த நற்பண்பை நாள் தோறும் செயல்படுத்துவதனால் எமது வாழ்வு நல்லதாக அமையும். எனவே அனைத்து மாணவர்களும் இந்த நற்பழக்கத்தை கடைப்பிடித்தல் அவசியம். அனைவரும் இந்த பழக்கத்தை கடைப்பிடிப்போமாக ஆயின் அனைவருக்கும் நல்ல பண்பு உருவாகும். விட்டுக்கொடுத்தல் பண்பு வளரும் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் கிடைக்கும். அனைவரும் எம்மை புகழ்ந்து பேசுவார்கள் அதிக நண்பர்கள் எம்முடன் இணைவார்கள். ஆகவே அனைவரும் நல்லவர்களாக வாழ்வதற்கு வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் ஏற்றல் அவசியம். மாணவர்களுக்கு மட்டும் முக்கியமல்ல உலகில் உள்ள அனைத்து மக்களும் இந்த பண்பை கடைப்பிடித்தல் அவசியம். இதனைக் கடைப்பிடிப்பதற்கு புரிந்துணர்வு போன்ற நல்ல பண்புகள் எம்மிடம் தோன்றும் எனவே இந்த வகையான பண்பை செய்வதற்கு நாங்கள் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம்.

எனவே வெற்றி பெறுவதனால் எமது மனம் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் தோற்றவருக்கு மனவருத்தமாக இருக்கும். எகவே தோற்றவர் முயற்சி செய்தால் அவரும் வெற்றி பெறலாம். ஆகவே இறக்கம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அதனால் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் எமது வாழ்க்கைக்கு மிகமிக அவசியம் என்னைப்பொறுத்தவகையில் உலகத்தில் உள்ள அனைவரும் நல்லவர்களாக வாழ இந்த வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் எமக்கு மிகமிக அவசியம். இதுவே எனது கருத்தாகும். ஆகவே மனிதனாகிய ஒவ்வொருவரும் இந்த நல்ல பண்பை மதித்தல் எமக்கு அவசியம் அனைவரும் இதனை மதித்தல் எமக்கு அவசியம் அனைவரும் இதனை மதித்தல் எமக்கு மிகமிக அவசியம் எனவே மாணவர்களுக்கு இடையே போட்டிகள் ஏற்படுகின்றன. பொறாமை, போட்டி போன்ற தீய எண்ணங்கள் எம்மை விட்டு விலகுவதற்கு இந்த சமத்துவ மனப்பாங்கு பிரதான காரணமாகின்றது. போட்டி போன்ற செயல்களால் எம்மை விட்டு விலகுதல்

எமது வாழ்க்கை நல்லதாக இருக்கும். எனவே அனைவரும் சிறுவயதில் இருந்தே இந்த நல்ல மனப்பாங்கை அனைவரும் கடைப்பிடித்தால் பெரியவர்கள் ஆனால் சிறந்த ஆளுமை மிக்கவராக வருவதில் எந்தவித ஐயமும் இல்லை. ஆகவே அனைவரும் சிறு வயதிலே இந்த பண்பை கடைப்பிடித்தல் அவசியம். இதனால் அனைவருக்கும் நல்ல எதிர்காலம், நல்ல மனம் போன்ற செயல் எமக்கு வரும்காலம் நல்லதாக இருக்கும் ஆகவே அனைவரும் இந்த நல்ல பண்பை கடைப்பிடித்தல் அவசியம் அவசியம். ஆகவே மாணவர்களாகிய நாங்கள் தான் இந்த நல்ல விழுமியமான வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம் ஏன் என்றால் சபையில் தான் பல வகையான போட்டிகள் ஏற்படுகின்றன. ஆகவே அவ்வகையான நேரத்தில் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் அவசியம்.

எனவே அனைவரும் இந்த நல்ல பண்பை அனைவரும் கடைப்பிடித்தல் எமக்கு எமது எதிர்காலம் நல்லதாக இருக்கும். நல்ல மனப்பாங்கு போன்ற நல்ல பண்பு எம்மிடம் தோன்றும் எனவே இவற்றை பெறுவதற்கு நாம் வெற்றி தோல்வியினை ஒரே விதத்தில் மதித்தல் அவசியம் இதனால் அனைவரும் இந்த பண்பை கடைப்பிடித்தல் எமக்கு எந்த வித சலனங்களும் ஏற்படாது. முக்கியமாக இந்த பண்பை சிறுவயதில் இருந்தே இவற்றை எந்த நாளும் செய்தல் வேண்டும். அவற்றினுள் வெற்றி தோல்விக்கு சம அந்தஸ்து கொடுக்கும் போது ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் போய்விடும். இறக்கம் இல்லாமல் வாழ்வு இல்லை அதனால் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் வாழ்வு வளம் பெறும் ஆகவே உலகில் உள்ள அனைவரும் வெற்றி தோல்வியினை சமமாக மதித்தல் அவசியம்.

மதியழகன் சுலக்ஷன்
பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்

எளிமையும் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்து கொண்டால்
அவர்றை யாராலும் வெல்ல முடியாது

- காந்திஜி -

இறைவன் உங்கள் உள்ளங்களையும்
நற்செயல்களையும் தான் பார்க்கின்றார்.

- நபிகள் நாயகம் -



# சிரிப்பும் அதன் உளவியல் உண்மையும்

**வா**ழ்க்கை என்பது உற்சாகம், நகைச்சுவை, சிரிப்பு, என்பன கலந்தவையாகும். இதில் சிரிப்பு என்பது வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய அம்சமாக கருதப்படுகின்றது. "வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்" என்பது பொன் மொழி. இது உளவியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மருத்துவக் குறிப்புமாகும். ஆனால் சிலர் சிரித்தாலே போதும் பக்கத்தில் இருப்பவர்களையே காலி பண்ணி விடுவார்கள். சிலர் சிரிப்பு அவர்களுடைய முகவழகையும் சிறு புன்னகையும் தோற்றுவிக்கும் தன்மையுடையதாய் இருக்கும். பொதுவாகவே சிரிப்பு தொற்று நோய் மாதிரியானது ஒருவர் சிரிக்கும் போதே பக்கத்தில் இருப்பவர்களையும் சிரிக்க வைத்துவிடும். அதிலும் நகைச்சுவை கலந்த சிரிப்பு மிகவும் இனிமையான உற்சாகத்தை ஏற்படுத்துபவையாக இருக்கும்.

ஒருவர் சிரிக்கிற தன்மையைப் பொறுத்து சிரிப்பை இரண்டு விதமாக நோக்கலாம்.

மனசுக்குள் சிரித்தல் - இது தன் மனதிற்குள் சிரித்தல் என்பதாகும். இதன் மூலம் சிரிப்பவர் மட்டும் சந்தோசப்படும் வாய்ப்புண்டு.

வாய் விட்டுச் சிரித்ஒதல் - இது தான் சிரிப்பது மட்டுமன்றி தனக்கு எதிரில் உள்ளவர்களையும் சிரிக்கவும் வைக்கின்றது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் மனசுக்குள் சிரித்தல் என்பதை விட வாய்விட்டுச் சிரிப்பதன் மூலம் தான் அதிக உடல் உற்சாகம் ஏற்பட வாய்ப்புண்டு என்பர் சிரிப்பதன் மூலம் மனித உடலின் பல தசைகள் செயற்படுகின்றன. இதனால் சுவாசச் சுற்றோட்டம் விரைவாக ஏற்படுகின்றது. இதன் காரணமாக ஒட்சிசன் ($O_2$) கூடுதலாக உள் இழுக்கப்பட்டு குருதிச்சுற்றோட்டமும் முன்னைய நிலையை விட அதிகமாக இயங்குகின்றது. இதனால் உடலில் உற்சாகம் அதிகமாகவே ஏற்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்பது மருத்துவர்களின் கருத்துமாகும்.

ஒருவர் 3 (மூன்று) நிமிடங்கள் சிரித்தால் 5 நிமிடங்கள் வேலை செய்வதற்கு சமமான சக்தியைப் பெறுகின்றனர் என்பது மருத்துவ ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட தரவாகும் வாய்விட்டுச் சிரிக்கும் வேளையில் அதனை நகைச்சுவை உணர்வினோடு சிரித்தால் மிகவும் இனிமையான மன உணர்வை ஏற்படுத்தும். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் பாசாங்கோடு (Action) நடிப்புக்காக சிரிப்பவர்களும் உண்டு. இவ்வாறு இருப்பதற்குக் காரணம் அவர்களின் எண்ணத்தின் ஆளுகையே காரணம் எனலாம். சிலரைப் பார்த்தவுடனே சிரிப்பு வருகின்றது இதற்கு நாம் அவர்களைப் பார்க்கும் விதத்தில்தான் அமையும் இச்செயற்பாடுகள் ஒவ்வொருவருடைய மனதில் ஏற்படும் எண்ணத்தைப் பொறுத்ததாகவே அமைகின்றது. இது மட்டுமன்றி ஒருவருடைய நடத்தையும் சில வேளைகளில் சிரிப்பை ஏற்படுத்தும் விடயமாக உள்ளது.

எவ்விடயத்தையும் உள்ளே பதுக்கி வைப்பதன் மூலம் உளம் பாதிப்புக்கு உள்ளாகின்றது. இதனால் தலைபாரம், சோர்வு என்பனவும் ஏற்பட வாய்ப்புண்டு. இச்சந்தர்ப்பத்தில் சிரிப்பு அவசியம் சிலர் தங்களுடைய தாழ்வுச் சிக்கலை மறைப்பதற்காகவே சிரிப்பை உண்டு பண்ணுபவர்களாக இருப்பார்கள். தம்மை ஒரு ஆளுமை பொருந்திய சிறந்தவராக காட்டிக் கொள்வதற்காக இவ்வாறு இவர்கள் செய்கின்றனர். ஆனால் இத்தன்மையை இவர்களால் தொடர்ந்தும் தக்கவைத்துக்

கொள்ள முடியாமல் போய் விடுகின்றது. இவர்கள் ஆரம்பத்தில் மதிப்பு கௌரவத்திற்கு உரியவர்களாக மதிக்கப்பட்டாலும் இவர்களுடைய கோமாளித்தனமான தன்மை சில காலத்தின் பின் அல்லது சில நாட்களின் பின் தெரிய வருகின்றது. இதனால் இவர்கள் மேல் முன்பு இருந்த மதிப்பு, மரியாதையும், நம்பிக்கையும் படிப்படியாக குறைந்து பிறரால் நகைப்புக்கு உள்ளாக்கப்படுபவர்களாக இருப்பார்கள்.

சிலரைப் பார்த்தால் அடிக்கடி சிரிக்கும் பழக்கம் உடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். சிலரைப்பார்த்தால் நாங்கள் எவ்வளவோ நகைச்சுவை பேசிச் சிரித்தாலும் இவர்கள் சிரிக்காமலே இருப்பார்கள் இவர்களும் விரக்திக்கு உள்ளாக்கிய மனநோயாளிகளாகக் காணப்படுவார்கள். மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளார்ந்த அனுபவங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால்தான் இவர்கள் எடுத்ததெற்கெல்லாம் எந்நேரமும் சிரித்துக்கொண்டு இருக்கும் பழக்கம் உடையவர்களாக காணப்படுவர் அதிகம் மனத்தாக்கத்திற்கு உள்ளானவர்களுக்கு சிரிப்பு மிக அவசியமானதாகும். சிரிப்பு மனநோயை தீர்க்கவல்லது என்பது பலரது கருத்தாகும். இதிலும் நகைச்சுவையோடு சிரித்தால் இன்னும் நன்மையானவையாக இருக்கும். சிரிப்பதனால் அழகான முகமலர்ச்சியாக இருப்பதும் அழகில்லாமல் இருப்பதும் அவரவர் எண்ணங்களைப் பொறுத்தவையாகும்.

சிரிப்பை அடக்கமுடியாமல் வாய்விட்டு வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிப்பதனால் தற்காலிகமாக சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தலை மயக்கம், களைப்பு, தலைவிறைப்பு, வியர்வை என்பன ஏற்படும். ஆனால் இவை சில நேரங்களின் பின்னர் இல்லாமல் போய்விடும் ஆனால் இவை நீண்டகாலம் OR நீண்ட நேர உற்சாகத்தையும் விவேகத்தையும் ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. சிலருக்கு தனியாக இருக்கும் போது கூட சிரிக்கும் பழக்கம் உண்டு. இவ்வாறானவர்கள் அதீக கற்பனை கலந்த எண்ணங்களில் மூழ்கி இருப்பவர்களாக இருப்பார்கள் இவ்வாறு இருப்பது தவறு அல்ல ஆனால் அளவுக்கு அதிகமான நேரத்தை கற்பனையில் கழிப்பதனால் இவர்களுடைய வேலையை குறிப்பிட்ட காலத்துக்குள் செய்ய முடியாமல் போகின்றது. சிரிப்பை சில சந்தர்ப்பத்தில் அடக்க வேண்டிய தேவை இருக்கின்றது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சில உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் போகின்றது சிரிப்பும் அவ்வாறே ஆனால் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அடக்கிய சிரிப்பை வெளிப்படுத்த முயலுவது மிகவும் சிறப்பானதாகும்.

சிரிப்பு உளரீதியாக பிரதானமாக இருவகையான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது அவை. மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவுதல் வேலை செய்யும் போது OR தீர்மானங்கள் எடுக்கும் போதும் வினைத்திறன் ஏற்படுகின்றது. இவை ஆராய்ச்சிகளின் போது கண்ட முடிவாகும். சிரிப்பு எனும் போது நகைச்சுவையாக கதைத்து சிரித்தல் என்பது முக்கிய இடம்பெறுகின்றது. இது இரு விதமாய் அமையும்.

மொழி நடையை மாற்றிக்கதைத்தல் - இதனால் மொழியை சரியாக உச்சரித்து கதைக்க முடியாதவர்கள் அருகில் இருக்கும் போது அதிக பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இத்தன்மை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஏற்பட வேண்டும்.

செயல் வடிவில் கதைத்தல் - இதில் ஊனமுற்றவர்கள் பாதிப்படைய சந்தர்ப்பம் உண்டு இவைகள் பொதுவாக பிறர் பாதிக்காத வகையில் செய்து கொள்ள வேண்டியது இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது.

**திரு.S.ஐங்கரமூர்த்தி (ஆசிரியர்)**
**மட்/வம்மிவட்டவான் வித்தியாலயம்,**
**கதிரவெளி.**

# கிழக்கு மகாண சித்திர மற்றும் குறுநாடகப் போட்டிகள் 2010

## குறு நாடகம்

### எழுத்துப்பிரதி

1ம் இடம் - வே.ஆனந்தராசா, நாகபுரம், பால்சேனை.

2ம் இடம் - இ. ஜெயச்சந்திரன், நாகபுரம், பால்சேனை.

3ம் இடம் - இ.ஜெயராஜா, நாகபுரம், பால்சேனை.

## சித்திரப் போட்டி

### ஆரம்ப பிரிவு

1ம் இடம் - கு.லிகிந்தராஜ், பால்சேனை, GTMS.

2ம் இடம் - நா.ஜமுனாராணி, பால்சேனை, GTMS.

3ம் இடம் - ரா.காகிதமலர், வம்மிவட்டவான் வித்தியாலயம்.

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் - என். புஸ்பரூபன், பால்சேனை, GTMS.

2ம் இடம் - லோ.நாகேந்திரன், பால்சேனை, GTMS.

3ம் இடம் -கா.அனுசியா, வம்மிவட்டவான் வித்தியாலயம்.

### சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் - எகு.யோதீஸ், பால்சேனை, GTMS.

2ம் இடம் - பா.லதா, பால்சேனை, GTMS.

3ம் இடம் -கு.சோவேந்திரன், வம்மிவட்டவான் வித்தியாலயம்.

# தேசிய இலக்கியப் போட்டிகள் - 2010

## கவிதை

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் - நா.பத்மாவதி, மட்/பால்சேனை, GTMS.

2ம் இடம் - க.துதர்சன், மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

3ம் இடம் -அ.நிரோஜினி, மட்/கதிரவெளி விக்னேஸ்வரர் வித்தியாலயம்.

### சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் - ம.அபிராமி, மட்/பால்சேனை, GTMS.

2ம் இடம் - க.சரிதா, மட்/பால்சேனை திருமகள் வித்தியாலயம்.

3ம் இடம் - அ.சுகேந்தினி - மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

## சிறுகதை

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் - பொ.துலாஞ்சலி, மட்/வாகரை மகாவித்தியாலயம்.

2ம் இடம் - பொ.நிலுஜா, மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

3ம் இடம் - வி.செல்வகாந்தினி - மட்/கதிரவெளி விக்னேஸ்வரர் வித்தியாலயம்.

### சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் - செ.டென்மறோஜினி, மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

2ம் இடம் - சி.நவிர்னநாதன், மட்/வாகரை மகாவித்தியாலயம்.

## பாடலாக்கம்

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் - கு.கோபிகா, மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

2ம் இடம் - ஸ்ரீ.சிந்துமதி, மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

3ம் இடம் - வி.டயசினி - மட்/பால்சேனை, GTMS.

### சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் - க.பிரசாந்தினி, மட்/வாகரை மகாவித்தியாலயம்.

2ம் இடம் - யோ.மேனுஜா, மட்/வாகரை மகாவித்தியாலயம்.

3ம் இடம் - யோ.கல்சனா, மட்/வாகரை மகாவித்தியாலயம்.

## கட்டுரை

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் - ம.சுலக்ஷன், மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்.

### சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் - வ.ஜமுனா, மட்/பால்சேனை, GTMS.

## கவிதை

### திறந்த

1ம் இடம் - செ.திருமுகம், மட்/பால்சேனை, கதிரவெளி.

2ம் இடம் -செ.அரிகரன், மட்/பால்சேனை, கதிரவெளி.

3ம் இடம் - ரெ.சத்தியா - மட்/பால்சேனை, கதிரவெளி.

## சிறுகதை

1ம் இடம் - சோ.ரசிகரன், பிரதான வீதி, நாகபுரம், பால்சேனை.

2ம் இடம் - செ.சேனாதிபதி, பால்சேனை, கதிரவெளி.

## பாடலாக்கம்

### திறந்த

1ம் இடம் - செ.திருமுகம், பால்சேனை, கதிரவெளி.

2ம் இடம் - ம.கிருஸ்ணகாந், பால்சேனை, கதிரவெளி.

3ம் இடம் - வி.சுதர்சன், பிரதான வீதி, நாகபுரம், பால்சேனை.

## மேடை நாடகம்


1ம் இடம் - கண்ணா கலை குழு, நாகபுரம், பால்சேனை.

# நன்றிகள்

- வாகை சிறப்பு மலர் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்கிய மட்/ இராமகிருஷ்ண மிசன் சுவாமிகள்.
- வாகை சிறப்புறச் செய்வதற்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்
- வாகை சிறப்பு மலர் வெளியிட ஆலோசனைகளையும் வழி காட்டல்களையும் வழங்கி வாழ்த்துச் செய்தி வழங்கிய பிரதேச செயலாளர்.
- வாழ்த்துச் செய்தி வழங்கிய பண்பாட்டலுவலர்கள் திணைக்கள பணிப்பாளர்.
- இவ் விழா சிறப்புற நடைபெறுவதற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கணக்காளர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பதில் உதவிப் பிரதேச செயலாளர்.
- வாகை மலர் வெளியீட்டிற்கும் விழா சிறப்புறச் செய்வதற்கும் உதவிய **World Vision** நிறுவனம் மற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்கள்.
- போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்ற ஊக்கமளித்த ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் போட்டியில் பங்குற்றிய மாணவர்கள்.
- பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளருடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.
- ஆக்கங்களை வழங்கி மலர் சிறப்புறச் செய்வதற்கு உதவிய அனைவருக்கும்.
- இம் மலரினை குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த மட்/வணசிங்கா அச்சகத்தினருக்கும்.
- கலை நிகழ்ச்சிகளை வழங்கிய கலைக் கழகங்கள்.
- இவ்விழாவில் கலந்து சிறப்பித்த கலைஞர்கள் அனைவருக்கும்.
- மற்றும் தவறவிட்ட அனைவருக்கும்

ப.சிவராம்
கலாசார உத்தியோகத்தர்

**அவர் அவர் ஆக்கங்களுக்கு**
**அவரவரே பொறுப்பாவார்.**



World Vision

வணசிங்கா பிறிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல.0652227170